HEALTH.....*The Wealth of the Nation*



செயல்திறன் மற்றும் முன்னேற்ற அறிக்கை

2016-2017

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

செயல்திறன் மற்றும் முன்னேற்ற அறிக்கை

2016 - 2017

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

தற்பொழுது

சுகதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

எதிர்காலத்தில்

சுகாதார ,போசணை மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் **கௌரவ. டாக்டர். ராஜித சேனாரத்ன**

சுகாதார ,போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் பிரதி அமைச்சர் **கௌரவ.பைசல் காசிம்**

சுகாதார ,போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் **திரு.ஜனக சுகததாச**

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் **டாக்டர். ஜயசுந்தர பண்டார**

பொருடக்கம்

பகுதி 1 - சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து	பக்கம்
1. அறிமுகம்	**03**
2. சுகாதார அமைச்சின் தொலைநோக்கு மற்றும் குறிக்கோள்	**07**
3. 2015 - 2016 ஆம் ஆண்டில் இலங்கையின் சுகாதார துறையின் குறிப்பிடத்தக்க சாதனைகள்	**08**
4. தேசிய சுகாதார விவர அறிக்கை - (தொகுப்பு)	**79**
5. சுகாதார அமைச்சின் நிறுவன கட்டமைப்பு	**83**
6. சுகாதார அமைச்சின் கீழ் திட்டங்கள் அடைவுகள் நிறுவனங்கள் மற்றும் பிரச்சாரங்கள்	**84**
6.1 நோய்க்கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள்	**84 - 108**
6.1.1 தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கம்	84
6.1.2 யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டு இயக்கம்	85
6.1.3 பொது விலங்குச் சுகாதார சேவைகள் (நீர் வெறுப்பு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்)	87
6.1.4 மலேரியா நோய்க் கட்டுப்பாட்டு இயக்கம்	88
6.1.5 காச நோய் மற்றும் ஏனைய சுவாச நோய்களைக் கட்டுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டம்	89
6.1.6 தேசிய புற்று நோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்	91
6.1.7 பாலுறுப்பு சார்ந்த நோய்கள் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டிற்கான நிகழ்ச்சித் திட்டம்	94
6.1.8 தேசிய டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்	102
6.1.9 நிச்சயமற்ற மூலத்தினூடாக தோன்றும் நாட்பட்ட சிறுநீரக நோய்	106

		பக்கம்
6.2	**சுகாதார மேம்பாடும் நோய் பாதுகாப்பும்**	**109 - 131**
6.2.1	தொற்று நோய்க் கற்கைப் பிரிவு	109
6.2.2	கர்ப்பிணித் தாய்மார் மற்றும் சிறுவர் சுகாதார நிகழ்ச்சித் திட்டம்	110
6.2.3	சுகாதார கல்வி மற்றும் மேம்பாட்டுச் சபை	115
6.2.4	உளச் சுகாதார நிகழ்ச்சித் திட்டங்கள்	117
6.2.5	தொற்றாத நோய்கள் நிகழ்ச்சித் திட்டம்	118
6.2.6	சுற்றாடல் மற்றம் தொழில் சார்ந்த சுகாதாரக் கூறு	123
6.2.7	நகர் சார்ந்த மற்றும் பெருந்தோட்டச் சுகாதாரம்	124
6.2.8	தடுப்புக் காப்புச் சேவை	125
6.2.9	இளைஞர்கள், முதியோர், இடம் பெயர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனுடையோர் ஆகியோருக்கான சுகாதார பராமரிப்பு	128
6.2.10	புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபை	129
6.3	**சிகிச்சை சுகாதார சேவைகள்**	**132**
6.4	**போசணைப் பிரிவு**	**134 -142**
6.4.1	போசணை இணைப்பாக்கம் பிரிவு	134
6.4.2	போசாக்குப் பிரிவு	136
6.4.3	திரிபோசா திட்டம்	138
6.5	**வாய்வழி சுகாதார சேவை**	**142**
6.6	**தேசிய இரத்த பரிமாற்ற சேவைகள்**	**146**
6.7	**ஆய்வுகூட சேவைகள்**	**153 -159**
6.7.1	மருத்துவ விநியோகப் பிரிவுகள்	153
6.7.2	தேசிய மருந்து நெறிப்படுத்தல் அதிகாரசபை (NMRA)	154
6.7.3	மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் (MRI)	157

		பக்கம்
7.	உட்கட்டமைப்புகள் அபிவிருத்து	**160 -169**
	7.1 மருத்துவ உபகரணங்கள	160
	7.2 நிர்மாண	165
	7.3 விசேட நிதியதவி வழங்கப்பட்ட திட்டங்கள்	167
	7.4 போக்குவரத்து	168
8.	மனித வள மேம்பாடு	**170**
9.	கூட்டுத்தாபன சபையினால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்கள்	**180 - 188**
	9.1 அரச மருந்தகக் கூட்டுத்தாபனம்	180
	9.2 அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்	181
	9.3 விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை	183
	9.4 ஸ்ரீ ஜயவர்தனபுர பொது மருத்துவமனை	185
10.	தனியார் சுகாமார துறை வளர்ச்சி	**189 -192**

பகுதி II - சுதேச மருத்துவம் பக்கம்

1. அறிமுகம்	**195**
2. சுகாதார அமைச்சின் தொலைநோக்கு மற்றும் குறிக்கோள்	**197**
3. சுதேந மருத்துவத் துறையின் முன்னரிமைகள்	**198**
4. சுதேச மருத்துவப் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்கள்	**200**
5. சுதேச மருத்துவ பிரிவின் முன்னேற்ற நிதி செயற்பாடு	**201**
6. மருத்துவப் பிரிவின் கீழே செயற்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றங்கள்	**203**
7. சுதேச மருத்துவப் பிரிவின் தனவல் தோழில்நுட்ப நுழைவு	**211**
8. ஆயுர்வேதத் திணைக்களம்	**212**
9. இலங்கை ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கூட்டுத்தாபனம்	**243**
10. ஹோமியோபதி மருத்துவ முறை	**249 -254**
10.1 ஹோமியோபதி மருத்துவமனை	249
10.2 ஹோமியோபதி மருத்துவ சபை	252

இணைப்பு

1. தெரிவு செய்யப்பட்ட மருந்து வகைகளின் கூடிய சில்லறை விலைகளின் பட்டியல்	**255**

பகுதி -1

சுகாதாரம், போசணை

செயல்திறன் மற்றும் முன்னேற்ற அறிக்கை

2016 - 2017

1. அறிமுகம்

அரசாங்க சுகாதார சேவையானது அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சர் ஒருவரினால் பிரதி அமைச்சர் ஒருவரின் உதவியுடன் நிர்வகிக்கப்படுகின்றது. 2015 ஆம் ஆண்டிலிருந்து சுதேச வைத்திய பிரிவும் மீளவும் சுகாதார அமைச்சுடன் இணைந்து சுகாதார,போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு என்ற பெயரின் கீழ் 2015 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் தொடக்கம் மேலைத்தேய மருத்துவ துறையின் ஒருங்கிணைந்து அதே அமைச்சரவை அந்தஸ்து உள்ள அமைச்சரின் மேற்பார்வையின் கீழ் இயங்ககுகின்றது.

மக்களின் சுகாதாரத்தினை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியன சுகாதார அமைச்சின் (மத்திய அரசாங்கம்) முதன்மை பொறுப்பாகவும் மற்றும் இதன் பிரதான செயற்பாடுகளாக, கொள்கை வகுத்தல்,மருத்துவம், தாதியியல், மருத்துவ உதவியாளர்களுக்கான கல்வி மற்றும் பயிற்சிகள், போதனா மற்றும் விசேட மருத்துவ நிறுவனங்களின் முகாமைத்துவம் மற்றும் மருத்துவம் மற்றும் ஏற்பாட்டியலுக்கான விநியோக சங்கிலி முகாமைத்துவம் ஆகியவையும் காணப்படுகின்றன.

1989 ஆம் ஆண்டில் மாகாண சபைகள் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் சுகாதார *சேவைகளானது* தேசிய ரீதியாக பொறுப்புள்ள சுகாதார சேவைகள் அமைச்சு மற்றும் ஒன்பது மாகாணங்களுக்குமான தனித்தனியான மாகாண சுகாதார அமைச்சுக்களையும் உருவாக்கியது. ஒன்பது மாகாண பணிப்பாளர்களுக்கும் 25 பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களினால் உதவிகள் வழங்கப்படுகின்றது. ஒவ்வொரு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளும் மேலும் பல மருத்துவ அதிகாரிகளின் கீழ் சுகாதார பிரிவுகளுக்காக பிரிக்கப்பட்டுள்ளதுடன் இப்பிரிவுகள் குறிக்கப்பட்ட பிரதேசத்தில் நோயத்தடுப்பு மற்றும் சுகாதார சேவைகளுக்கு பொறுப்பாக அமைகின்றது.

1957 ஆம் ஆண்டில் சுதேச மருத்துவ திணைக்களம் நிறுவப்பட்டு அதன் ஆணையாளர் பதவிக்கு ஒருவரும் நியமிக்கப்பட்டார். பின்னர் இது சுதேச மருத்துவ திணைக்களமாக மாற்றப்பட்டது. 1961ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க ஆயுர்வேத சட்டத்திற்கிணங்கஇ இலங்கையில் காணப்பட்ட சித்தா,யுனானி, ஆயுர்வேதம் மற்றும் ஏனைய அனைத்து மருத்துவ செயன்முறைகளும் ஆயுர்வேத மருத்துவ துறை என பெயரிடப்பட்டது.
இலங்கை சுகாதார சுட்டிகளின் அடிப்படையில் அளவீடு செய்கையில் அடுத்தடுத்து பதவிக்கு வந்த அரசுகளினால் பிரதானமாக பின்பற்றப்பட்ட இலவச சுகாதாரம் மற்றும் கல்வி உள்ளிட்ட சமூக கொள்கைகளினால் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் சுகாதார நிலையில் குறிப்பிடத்தக்க நிலையினை அடைந்துள்ளது.

செயல்நுணுக்க நோக்கங்கள்

சுகாதார அபிவிருத்தியின் பரந்த திட்டத்தின் பிரதான நோக்கமானதுஇ செயல்நுணுக்க நோக்கங்களை உருவாக்குவதினூடாக சுகாதார நிலையினை மேம்படுத்தல் மற்றும் சமத்துவமின்மையைக் குறைத்தல் என்பவற்றை அடைவதாகும். இவைகள்இ

1. ஆலோசனை, ஒழுக்க மாற்ற சமூகம், சமூக சந்தைப்படுத்தல் மற்றும் சமூக அணித்திரட்டல் ஊடாக சுகாதார மேம்பாடு தொடர்பாக கொள்கை உருவாக்கல் திட்டமிடல் மற்றும் செயல்திட்டங்கள் என்பவற்றிற்கு தொழிநுட்ப ஆலோசனையை வழங்கல்.
2. சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் ஏனைய சுகாதாரம் தொடர்பான பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு சுகாதார செயல்திட்டங்களுக்கு, சுகாதார நடவடிக்கைகளுக்கான ஆலோசனை, ஒழுக்க மாற்ற சமூகம் மற்றும் சமூக அணித்திரட்டல் என்பவற்றினூடாக ஆதரவளித்தல்
3. பல்வேறு அமைப்புகளில் சுகாதார அபிவிருத்தி செயல்திட்டத்தை மேம்படுத்தல், ஆதரவளித்தல் மற்றும் திட்டமிடல் , நிறுவுதல்,கண்காணித்தல் மற்றும் மதிப்பிடலை மேற்கொள்ளல்.
4. வெகுஜன ஊடகங்களினூடாக மக்களுக்கிடையில் சுகாதார பாதுகாப்பு உணர்வினை மேம்படுத்தல்
5. சுகாதார மேம்பாடு மற்றும் ஒழுக்க மாற்ற சமூகம் ஆகியவற்றிற்கு தேவையான ஐஇசி/பிசிசி பொருட்களுக்கு உதவுதல் மற்றும் அபிவிருத்தி செய்தல்
6. ஆலோசனை, ஒழுக்க மாற்ற சமூகம் மற்றும் சமூக அணித்திரட்டல் என்பவற்றினூடாக சுகாதார அபிவிருத்தியாளர்களாக செயற்பட மற்றும் முகவர்களை மாற்றுதல் என்பவற்றிற்காக சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உள்ளே மற்றும் வெளியே ஆள் வலிமை திறனை மேம்படுத்தல்.
7. சுகாதார பிரச்சினைகள் தொடர்பாக கட்டுப்பாட்டை அதிகரித்தல் மற்றும் தனிநபர் மற்றும் சமூக சுகாதாரத்தை மேம்படுத்தல் என்பவற்றை செயல்படுத்த பொதுமக்களுக்கு கல்வி மற்றும் அதிகாரம் அளித்தல்
8. மக்களின் சுகாதாரத்தை மேம்படுத்துவற்கு சுகாதாரம் தொடர்பான அரசாங்கஇ அரசாங்கமற்ற மற்றும் சர்வதேச முகவர்கள் மற்றும் அமைப்புகளுடன் ஒருங்கிணைதல்
9. சுகாதார ஊக்குவிப்பு திட்டங்களை நிர்வகிக்க சுகாதார மற்றும் சுகாதார தொடர்புடைய துறைகளின் நிர்வாக திறன்களை மேம்படுத்தல்.
10. சுகாதார ஊக்குவிப்பு திட்டங்களை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் மற்றும் வேறுபட்ட மட்டங்களில் கண்காணித்தல் மற்றும் மதிப்பிடல் என்பவற்றை எளிதாக்குதல்
11. சமூக மற்றும் சமூக அணித்திரட்டல் நடத்தை மாற்றம் தொடர்பான ஆய்வை மேற்கொள்ளல் மற்றும் ஆதரவளித்தல்

நிலையான அபிவிருத்தி பயணத்திற்கான கட்டம்

"எங்கள் உலகத்தை மாற்றுதல்- 2030. நிலையான அபிவிருத்திற்கான நிகழ்ச்சிநிரல்"

இலக்கு 3. சகல வயதினருக்கும் ஆரோக்கியான வாழ்க்கை மற்றும் சேமநலம் ஆகியவற்றை மேம்படுத்தல் எனும் இலக்குகளை உறுதிபடுத்தல்.

3.1 2030 அளவில் 100,000 பிறப்புக்களுக்கு 70 ற்கும் குறைவாக சர்வதேச தாய் மரண வீதத்தைக் குறைத்தல்

3.2 சகல நாடுகளும் புதிய பிறப்புக்களில் 1000 பிறப்புக்களுக்கு 12 வீதமாக குறைப்பது மற்றும் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 1000 பிறப்புகளில் 25 வீதமாக குறைப்பது என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு 2030 அளவில் புதிய பிறப்புக்கள் மற்றும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் தடுக்கக்கூடிய மரணங்களை தடுத்தல்.

3.3 2030 அளவில், எய்ட்ஸ், காசநோய், மலேரியா மற்றும் புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோய்கள் ஆகிய தொற்று நோய்களை தடுத்தல் மற்றும் ஈரல் அழற்சிபறை, நீரால் ஏற்படும் நோய்கள் மற்றும் ஏனைய தொற்று நோய்கள் ஆகியவற்றை எதிர்கொள்ளல்.

3.4 மனநல சுகாதாரம் மற்றும் சேமநலம் ஆகியவற்றை தடுத்தல், சிகிச்சையளித்தல் மற்றும் மேம்படுத்தல் என்பவற்றினூடாக தொற்றா நோயினால் ஏற்படும் அகால மரணத்தை மூன்றில் ஒரு பங்காக குறைத்தல்.

3.5 போதை மருந்து துஷ்பிரயோகம் மற்றும் தீங்கு விளைவிக்கும் மதுபாவனை உட்பட துஷ்பிரயோகத்தை தடுத்தல் மற்றும் சிகிச்சையளித்தலை வலுப்படுத்தல்.

3.6 2020 அளவில், வீதி போக்குவரத்து விபத்துக்களினால் ஏற்படும் சர்வதேச மரணங்கள் மற்றும் காயமேற்படல் ஆகியவற்றை அரைப்பங்காக குறைத்தல்.

3.7 2030 அளவில், தேசிய செயல்நுணுக்கம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு குடும்பத் திட்டம், தகவல் மற்றும் கல்வி,மற்றும் இனப்பெருக்க சுகாதாரத்தின் ஒருங்கிணைப்பு ஆகியவை உட்பட பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார பராமரிப்பு சேவைகளுக்கு சர்வதேச அணுகுமுறையினை உறுதிப்படுத்தல்.

3.8 நிதி அபாயத்தை பாதுகாத்தல், தரம் வாய்ந்த அத்தியாவசியமான சுகாதார பாதுகாப்பு சேவைகளை அணுகல் மற்றும் பாதுகாப்பு, பயனுள்ள, தரம் வாய்ந்த மற்றும் மலிவான மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை அணுகல் ஆகியவை உட்பட சர்வதேச சுகாதார பாதுகாப்பினை அடைதல்.

3.9 2030 அளவில், அபாயமான இரசாயனங்கள், வளி, நீர் , மண் மாசு மற்றும் தூய்மைமக்கேடு என்பவற்றால் ஏற்படும் மரணங்கள் மற்றும் உடல்நலக்குறைவு எண்ணிக்கைகளை கணிசமானளவு குறைத்தல்

3.a தக்க வகையில் அனைத்து நாடுகளிலும் புகைத்தல் கட்டுப்பாடு மீதான உலக சுகாதார தாபனத்தின் கட்டமைப்பு மாநாட்டை நிறுவுதலை வலுப்படுத்தல்.

3.b பொது சுகாதார பாதுகாப்பு மற்றும் குறிப்பாக அனைவருக்கும் மருந்து அணுகலை வழங்கல் என்பவற்றின் நெகிழ்வுத்தன்மைக்கு இணங்க அறிஞர் சொத்துரிமைகள் தொடர்பான வர்த்தகம் தொடர்பான நோக்கங்கள் மீதான ஒப்பந்தத்திலுள்ள முழு ஏற்பாடுகளையும் பயன்படுத்துவதற்கு அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உரிமைகளை உறுதிப்படுத்தும் டோஹா பிரகடனத்தின் TRIPS ஒப்பந்தம் மற்றும் பொது சுகாதாரத்துடன் பிரதானமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை பாதிக்கும் தொற்று நோய்கள் மற்றும் தொற்றா நோய்களுக்கான தடுப்பூசிகள் மற்றும் மருந்துகள், மற்றும் மலிவான அத்தியாவசிய மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளுக்கான அணுகலை வழங்கல் ஆகியவற்றின் ஆராய்ச்சிக்கு ஆதரவளித்தல் மற்றும் மேம்படுத்தல்.

3.cஅபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் குறிப்பாக குறைய அபிவிருத்தியடைந்த மற்றும் சிறிய தீவுகளின் அபிவிருத்தியடைந்துவரும் அரசுகளில் சுகாதார நிதியிடல் மற்றும் ஆட்சேர்த்தல், அபிவிருத்தி, பயிற்சியளித்தல் மற்றும் சுகாதார தொழிலாளர்களில் வைத்திருத்தல் கணிசமாக அதிகரித்தல்

3.d சகல நாடுகளினதும் குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினதும் இடர் குறைப்பு மற்றும் தேசிய மற்றும் சர்வதேச சுகாதார ஆபத்துக்களை நிர்வகித்தலின் முன்கூட்டிய எச்சரிக்கைக்காக ஆற்றலை வலுப்படுத்தல்

2. சுகாதார அமைச்சின் தொலைநோக்கு மற்றும் குறிக்கோள்

தொலைநோக்கு

எமது பொருளாதார சமூக உள மற்றும் ஆன்மீக அபிவிருத்திக்கு பங்களிப்பினை வழங்கக்கூடிய ஆரோக்கியமான ஒரு தேசம்

குறிக்கோள்

மேம்படுத்தல், தடுத்தல், குணமாக்குதல் மற்றும் புனர்வாழ்வளிக்கும் உயர் தரமான சேவைகளை இலங்கை மக்களுக்கு கிடைக்கச் செய்தல், அணுகச் செய்தல் மூலம் அடையக்கூடிய அதியுயர் ஆரோக்கிய நிலையினை அடைவதன் மூலம் இலங்கையின் சமூக மற்றும பொருளாதாரத்திற்கு பங்களித்தல்

3. 2016-2017 ஆம் ஆண்டில் இலங்கையின் சுகாதார துறையின் குறிப்பிடத்தக்க சாதனைகள்

- **அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு உலக சுகாதார கூட்டுத்தாபனத்தினால் 2016 இல் பொது சுகாதாரத்தின் உயர்விற்காக விருது வழங்கப்பட்டது.**

அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2016 பொது சுகாதாரத்தின் உயர்விற்காக விருதினைப் பெற்றுக்கொண்டார். பொது சுகாதாரத்தில் தனிநபர்களின் சிறந்த தலைமைத்துவம் மற்றும் விதிவிலக்கான சாதனைகள் என்பவற்றை அறிவதற்காக இந்த வருடாந்த விருது நிறுவப்பட்டிருக்கின்றது. பரிசளிப்பின் போது, பொது சுகாதாரத்தில் சிறப்பான உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசியா பிராந்தியங்கள், உ.சு.நி இன் பிராந்திய பணிப்பாளர் டாக். பூனம் கேட்ரபால் சிங் அவர்கள், இலங்கையில் சுகாதார சேவையை வலுப்படுத்தல் குறிப்பாக, புகைப்பிடித்தலை தடுத்தல், மருந்துகள் கட்டுப்பாடு, குடியேறுபவர்களின் ஆரோக்கியம் மற்றும் சிறுநீரக நோய்களின் கட்டுப்பாடு என்பவற்றில் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் விதிவிலக்கான பங்களிப்பிற்காக அவருக்கு இந்த மதிப்புமிக்க விருது வழங்கப்படுகிறது எனக் கூறினார்.

- **இலங்கை மலேரியாவை அகற்றிய நாடு என்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது**



உலக சுகாதார நிறுவனத்தின் தென்கிழக்கு ஆசியா பிராந்தியங்களின் 69 ஆவது பிராந்திய குழுவில் உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டாக். மார்கரட் சான் அவர்களினால் இலங்கை மலேரியாவை அகற்றிய நாடு என சான்றுபடுத்தப்பட்டது மற்றும் அநேகமான நாடுகள் இதனை எதிர்த்துப் போராடுவதை கடினமென கருதும் பொழுது , மலேரியாவை எதிர்த்துப் போராடுவதில் அர்ப்பணிப்பு சேவை மற்றும் தொடர்ச்சியான நடவடிக்கைளை மூலம் இப்பகுதியில் ஒரு முன்னோடியானது. உலக சுகாதார அமைப்பு, இப்பகுதியில் அவசியமான சுகாதார குறிகாட்டிகளுடைய இலங்கையை உருவாக்க உதவும், நோய் தடுப்பு தொடர்பாக இலங்கை சுகாதார சேவையின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பு மற்றும் குறிப்பிடத்தக்க சேவையை பாராட்டியுள்ளது. கொசுக்களை மட்டுமல்லாது அந்நோயை பரப்பும் ஒட்டுண்ணிகளை நோக்குவதால் கொசுக்களுக்கு எதிரான நோய்களைக் குறைக்கும் வெற்றிகரமான மலேரியா எதிர்ப்பு பிரச்சாரத்தை இலங்கை ஆரம்பித்துள்ளது. சுகாதார கல்வி மற்றும் பயனுள்ள கண்காணிப்பு ஆகியவை இப்பிரச்சாரத்திற்கு பங்களித்துள்ளன. உள் நாட்டில் பரவிய தொற்றுநோய் தொடர்பாக பதிவு ஏதும் கடந்த மூன்றரை ஆண்டுகளாக செய்யப்படவில்லை. நாடு திரும்பும் ஒட்டுண்ணிகளை தடுக்க, கண்காணிப்பு மற்றும் திரையிடல் என்பவற்றை பராமரிக்க உள்ளூர் மற்றும் சர்வதேச பங்குதார்ரகளுடன் மலேரியா எதிர்ப்பு பிரச்சாரம் இணைந்து செயல்படுகிறது.

❖ இலங்கை யானைக்கால் நோயை அகற்றிய நாடு என பெயரிடப்பட்டுள்ளது

இலங்கை நுண்ணுயிரியல் விகிதத்தை 1% க்கும் குறைவாக குறைத்து நிணநீர் யானைக்கால் நோயை அகற்றியமைக்காக உலக சுகாதார அமைப்பிடமிருந்து இலங்கை சான்றிதழைப் பெற்றுள்ளது. இலங்கை மற்றும் மாலைத்தீவுகள் தென்கிழக்காசிய பிராந்தியத்தில் முதன்முதலாக யானைக்கால் நோய் அற்ற நாடுகளென அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் நாடுகளாக மாறியுள்ளது. 1947 ஆம் ஆண்டில் இலங்கை யானைக்கால் நோய் தடுப்பு வேலைத்திட்டம் நிறுவப்பட்டது. இந்த பிரச்சாரம் கொசு கட்டுப்பாட்டு முயற்சிகள், பாதிக்கப்பட்ட மக்கள் சிகிச்சை,இயலாமை தடுப்பு மற்றும் கட்டுப்பாடு மற்றும் நிணநீர் யானைக்கால் நோயினால் ஏற்படும் தொற்று மற்றும் அதன் பாதிப்பு என்பவற்றை அகற்றும் கண்காணிப்பை மேம்படுத்தல் ஆகியவற்றை தீவிரப்படுத்தியது. உலக சுகாதார அமைப்பு மற்றும் சர்வதேச பங்குதாரர்களினால் ஆதரிக்கப்பட்ட யானைக்கால் நோய் தடுப்பு வேலைத்திட்டத்தின் தொடர்ச்சியான முயற்சிகள் காரணமாக 2008 ஆம் ஆண்டுக்குள் யானைக்கால் நோய் விகிதத்தை 0.03 ஆக குறைத்து அகற்றும் நிலையை நோக்கிய வேலைக்கு வித்திட்டது. பொது சுகாதார பிரச்சினையான இந் நோயை நீக்குவதற்கு வலுவான அரசியல் அர்ப்பணிப்பு, சுகாதார பணியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் செயலில் சமூக பங்கேற்பு ஆகியவை சில பிரதான கூறுகளாக காணப்பட்டன.

❖ **உலக சுகாதார ஸ்தாபனத்தின் 69 ஆவது தென் கிழக்காசிய பிராந்திய குழு 2016 செப்டம்பர் மாதம் கொழும்பில் நடந்தது**

கௌரவ சுகாதார அமைச்சர் கொழும்பில் நடைபெற்ற 69 ஆவது தென் கிழக்காசிய பிராந்திய குழுவிற்கு தலைமை தாங்கினார். இந்நிகழ்வில் 14 நாடுளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். சுகாதார அமைச்சர் டாக். ராஜித் சேனாரட்ன மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டாக். மார்கரட் சான் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் உலக சுகாதார ஸ்தாபன பிராந்திய பணிப்பாளர் டாக். கேட்ரபோல் சிங் ஆகியோர்கள் உட்பட அங்கத்துவ நாடுகளின் பிராந்திய சுகாதார அமைச்சர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

மலேரியா, யானைக்கால் நோய், போலியோ மற்றும் சிசு ஏற்பு நோய் ஆகியவற்றை வெற்றிகரமாக அகற்றியதால், மற்ற நாடுகளுக்கு இலங்கை உண்மையில் ஒரு முன்மாதிரியாக உள்ளது. உலகிலேயே சிறந்ததான தேசிய நோய்த்தடுப்பு திட்டம், நாட்டில் இலவச சுகாதார திட்டம் என்பன சிறந்தவையாகும்.

கொழும்பில் மிகவும் வெற்றிகரமான நடைப்பெற்ற பிராந்திய குழுவிற்கு வாழ்த்துக்கள். உங்கள் தலைமையாசிரியர் முன்மாதிரியாக இருந்தார்! மிக அரிதாக நாம் திறமை, ஞானம் மற்றும் விதிவிலக்கான தலைமை திறன்களைக் கொண்ட ஒரு சுகாதார அமைச்சரை சந்தித்தோம். நீங்கள் இலங்கையில் சுகாதார துறையை வழிநடத்துவதால் நாம் மிகவும் அதிஷ்டசாலிகளாவோம்."

உலக சுகாதார ஸ்தாபனம் தென் கிழக்காசிய பிராந்திய குழுவின் பிராந்திய பணிப்பாளர் டாக்.பூனம் கேட்ரபோல் சிங்

- **உலக சுகாதார ஸ்தாபனத்தின் 69 ஆவது தென் கிழக்காசிய பிராந்திய குழு வின் உத்தியோகப்பூர்வமான ஆரம்பம்**

உலக சுகாதார ஸ்தாபனத்தின் 69 ஆவது தென் கிழக்காசிய பிராந்திய குழு வின் உத்தியோகப்பூர்வமான ஆரம்பமானது இலங்கை பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களின் ஆதரவின் கீழ் கௌரவ சுகாதார அமைச்சர்,உயர் ஆணையர், தூதுவர்கள், உயர் அதிகாரிகள், மற்றும் உறுப்பின நாடுகளின் புகழ்பெற்ற பிரதிநிதிகள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் தாமரை தடாக தேசிய அரங்கில் இடம்பெற்றது.

- **2017 பெப்ரவரி கொழும்பில் இடம்பெற்ற புலம்பெயர்ந்தவர்களின் சுகாதாரம் தொடர்பான 2 ஆம் சர்வதேச ஆலோசனை**

புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு மற்றும் உலக சுகாதார ஸ்தாபனமத்தின் ஒத்துழைப்புடன் உலகளாவிய ரீதியில் குடியேறுபவர்களின் சுகாதாரத்தை எவ்வாறு மேம்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடுவதன் மூலம் குடியேறுபவர்களின் சுகாதாரம் மீதான 2 ஆவது சர்வதேச ஆலோசனையை இலங்கை கொழும்பில் வழங்கியது. "செயற்பட்டியலை மீளமைத்தல்" எனும் கருப்பொருளின் கீழ் புலம்பெயர்ந்தோரின் நலனை மேம்படுத்துவதற்காக பல்வகைப்பட்ட பேச்சுவார்த்தைகள் மற்றும் அரசியல் உறுதிப்பாட்டிற்கான தளத்தை உறுப்பினர் நாடுகள் மற்றும் பங்குதாரர்களுக்கு வழங்குகிறது. இடம்பெயர்ந்தோருக்கான சர்வதேச ஸ்தாபனத்தின் பிராந்திய பணிப்பாளர் திருமதி.மரியா அபியா மோட்டுஸ், கௌரவ உறுப்பினர் நாடுகளில் சுகாதார அமைச்சர்கள் மற்றும் புகழ்பெற்ற பிரதிநிதிகள் இந்த நிகழ்ச்சியில் கலந்துரையாடினர்.

- **கௌரவ. சுகாதார அமைச்சர் டாக்டர். ராஜித சேனாரட்ன அவர்கள் 2017-2020 ஆம் ஆண்டிற்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிறைவேற்றுக் குழுவில் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்**

உலக சுகாதார ஸ்தாபனத்தால் மூன்று வருட காலத்திற்கு பணியாற்றும் உறுப்பினர் நாட்டின் சுகாதார துறையில் தொழிநுட்ப தகுதி வாய்ந்த 34 அதிகாரிகள் அடங்கிய குழுவை உருவாக்கியது. கௌரவ. சுகாதார அமைச்சர் டாக்டர். ராஜித சேனாரட்ன 2017-2020 ஆம் ஆண்டின் உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிறைவேற்று சபையில் பணியாற்றுவதற்கான உன்னத வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டார். வருகையின் போது அமைச்சர், உலக சுகாதார ஸ்தாபனத்தில் புதிதாக தெரிவுசெய்யப்பட்ட பணிப்பாளர் நாயகம் அமைச்சர் திரு. டத்தோஸ் அதனோம் கேபிரியஸஸ் அவர்களுடன் இருதரப்பு விவாதங்களை மேற்கொண்டார்.

- **டிக்கோயா, ஹட்டன் மாவட்ட பொது வைத்தியசாலையின் புதிய அபிவிருத்தியின் திறப்பு**

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட 1200 மில்லியன் ரூபாய்க்கு நிர்ணயிக்கப்பட்ட, இந்திய பிரதமர் நரேந்திரமோடியினால் பொது மக்களுக்கு உரித்தாக்கப்பட்ட ஹட்டன் டிக்கோயா ஆதார வைத்தியசாலையானது, மூன்று அடுக்கு மருத்துவமனையின் கட்டிடத்தில் 150 படுக்கையறை வார்ட்தொகுதி, மருத்துவ உபகரண பிரிவு,வெளிநோயாளர் பிரிவு,நிபுணர்கள் மையம், சிறப்பு முகாமையாளர் தீவிர சிகிச்சைப் பிரிவு, மகப்பேற்று வார்டு, அவசர சிகிச்சைப் பிரிவு,தொழிலாளர் அறை மற்றும் இரு அறுவை சிகிச்சை தியேட்டர்களையும் மேலும் ஒரு இரத்த வங்கி, தீயணைப்பு உபகரணம் மற்றும் இரண்டு உத்தியோகப்பூர்வ கட்டிடத் தொகுதி மற்றும் ஆதார வைத்தியசாலைக்குத் தேவையான ஏனைய வசதிகளையும் உள்ளடக்கியுள்ளது. சுகாதார அமைச்சர் கௌரவ. டாக்டர். ராஜித சேனாரட்ன அவர்களின் வேண்டுகோளின் பேரில் சனாதிபதி மைத்திறிபால சிறிசேன மற்றும் பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களின் முன்னிலையில் புதிதாக கட்டப்பட்ட ஹட்டன் டிக்கோயா ஆதார வைத்தியசாலை இந்திய பிரதமரால் மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது.

- **பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கத்தின் சுகாதார அமைச்சர்களின் ஆறாவது கூட்டம் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளின் கூட்டம்- கொழும்பு**

பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கத்தின் ஆறாவது கூட்டம் சுகாதார அமைச்சர் கௌரவ ராஜித சேனாரட்ன தலைவரின் கீழ் ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைத்தீவுகள், நேபாள், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய எட்டு உறுப்பு நாடுகளை உள்ளடக்கியுள்ளது. பொது சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகள் பிராந்திய

ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கத்தின் சுகாதார அமைச்சர்களின் ஆறாவது கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

சுகாதார, சமூக மற்றும் பொருளாதார விரிவாக்கத்திற்கும், ஊட்டச்சத்துக்கள் மற்றும் ஒத்துழைப்பு அணுகுமுறைகளை மேம்படுத்துவதற்கும், தொற்று நோய்கள், காவி மூலம் பரவும் நோய்கள், சுகாதாரம், போசாக்கு, காலநிலை மாற்றம் மற்றும் அனர்த்தம், தொடர்பாக பெற்றுக்கொண்ட சுகாதார பிரச்சினைகளின் குறித்த சிறந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், உடல் நலத்திற்கான மனித வளங்களின் வளர்ச்சியில் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளல், ஒவ்வொரு நாட்டிலும் ஒரு பிராந்தியமாக அணுகல், சமபங்கு மற்றும் சுகாதாரத் தரத்தை உறுதிபடுத்தல், கூட்டு பங்குதாரர்கள் மற்றும் ஒத்துழைப்பு மூலம் நிலையான இலக்குகளை அடைவதற்கு இணைந்து பணியாற்றல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு உடன்பட்டதன் பின்னர் கொழும்பின் பிரகடனம் வெளியிடப்பட்டது.

“32% ஆன உலக காசநோய்ச் சுமை இப்பகுதியிலுள்ளதுடன் 1-4% பதிய பிரச்சினைகள் மருந்து எதிர்ப்பைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். காசநோய் மூலம் ஏற்படும் நோய்ச் சுமைகளை குறைப்பதற்கான செயல்நுணுக்கத் தலையீடுகள் கலந்துரையாடப்பட வேண்டியகு மிக முக்கியமாகும். எமது பகுதியில் 1.4 பில்லியன் மக்கள் மலேரியா தொற்றுக்கு உள்ளாகும் ஆபத்திலிருக்கின்றனர். மாலைத்தீவு மற்றும் இலங்கை ஏற்கனவே அகற்றும் நிலையை அடைந்தபோதிலும் இப்பகுதிக்குள் இடம்பெறும் புலம்பெயர்வினால் ஆபத்து காணப்படுகின்றது. *HIV* மற்றும் காசநோய் ஆகிய பல ஏனைய நோய்களும் புலம்பெயர்வினால் பரவக்கூடும். புலம்பெயர்வினால் ஏற்படும் சுகாதார மதிப்பீடுகள் முக்கியானவை என்பதோடு உலகலாவிய பாதுகாப்பை வழங்கும் சூழலில் நாங்கள் கவனிப்பு மற்றும் சிகிச்சை அணுகுவதை எவ்வாறு விரிவுபடுத்துவோம் என்பதும் முக்கியம் பெறுகிறது. இப்பகுதியிலுள்ள பிரதான சுமையாக தொற்றும் நோய்கள் இருந்தபோதிலும்,தொற்றா நோய்கள் வேகமாக அதிகரிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.”

சுகாதார அமைச்சர் கௌரவ ராஜித சேனாரட்ன

❖ மாலைத்தீவு மற்றும் இலங்கைக்கிடையில் இருதரப்பு கலந்துரையாடல்கள்

மாலைத்தீவு சுகாதார அமைச்சர் கௌரவ அப்துல் நசீம் இப்ராஹிம் மற்றும் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ .டாக்டர் ராஜித சேனாரட்ன அவர்களுக்குடையில் இரு நாடுகளிலும் சுகாதார முறைகளை மேம்படுத்துவது தொடர்பாக இருதரப்பு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. மாலைத்தீவுக்கு மருத்துவக் கல்வி , ஆற்றலைக் கட்டியேழுப்புதல், உறுப்பு மாற்று சிகிச்சையின் பிரச்சினைகள் மற்றும் மருத்துவ சுற்றுலா ஆகியவற்றிற்கு உதவுவதற்கான சிறப்பு அக்கறையுண்டு.

❖ மாலைத்தீவில் பிராந்திய ஒத்துழைப்பிற்கான தெற்காசிய சங்கத்தின் சுகாதார அமைப்பின் உலக சுகாதார அமைப்பின் 70 ஆவது அமர்வின் ஆரம்பம்

ஆரம்ப விழாவில் சுகாதார மற்றும் பாராளுன்ற பிரதிநிதிகளுடன் சேர்ந்து சுகாதார அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அதிமேதகு சனாதிபதி அப்துல் யாமீன் அப்துல் கையுமின் சிறப்பு தூதுவர் டாக்டர். மொஹமட் சைனீ அவர்களினால் இவ்விழா உத்தியோகப்பூர்வாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும், இந்நிகழ்வு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர். தெட்ரஸ் அதனோம் கேப்ரியேசிஸ், உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய பிராந்திய பணிப்பாளர் டாக்டர். பூனம் கேட்ரபோல் சிங் மற்றும் கௌரவ சுகாதார அமைச்சர் திரு.இப்ராம் நசீம் ஆகியோரால் தலைமைத்தாங்கப்பட்டது.

"நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் பிராந்தியம் உலக சனத்தொகையில் காற்பகுதியை விடவுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஏறத்தாள 2 பில்லியன் மக்கள் அவர்களின் சுகாதாரத்திற்காக உங்களை எதிர்பார்கின்றார்கள். இது பெரிய சவாலாக இருக்கும் அதே நேரம் அருமையான வாய்ப்பாகும். உங்கள் நாட்டில் சுகாதார முறைகளில் முதலிடுதல் மற்றும் மேம்படுத்துதல் என்பதை விட வேறு எதுவும் முக்கியமல்ல."

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர். தெட்ரஸ் கேப்ரியேசிஸ்

"நாங்கள் முகங்கொடுக்கும் அனைத்து சவால்களும் உண்மையானவை மற்றும் சிக்கலானவை. உலக சுகாதார ஸ்தாபனம், உலக சுகாதார பாதுகாப்பை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாடும் முன்னேற்றத்தை மேற்கொள்கின்றது மற்றும் நாம் முன்னேற்றத்தை அளவிட திறன்வாய்ந்த வழிகளை கொண்டுள்ளோம்"

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தென்கிழக்காசிய பிராந்திய பணிப்பாளர் டாக்டர். பூனம் கேட்ரபோல் சிங்

❖ இலங்கையின் முதலாவது இதய மாற்று சிகிச்சை



இலங்கையின் முதலாவது இதய மாற்று சிகிச்சையானது கண்டி போதனா வைத்தியசாலையில் வெற்றிகரமாக நடைபெற்றது. சிக்கலான 8 மணித்தியால சத்திரசிகிச்சையானது மூன்று இதய அறுவை சிகிச்சை நிபுணர்கள், மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் ஒருவர், இதயநோய் நிபுணர் ஒருவர், அறுவை சிகிச்சை ஒருங்கிணைப்பாளர்கள், மயக்க மருந்து மருத்துவர் *மற்றும் உதவி பணியாளர் தொகுதி ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது. 24 வயதுடைய கொடை வழங்குனரின் இதயம் 12 விகிதம் செயலற்றதான இதயமுடைய 34 வயதுடைய பெண்ணிற்கு மாற்றப்பட்டது. மாற்று அறுவை சிகிச்சை குழு கண்டி போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர். ஆர். எம். எஸ்.கே. ரத்னாயக்கவின் ஆலோசனையுடன், ஆலோசகர் கார்டியோத்தராசிக் அனாஸ்டெஸ்ட் டாக்டர். ஜகதி பெரேரா, இதய அறுவை சிகிச்சை ஆலோசகர் டாக்டர்.அனில் அபேவிக்ரம, இதய அறுவை சிகிச்சை மருத்துவர் முடிதா லன்சகார மற்றும் டாக்டர். ஞானகந்தன், இதய மருத்துவர் டாக்டர். சுனேத்ரா இருகல்பண்டார, மாற்று அறுவை சிகிச்சை மருத்துவர் டாக்டர். பி.கே. ஹரிஸ்சந்திர ஆகியோரை உள்ளடக்கியிருந்தது. கௌரவ சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சக அதிகாரிகளின் குழு அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நோயாளிகளை பார்வையிட வந்தபோது குழுவின் குறிப்பிடத்தக்க மற்றும் வரலாற்று சாதனையை பாராட்டியது.*

❖ இலங்கையின் முதல் கால் மாற்றுச் சத்திர சிகிச்சை

இலங்கையின் முதல் கால் மாற்றுச் சத்திர சிகிச்சை, அநுராதபுர போதனா வைத்தியசாலையின் குருதிக்கலன் மற்றும் அவய மாற்று அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர். ஜோயல் அருட்செல்வம், மயக்க மருந்து ஆலோசகர்கள், மருத்துவ பணியாட்கள் உட்பட மருத்துவ நிபுணர்களின் குழுவினால் வெற்றிகரமாக பூர்த்தி செய்து இலங்கை சுகாதார அவய மாற்றுச் சத்திர சிகிச்சை வரலாற்றில் குறிப்பிடத்தக்க மைல்க்கல்லை உருவாக்கியது. ஒரு விபத்தினால் கடுமையாக சேதமடைந்திருந்த இடது காலை தொடைப்பகுதியிலிருந்து நீக்கியமையினால் 32 வயதுடைய நபருக்கு கால் அவய மாற்றுச் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. இரத்தக்கசிவினால் மூளைச்சாவு அடைந்த 52 வயதுடைய நோயாளியின் இடது கால் 32வயது நோயாளியின் பின்வரும் நாட்பட்ட நோயை சீர்செய்யும் பொருட்டு கால் மாற்று சிகிச்சை நடாத்தப்பட்டுள்ளது.

❖ காசல் வீதி கொழும்பில் சுகாதார அமைச்சுக்கான புதிய கட்டிடம்

கொழும்பு காசல் வீதி வளாக நிலத்தில் ரூபா 3.8 மில்லியன்பெறுமதியான 16 மாடிகளைக்கொண்ட கட்டிடத்திற்காக முன்மொழியப்பட்ட இடத்தில் அடிக்கல் நாட்டு வைபவம் இடம்பெற்றது. கட்டிட நிர்மானப்பணிகள் இரண்டு கட்டங்களாக நிர்மானிக்கப்படவுள்ளதுடன் 1வது கட்டம் 10 மாடிகளைக் கொண்டு நிர்மானிக்கப்படவுள்ளது. காசல் வளாகத்தில் நிர்மானிக்கப்படவுள்ள புதிய கட்டிட நிர்மானப்பணிகள் வழமையான நடவடிக்கைகளைப் பாதிக்காத வகையில் நடாத்தப்படவுள்ளது . வளாகமும் உயர்தரமானதாக தோற்றமளிக்கும் . இக்கட்டிடம் கட்டுவதற்காக நோக்கம் , சுகாதார அமைச்சின் கீழ் உள்ள சகல உத்தயோகத்தர்களையும் ஒரு குடையின் கீழ்க் கொண்டுவருதல் ஆகும்.

❖ இலங்கையின் தேசிய வைத்தியசாலைகளிற்கான புதிய வெளி நோயாளர் பிரிவுக் கட்டிடத்தொகுதி

ஆசியாவிலேயே மிகப் பெரிய வைத்தியசாலையாகவும் ,இலங்கையின் பிரதானமான தேசிய வைத்தியசாலையாகவும் தேசிய வைத்தியசாலையாகளில் நெருக்கடிகளைக் குறைக்கும் நோக்குடனும் ,இலங்கையின் பழைய தேசிய வைத்தியசாலைகளிற்கு மாற்றிடாகவும் 22 மாடிகளைக்கொண்ட புதிய வெ.நோ. பி கட்டிடத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டு வைபவம் நடாத்தப்பட்டது.செயற்திட்டத்திற்காக கிட்டத்தட்ட 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரவுசெலவுக்காக திட்டமிடப்பட்டுள்ளதுடன் சகல வசதிகளையும் கொண்ட புதிய கட்டிடத் தொகுதி தற்போதுள்ள வைத்தியசாலைகளின் வெ.நோ. பிரிவுகளிற்கான மாற்றுத்திட்டமாகவும் உள்ளது. இத்தொகுதியை மூன்றரை வருடங்களிற்குள் கட்டி முடிப்பதற்கும் எதிர்பார்க்கப்பட்டும் உள்ளது .வெ.நோ.பி தொகுதி இரண்டு கட்டங்களாக கட்டப்பட்ட்டுள்ளது . அதில் முதலாவது கட்டம் சீன அரசாங்கத்தின் மானியத்தின் கீழ் 9 மாடிகளைக் ணெடு நிர்மாணிக்கப்படவுள்ள அதேநேரத்தில் மற்றய கட்டம் சின அரசின் இலகுக்கடன் திட்டத்தின் கீழ் கட்டுப்படவும் உள்ளது .நோயாளர் பகுதியை தவிர திணைக்கள தொகுதி 2020 ஆம் ஆண்டளவில் கட்டிமுடிக்கப்படவுள்ளதுடன் ,இது இலங்கை மக்களிற்குத் தரமான வைத்தியசேவைகளை வழங்கக் குடியதாகவும் இருக்கும் எனலாம்.

❖ நெவில் பெர்னான்டோ வைத்தியசாலையின் சொத்து இலங்கை அரசுடைமையுடன்

நெவில்பெர்னான்டோ வைத்தியசாலையின் சொத்துவம் இலங்கை அரசாங்கத்தின் உடைமையின் கீழ் கையளிக்கும்வைபவம் , இடம்பெற்று , புரிந்துணர்வு உடன்படிக்கை இலங்கை அரசாங்கத்தின் சார்பாக சுகாதார அமைச்சின்செயலாளரான திரு .ஜானக சுகததாஸ அவர்களுக்கும் மற்றும் நெவில் பர்ணாண்டோ வைத்தியசாலையின் தாபகர் வைத்தியர்

நெவில்பெர்ணாண்டோ அவர்களுக்கும் இடையில் வைத்தியசாலை வளாகத்தில் மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவர்களின் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கையின் கீழ் நெவில் பெர்னாண்டோ வைத்தியசாலை ஒரு பணிப்பாளர் சபையின் கீழ் சுதந்திரமானதாக நிர்வகிக்கப்படுவதுடன் 2017 ஒகஸ்து 1ம் திகதியில் இருந்து அரச போதனா வைத்தியசாலையாகசெயற்படும் எனவும் தெரிவிக்கவும் பட்டது நெவில் பெர்னாணடே வைத்தியசாலை 2013 ஆம் ஆண்டு ரூபா 3.55 பில்லியன் மதிப்பிட்டளவில் ,ஐந்து ஏக்கர் பரப்பளவில் ,ஒருகட்டிடம் நான்கு மாடி கட்டிடமாகவும் இரண்டாவது எட்டு மாடி கட்டிடத்தில் உயர் தொழில் நுட்ப மற்றும் நவீனவைத்திய வசதிகளைக் கொண்டு நிர்மானிக்கப்பட்டது.

❖ **குளியாப்பிட்டிய ஆதாரவைத்தியசாலையைப் போதனா வைத்தியசாலையாக மாற்றுவதற்காக வயம்ப பல்கலைக்கழகத்தின் வைத்திய பீட தாபனப்பகுதியில் இடம்பெற்று கலந்துரையாடல்**

அரசினால் தீர்மானிக்கப்பட்டகொள்கைகளை நடைமுறைப்படுத்தலின் ஒரு அங்கமாக வயம்பா பல்கலைக்களகத்தில் வைத்திய பீடத்தை நிறுவுதல் தொடர்பான விசேட கரந்துரையாடல் சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் வைத்தியர் இராஜித சேனாரத்தின அவர்களினால் நடாத்தப்பட்டது . திட்டத்தின் பிரகாரம் வயம்பா மாகாண சபையின் கீழ் வரும் குளியாப்பிட்டி ஆதார வைத்தியசாலை அரசினால் கையகப்படுத்தப்பட்டு போதனா வைத்தியசாலையாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது . வயம்பா வைத்திய பீடத்துடன் , சப்பிரகமுவ மொரட்டுவ பல்கலைக்களகங்களிலும் இரண்டுவைத்திய பீடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

❖ **இலங்கையில் அவசர அம்பிலன்ஸ் வைத்திய பராமரிப்புச் சேவை**

இலங்கை அரசு இந்திய அரசுடன் இணைந்து முன் வைத்தியசாலைவைத்திய பராமரிப்பு அம்பியுலன்ஸ் சேவை , தனியா அரச பங்களிப்புடனான இந்தியாவின் ஜிவிகே , அவசர முகாமைத்துவ & ஆராய்ச்சி நிறுவனத்துடன் சேர்ந்து இலங்கை மக்களின் அவரச முன் - வைத்தியசாலை வைத்திய பராமரிப்பு தேவைகளை நிறவேற்றி வருகின்றது.

- **சீன அரசின் ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் நீண்டகால சிறுநீரக நோய் (CKDU) காரணம் பற்றிய ஆய்வுகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடல்**

சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சுக்கும் சீன அக்கடமி ஒவ் சயன்ஸ் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது . இப் பரிந்துணர்வு ஒப்பந்தம் ,அறியப்படாத மூலத்தில் இருந்து நீண்ட நாள் சிறுநீரக நோய்க்கான காரணிகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகளை மேலும் மேற்கொள்வதனை மையப்படுத்தியது . புரிந்துணர்வு ஒப்பந்தம் வைத்தியர் இராஜிய சேனாரத்தின அவர்களிற்கும் சீன சயன்ஸ் அக்கடமியின் துணைத்தலைவர் பேராசிரியர் செங்லி டிங் அவர்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. நீண்ட நாள் சிறுநீரக நோய்க்கான முழு ஆய்விற்குமாக அமெரிக்க டொலர் 3 மில்லியன்களிற்குமேலாக மதிப்பீடும் செய்யப்பட்டுள்ளது. இலங்கையின் 12 மாவட்டங்களில் , குறிப்பாக வடமத்திய மாகாணத்தில் ஆக்கூடுதலாக சிறுநீரகப் பாதிப்பு க்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளவை ஒரு பாரிய சுகாதார பிரச்சனையாக இருப்பதுடன் ,இந்த நீண்ட நாள் சிறுநீரக நோய்க்கான மூல காரணங்களும் ஐயுறவுற்றனவாகவே காணப்படுகின்றன . இதன்பெறுபேறாக பல மனித உயிர்கள் இழக்கப்படுவதுடன் , இவ்வுயர்வான நோய் பரவுகை விதம் பாதிப்புக்குள்ளான மாவட்டங்களில் வாழும் மக்கள் சமூகத்தில் ஒரு பாரிய அனர்த்தம் ஏற்படவிருக்கின்றதான ஒரு நிலைமையும் தோற்றுவித்துள்ளது எனலாம் . அத்துடன் வருடங்களிற்கு மேலாக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதற்கான மூலகாரணம் இன்னமும் அறியப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது புரிந்துணர்வு ஒப்பந்தம் நீண்ட நாள் சிறுநீரக நோய்களைத் தடுத்தல் மற்றும் நோய்களைக் குணப்படுத்தல் தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக இலங்கை சுகாதார பராமரிப்பு ஆளணியினர்களது செயலாற்றுகளைக் கட்டி எழுப்புவதற்கான ஆலோசனைகளையும் வழங்கும் ஒப்பந்தம் நீண்ட நாள் சிறுநீரகநோக்கான உயிரியல் காரணிகளைக் கண்டுபிடிப்பதற்கான உயிரியாளர்களை ஆய்விற்குத் தூண்டுதல் , சிறுநீரகம் தொடர்பான நோய்களைவிக் கொண்டுவருதல் மற்றும் இதுதொடர்பான புள்ளிவிபரங்களை இற்றைப்படுத்தல் என்பன இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஏனைய முக்கிய விடயங்களாகும்.

நோய்நிவாரண சுகாதாரத்துறையின் பாரிய அபிவிருத்தி

❖ **யப்பானிய உதவியுடன் கல்கமுவ ஆதார வைத்தியசாலையை நவினமயப்படுத்தல்**

பொது மக்களிற்கான சிறந்த சேவையை வழங்கும் பொருட்டு ரூபா 741 மில்லியன்கள் செலவிலான ஒரு கருத்திட்டம் செயற்படுத்தப்பட்டு கல்கமுவ வைத்தியசாலையை பூரணமான ஆதாரவைத்தியசாலையாக மாற்றுவதற்கான வேலைத்திட்டம் அபிவிருத்திசெய்யப்பட்டது . இப்புதிய கட்டிடத்தொகுதியுடன் , ஆதார வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவு ,சிறுவர் பிரிவு , அவசர பராமரிப்புப் பிரிவு, வெளிநோயாளர் திணைக்களம் , விபத்துப் சேவை , சிகிச்சைப் பிரிவு என்பனவற்றுடன் தரம் உயர்த்தப்பட்டுள்ளது . யப்பானிய அரசின் உதவியுடன் கல்கமுவ ஆதார வைத்தியசாலை கட்டிடத்தொகுதி மிளவும் அதிமேதக ஜனாதிபதி மைத்திரிபால சீறிசேன அவர்கள் மற்றும் யப்பானிய தூதராலய ஆலோசகர் / பிரதித் தலைவர் திரு கோஷி ஜாஜி அவர்களின் துணையாதரவுடனும் சுகாதர அமைச்சர் வைத்தியர் இராஜிதசேனாரத்தின அவர்களின் பங்குபற்றுதலுடன் திறந்துவைக்கப்பட்டது . யப்பானிய அரசு 3,935 யப்பானிய ஜென்களை (ஏறக்குறைய ரூபா 5,232 மில்லியன்)ஜெக்கா கருத்திட்டத்தின் மேல் எழுந்து வரும் பிரதேசங்களை குறியிலக்காகக்கொண்ட சமூகங்களின் அடிப்படைத்தேவைகளை முன்னேற்றல் எனும் கருப்பொருள் திட்டத்திட்டத்திற்கு வழங்கியது இக் கருத்திட்டம் இலங்கையில் உள்ள 4 இரண்டாந்தர வைத்தியசாலைகளிற்கு தொற்றாநோய்களை ஆரம்பத்திலேயே நிர்ணயம் செய்தல் , சிகிச்சை மற்றும் முன் பாதுகாத்தல் போன்றனவற்றிற்கான வசதிகளையும் உபகரணங்களையும் வழங்குதலைநோக்கமாகக்கொண்டது.

❖ ***தெல்தெனிய ஆதார வைத்திய சாலையில் புதிய கட்டிடத்தொகுதியை திறத்தல்***

தெல்தெனிய ஆதார வைத்தியசா யின் நவீன வசதிகளைக் கொண்ட ஒரு புதிய கட்டிடத்தொகுதி மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால ஸ்ரீ சேன அவர்களின் இணை ஆதரவுடன் திறந்துவைக்கப்பட்டுள்ளது . இது யப்பானிய அரசிற்கும் இலங்கை அரசிற்கும் இடையிலான ஜெக்கா திட்டத்தின் கீழ் சுகாதாக அமைச்சின் நோக்கெல்லையின் பெறுபேறாகவுள்ளது . இதுஜெக்காத் திட்டத்தின் மேல் எழுந்து வரும் பிரதேசங்களின் அடிப்படை சமூகதேவைகளை முன்னேற்றல் என்பதைனைக் குறியிலக்காகக்கொண்ட கருத்திட்டத்தின் ஊடாக 4வைத்தியசாலைகளை மேம்பாட்டையச் செய்வனவற்றுள் ஒன்றாகும் .வைத்தியசாலை மத்திய மாகாண சமுதாயத்தின் சுகாதாரப் பராமரிப்பு தரத்தை உறுதிசெய்யும் வகையில் சத்திர சிகிச்சைத்தொகுதி ,அவசரவைத்திய பராமரிப்பு , சட்ட வைத்திய அலுவலகப் பிரிவு மற்றும் நவீன உயிரியல் வைத்திய உபகரணங்களையும் உள்ளடக்கிய 5 மாடிகளைக்கொண்ட கட்டிடமாகப் புதுப்பொலிவுபெற்றுக் காணப்படுகின்றது.

❖ ***வரக்காப்பொலவில் ஆதார வைத்தியசாலைக்கான புதிய 6 மாடிக் கட்டிடத்தைத் திறத்தல்***

வரக்காபெல ஆதார வைத்தியசாலையில் புதிதாகக் கட்டப்பட்ட 6 மாடிகள் சிகிச்சைக் கட்டிடம் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன அவர்களின் இணை ஆதார வுடனும் சுகாதார மைச்சர் வைத்தியர் இராஜித சேனாரத்ன அவர்களின் பங்குபற்றுதல் வைபவத்தன்று பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டது புதிய கட்டிடத்தொகுதி ரூபா 1103 மில்லியன்கள் செலவில் சத்திரசிகிச்சைப் பிரிவு ,அதிதீவிர சிகிச்சை பிரிவு மற்றும் சிசு பராமரிப்பு அதிதீவீர பிரிவு என்பவற்றைக்கொண்ட ஒன்றாகும். இதுவும் ஜெக்கா திட்டத்தின் மேல் எழுந்து வரும் பிரதேசங்களின் அடிப்படை சமூகதேவைகளை முன்னேற்றல் என்பதனைக் குறுயிலக்காக்கொண்ட கருத்திட்டத்தின் ஊடாக 4 வைத்தியசாலைகளைமேம்பாட்டையச் செய்வனவற்றுள் ஒன்றாகும்.

❖ புதிய தேசிய பற்போதனா வைத்தியசாலையை திறத்தல்

இலங்கையின் முதலாம் தேசிய பற் போதனா வைத்தியசாலை அதிமேதகு ஜனாதிகதி மைத்திரிபால சிறீசேன அவர்களின் முன்னிலையில் சுகாதர அமைச்சர் வைத்தியர் இராஜித சிறீசேன மற்றும் பிரதி சுகாதார அமைச்சர் பைசல் காசிம் அவர்களது பங்குபற்றுதல்களுடன் பிரகடனம் செய்து வைக்கப்பட்டது . புதிய வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு , அவசர சிகிச்சைப் பிரிவு , 4 வாய் மற்றும் தடை சத்திர சிகிச்சைப் பிரிவு , 2 பற்சீரமைப்புப் பிரிவு , பல் நேர்வரிசைப் படுத்தற் பிரிவு , வாய்ச் சுகாதாரமேம்பாட்டுப் பிரிவு ,32 கட்டில்களைக் கொண்ட கொண்ட ஆண் ,பெண் வாட்டுத்தொகுதி , 3 சத்திரச் சிகிச்சை தியேட்டர்கள் ,வாய்நோய் பிரிவு ,2 ஆய்வு கூடல்கள் ,கோன் பீம் CT - ஸ்கானர்கள் , (இலங்கையின் தற்போது கிடைக்க்க் கூடிய ஒரே ஒரு இயந்திரம்) முழுவதும் கண்ணிமயப்படுத்தப்பட்ட எக்ஸ்ரேப் பிரிவு , தரவுகள்சேகரிப்புப் பிரிவு மற்றும் முழுவதும் கண்ணிமயப்படுத்தப்பட்ட அனுமதி முறைமைகளை உள்ளடக்கிள்ளது.

❖ மஹரகம அபெக்ஷா வைத்தியசாலையில் ரசவி வைத்திய கட்டிடத்தொகுதியை கையளிக்கும் வைபவம்

மஹரகம அபெக்ஷா வைத்தியசாலையில் ரசவி வைத்திய கட்டிடத்தொகுதியை இலங்கை மக்களிற்குக் கையளிக்கும் வைபவம் , இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களால் மற்றும் சுகாதார அமைச்சர் கௌரவ இராஜிதசேனாரத்ன மற்றும் லண்டன் அஹமட் தேயிலை நிறுவனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர் றஹிம் அஸ்ரவ் அவர்களது பங்குபற்றுதல்களுடன் இடம்பெற்றது . 7 மாடிகளைக்கொண்ட கட்டிடத்தொகுதி 350 புற்றுநோய் நோயாளிகளிற்கு சிகிச்சையளிக்கக் கூடிய வகையில் சுகாதார அமைச்சுடன் இணைந்து தனிப்பட்ட

அன்பளிப்பாளரான லண்டன் தேயிலை நிறுவனத்தின் அதிகாரி அஹமட் அவர்களால் அன்பளிக்கப்பட்ட தாகும். இக் கட்டிடம் இலங்கை மக்கள் மீதான கரிசனைக்கான ஒரு மனமார்ந்த அடையாளமாக்கட்டப்பட்ட ஒன்றாகும் அஹமட் தேயிலை லிமிடெட் இலங்கை அரசின் பங்குபற்றுதலுடன் இந்த புற்றுநோய் சிகிச்சை வைத்தியசாலையை அன்பளிப்புச்செய்துள்ளது.

- **ஹம்பாந்தோட்டை மாவட்டபொது வைத்தியசாலையில் புதிய கட்டிடத்தொகுதி**

ஏறக்குறைய ஒரு மாடி 30,000.00 சதுரபரப்பளவைக்கொண்ட முன் - சட்டக கட்டுமானப் பணிகளைக் உள்ளடக்கியதான பணிகளை உள்ளடக்கியுதாகவுள்ளது . 850 கட்டிடங்களைக்கொண்ட வைத்தியசாலை 8 சத்திர சிகிச்சை தியேட்டர்கள் , அவசர சிகிச்சைப் பிரிவு ,வெளிநோயாளர் பிரிவு , ஏனைய சிகிச்சைகள் மற்றும் சகல துணமையான வசதிகளைக்கொண்டிருக்கும்
.

- **யாழ்ப்பாணப்போதனாவைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவைத் திறந்து வைத்தல்**

புதிய வெளிநோயாளர் பிரிவு கட்டிடம் கௌரவ வைத்தியர் இராஜிதசேனாரத்தின அவர்களின் முன்னிலையிலும் உள்ளூர் அரசியல்வாதிகள் மற்றும் மதிப்புக்குரிய தலைவர்களின் பங்குபற்றுதல்களுடன் திறந்து வைக்கப்பட்டது . இது யாழ்ப்பாணப்போதனா வைத்தியசாலையால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் வசதி

வாய்ப்புக்களை மேலும் விரிவாக்குவதாக அமைவதுடன் வடமாகாணத்தின் முன்னிலையான வைத்தியசாலையாகவும் மிளிரச்செய்யும் எனலாம்.

- **இரத்தினபுரி மாகாணபொது வைத்திய சாலைக்கான புதிய சிறுவர் விடுதித் தொகுதி**

இரத்தினபுரி மாகாண பொது வைத்தியசாலையில் ரூபா .300 மில்லியன்கள் செலவில் புதிய சிறுவர் வாட்டு கட்டிடத்தொகுதி கட்டப்பட்டு , அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன அவர்களினால் பொதுமக்களிற்குக் கையளிக்கப்பட்டது.

- **அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையில் கட்டணம் செலுத்தும் வாட்டு கட்டிடத்தொகுதியை நிறுவுதல்**

ஒரு புதிய கட்டணம்செலுத்தும் கட்டடத்தொகுதி உட்பட , ரூபா 300 மில்லியன்களிற்கும் மேலாலான பெறுமதியுடன் அம்பாறைமாவட்டப்பொதுவைத்தியசாலையின் அபிவிருத்தி வேலைகள்செய்யப்பட்டு சுகாதார , சத்துணவு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ ராஜித சேனாரத்ன திறந்துவைக்கப்பட்டது

- **இலங்கையின் இரண்டாவது தேசிய வைத்தியசாலையாக கண்டிப் போதனா வைத்தியசாலையை அபிவிருத்திசெய்தல்**

கண்டிப்போதனா வைத்தியசாலை அபிவிருத்தி செய்யப்பட்டு ,நாட்டின் இரண்டாவது தேசிய வைத்தியசாலையாகப் பிரகடணம்செய்யப்படும் இதனது உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய பாரிய அபிவிருத்தி வேலைகள் சுகாதார அமைச்சர் கௌரவ வைத்தியர் இராஜித சேனாரத்ன அவர்களது வேண்டுகோலிற்கு இணங்க அடுத்தவருடம் அளவில் முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

- **கொழும்பு டீசொய்சா மகப்பேற்றுவைத்தியசாலைக்கான நவீன சிசு மருத்துவ நிலையம்**

சுகாதார அமைச்சின் செயலாளர் திரு .ஜானக சுகத்தாஸ அவர்களிற்கும் ஐடியல்மெடிக்கல் புறடக்ட் என்ஜினியரிங் ஒப் பிரான்ஸ் நிறுவனத்தின் துணைத்தலைவரிற்கும் இடையில் சுகாதார , சத்துணவு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ வைத்தியர் ராஜித சேனாரத்ன அவர்களின் முன்னிலையில் கொழும்பு டீசொய்சா மகப்பேற்று நவீன சிசு நிலையக் கட்டுமான மற்றும் உபகரணங்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இது இலங்கை ரூபா 26 மில்லியன்கள் முதலீட்டில் 30 மாதங்களிற்குள் செய்து முடிக்கப்படவுள்ளது.

❖ காலிக்கான புதிய தாதியர் பாடசாலை

காலியில் 555 மில்லியன்கள் செலவில் ஒரு புதிய தாதியர் பாடசாலையைக் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது . இக்கட்டிடம் நிர்வாகப்பிரிவு மற்றும் ஆய்வுகூட வசதிகளை உள்ளடக்கிய 5 மாடிக்கட்டிடம் ஆகும்.

❖ இலங்கையில் எலும்பு மச்சை மாற்று சிகிச்சை வசதிகளை நிறுவுதல் - புதிய அபிவிருத்தி

தலசீமியா நோயாளிக்காக கண்டி போதனா வைத்தியசாலையில் எலும்பு மச்சை மாற்று சிகிச்சை நிலையத்தை ரூபா 856.9 மில்லியன்கள்செலவில் நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை வழங்கியுள்ளது .குருநாகல் ,கொழும்பு கம்பஹா , அராதபுரம் ,பதுளை ,அம்பாறை , கண்டி போன்ற மாவட்டங்களில் பல தலஸ்சேனியா 33 நொயாளிகள் அடையாளம் காணப்பட்டமையானது , இப்பிரிவை நிறுவுவதற்கான அவசியத்தை ஏற்படுத்துள்ளது. இதற்கான மும்மொழிவை சுகாதார , சத்துணவு மற்றும் மரபுரிமைவைத்திய அமைச்சர் கௌரவ வைத்தியர் இராஜிதசேனாரத்ன அவர்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார் . தற்பொழுது மஹரகம அபேக்ஷாவைத்தியசா யில் எலும்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது . எதிர் காலத்தில் கொழும்பு சீமாட்டி றிஜ்வே வைத்தியசாலையில் சிறுவர்களிற்கான எலும்பு மச்சை மாற்று சத்திர சிகிச்சை ஆரம்பிக்கப்படவுள்ளது.

- **இலங்கைதேசிய வைத்தியசாலையின் நரம்பியல் சத்திர சிகிச்சைப் பிரிவில் உயர்தொழில்நுட்ப உபகரணங்களை (பைபிளேன் அஞ்ஜியோ கிறாவிமெசின் + ஒ - ஆம் நவகேஷன் சேஜிகல் இமேஜிங் சிஸ்ரம்) நிறுவுதல்**

நாளங்களில் உறை குருதி அடைப்பைக் கண்டுபிடித்தல் முதல் தடவையாக அரச வைத்தியசாலைகளில் இந்த வசதிகள் முதல் தடவையாக நிறுவப்பட்டன

- **இலங்கையின் தேசியவைத்தியசாலையில் புதிய MRI இயந்திரத்தைப்பொருத்துதல்**

சுகாதார , சத்துணவு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்கௌரவ வைத்தியர் இராஜிதசேனாரத்ன அவர்களினால் புதிய MRI இயந்திரம் தாபிக்கப்பட்டது . இயந்திரம்மேலும் நோய்களை சிறு எல்லைப் பரப்பில் நிர்ணயம்செய்யும் தன்மையின்மேம்பாடானது நோயாளியின் கவனிப்பை தேசிய மட்டத்தில் அதிகரிக்கச் செய்வதுடன் நோயாளர் வைத்தியசாலையில் தங்கியிருக்கும் நாட்களையும் குறைக்கும் எனலாம் . ஒருநோயாளிக்கான MRI ஸ்கானிற்கானசெலவு கிட்டத்தட்ட 12,000 ரூபாய்களாக இருக்கும் அதே வேளை இச்சேவை கட்டணம் இன்றியே வழங்கப்படுகின்றது .முன்பு அறிக்கைப்படுத்தலிற்காக கணிப்பீடுசெய்யப்பட்ட நேரம் 57 நிமிடங்களாகும். இது டிஜிற்றல் முறையாக்கப்பட்ட பின்பு 03 நிமிடங்களிற்கு குறைக்கவும் பட்டுள்ளது.

- **ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் கொறநெறி அஞ்ஜிகிறாம் வசதிகளைத் தாபித்தல்**



முதலாவது காடியோஞறி எர்ஜியோகிராம் (நெஞ்சுப்பையை சுற்றிய குருதியோட்டம்) இயந்திரம் முதல் தடவையாக ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பொது வைத்தியசா யின் 2வது உயர் பிலிப்ஸ் கத்- லாப்பில் சிரேஸ்ட இதலியல் நிபுணர் வைத்தியர் நயமாலி லாலினி அமரசேன அவர்களினால் இயக்கப்பட்டு அலுவலக ரீதியாக சுகாதார அமைச்சர் கௌரவ வைத்தியர் இராஜித சேனாரத்ன அவர்களினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

- **நோய் நிர்ணய ஆய்வுகூடம் தாபித்தல்**

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பொது வைத்தியசாலையில் நவீன உயர்தொழில்நுட்ப நோய்நிர்ணய வசதிகளைக் கொண்ட புதியநோய் நிர்ணய ஆய்வுகூடம் வைபவ ரீதியாக திறந்துவைக்கப்பட்டது .இச்சேவைகளை மேலும் விஸ்தரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது

❖ இலங்கையின் தேசிய வைத்தியசாலையில் ஆய்வுகூட தகவல் மற்றும் வலையமைப்பு முறைமையைத் தாபித்தல்

இலங்கையின் தேசிய வைத்தியசாலையும் நாட்டின் மிகப்பெரிய வைத்தியசாலையில் சுகாதார , சத்துணவு மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் கௌரவ வைத்தியர் ராஜிதசேனாரத்ன அவர்களினால் ஆய்வுகூட தகவல் மற்றும் வலையமைப்பு முறைமை ஆரம்பித்துவைக்கப்பட்டதுடன் இவ்வாட்டுகள் மற்றும் பிரிவுகள் மூலம் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்கள் மூலம்நோயாளி பற்றிய தகவல்களை சரியாகவும் ,தரமானதாகவும் எந்த வித காலதாமதமும் இன்றி விரைவாக அறிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

❖ இலங்கை தேசிய வைத்தியசாலைகளின் விபத்து மற்றும் அவசரசேவைகளிற்கு ஈ -கெல்த் கருத்திட்டத்தை அறிமுகம்செய்தல்

இலங்கையின் தேசிய வைத்தியசாலைகளின் விபத்து மற்றும் அவசரசேவைகளிற்குதேசிய ஈ-கொல்த் கருத்திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டது . இது அரச வைத்தியசாலகைளில் இருந்து சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளும்நோயாளிகள் விபரங்களை எலெற்றோனிக் ஆரோக்கிய பதிவேடுகள் மூலம்பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதுடன் மேலும் விசேட ஈ -கெல்த் அட்டைகளிற்கு விரிவுபடுத்துவதுடன் வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் வருகை மற்றும் சிகிச்சை விபரங்களும் உள்ளடக்கப்படவும் முடியும்.

- **உள்ளூரில் உற்பத்திசெய்யப்பட்ட பற் சிகிச்சை கதிரையை ஊக்குவித்தல்**

உள்ளூரில் யாழ்ப்பாணதொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்பட்ட பற்சிகிச்சைக் கதிரை சுகாதார போசனை மற்றும் சதேச வைத்திய அமைச்சினால் பரிசிக்கப்பட்டு , அது நன்றாக செயற்பட்டு தரமானதாகவும் காணப்படுகின்றது .வெளி நாட்டில் இருந்து இறக்குமதிசெய்யும் ஒரு கதிரையின்பெறுமதிக்கு , ஊள்ளுர் கதிரைகள் 05 பெற்றுக்கொள்ள முடியும்.

தொற்றாநோய்களை வரு-முன்- தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் (NCDs)

- ஐக்கிய நாடுகள் சபையின் சமூக -பொருளாதார மன்றத்தின் கீழ் இலங்கையில் தொற்றாநோய்களை முன் - தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

ஐக்கிய நாடுகள் சபையின் ஐ.நா சபையின்பொருளாதார மற்றும் சமூக மன்றதின் 6கொள்கை உறுப்புரையில் ஒன்றான இதன்பொறுப்பின் கீழ் ஐ.நா சபையின் 15 முகவர்கள்பொருளாதார சமூகம்தொடர்பான பணிகளைச்செய்வதற்கு 5 பிராந்திய ஆணைக்குழுக்கள் உள்ளன . இப்பொறுப்பின் கீழ் ஐ.நா. சபையின்பொருளாதார சமூக மன்றம் இலங்கையில் தொற்றுநோய்களை முன் -தடுத்து , மற்றும் கட்டுப்படுதும் திறமுறைகளைக்மேற்கொண்டு வருகின்றது

❖ தொற்றாநோய்களின் இடர் -வரவுக் காரணிகள் பற்றிய ஆய்வு அறிக்கையை வெளியிடுதல் (உலக் சுகாதார தாபனத்தின் கலனக்கண்காணிப்பு STEPS

நாட்டின் புகையிலைப் பாவனை ,ஊட்டமுறை , உடற்செயற்பாடுகளினால் தொற்றாநோய்களிற்கான பிரதான காரணிகளை ,தற்போதைய நிலைமைகளை வைத்து ஆய்வுசெய்து திட்டமிடல் , எதிர்கால இலங்கை மக்களை ஆரோக்கியமானவர்களாக்குவதற்கு முக்கியமானதாகின்றது . இந்த தொற்றாநோய்கள் பற்றிய ஆய்வின் பெறுபேறுகள் பிராந்திய நிலைமைகள் மற்றும் உலகளாவிய நிலைமைகளை ஒப்பிட்டு நோக்கித் தரமான ஒரு முறைமையைப் பின்பற்றுவதற்கு , இந்த உ.சு. நிறுவனத்தின் கவனக்கண்காணிப்புப் படிமுறைகள் சந்தர்ப்பத்தை வழங்கும் எனலாம்.

❖ இலங்கைதொற்றா நோய்கள்தொடர்பான உத்தியோகபூர்வ இணையத் தளத்தை திறந்து வைத்தல்



தென்- கிழக்கு ஆசியாவிற்கான உலக சுகாதார பிராந்திய குழுவின் அறுபத்தொன்பதாவது கூட்டத்தொடரிற்கு முதல் நாளில் ,தென் - கிழக்கு ஆசியாவின் முதலாவது தொற்றா நோய்தொடர்பான வலைத்தளத்தைதொடக்கிவைத்துள்ளது . இலங்கையில் தொற்றா நோய்தொடர்பான வலைத்தளம் இலங்கையின் சுகாதார அமைச்சர் கௌரவ வைத்தியர் இராஜித சேனாரத்ன தென் -கிழக்காசிய உலக சுகாதார நிறுவனத்தின் பிராந்திய பணிப்பாளர் பூனம்ஹெட்டபல் சிங் , மற்றும் எமரயிற்சின் மற்றும் பான் அமெரிக்கன் சுகாதார அமைப்பின் பணிப்பாளருமான சேர்.ஜோஜ் லெயன்ஸ் ஆகியோரினால் திறந்துவைக்கப்பட்டது.தொற்றாநோய்தொடர்பான வலைத்தள உருவாக்கம் ,தொற்றாநோய்தொடர்பான உலகளாவிய செயற்பாட்டுத் திட்டத்தின் ஒரு முன் மாதிரியான

சிபார்சாகவும் இருப்பதுடன் தொற்றுநோய் நிகழ்ச்சித்திட்டத்தை நாட்டில் முன்னிலைப்படுத்தும் போது , இது துணைச் சாதனமாகப் பங்களிப்பைச்செய்யும் எனலாம் . இலங்கையில் தொற்றாநோய்களின் அதிகரித்த வளர்ச்சியின் நிமித்தம் காரணமாக கவும் ,நாட்டின் இறப்புகளில் 75% ஐ இந்நோய்களின் மூலமாக ஏற்படுவனவாக இருப்பதன் காரணமாகவேதொற்றாநோய் வலைத்தளம் உருவாக்கப்பட்டதாகும்.

❖ சீனிச்செறிவூட்டப்பட்ட மற்றும் இனிப்பூட்டப்பட்டமென்பானங்களை குறைத்தல் தொடர்பான அறிக்கை

இனிப்புச் சுவையூட்டப்பட்ட பானங்களின் பாவனையால் சிறுபராயத்தினரதுகொழுப்புச் சத்து மட்டம் அதிகரிப்பதற்கான முக்கிய காரணியாக , உலகளாவிய ரீதியில் நாடுகளிற்கிடையே அடையாளம் காணப்பட்டு அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளது. சீனியை சுதந்திரமாக உட்கொள்ளுகை ,விசேடமாக இனிப்புச் சுவையூட்டப்பட்ட பான வடிவங்கள் உட்கொள்ளுவதன் மூலம் சிறுவர் மற்றும் வயதுவந்தவர்களது நிறை அதிகரிப்பதற்கு காரணமாகின்றன என்பது ஆதாரபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அறிக்கை சுதந்திரமாகச் சீனி உட்கொள்வதை குறைப்பதற்கு , குறிப்பாக இனிப்பு சுவையூட்டப்பட்ட பானங்கள் உட்கொள்ளலை குறைத்தலை ,பொது சுகாதார கொள்கையின் குறியிலக்காக இருப்பதுடன் தேசிய ஆகாரத்தை அடிப்படையாகக் கொண்ட ஊட்டமுறை வழிகாட்டிகள் மூலம் சுதந்திர சீனிப் பாவனை மற்றும் இனிப்பு - சுவையூட்டப்பட்ட பானங்களது பாவனையை மட்டுப்படுத்துவதற்கும் சிபார்சுசெய்கின்றது . நாட்டின் ஏறக்குறைய 70% இறப்புகள் உப்பு மற்றும் சீனியின் அதிகரித்த நீண்ட நாள் பாவனையினால் ஏற்படுகின்றன . முன்மொழியப்பட்ட கட்டுப்பாட்டு விதிமுறைகள் மூலம்தேநீர் கடைகள் ,சாப்பாட்டுக் கடைகளில் உணவுகளை வழங்கும் போது உப்பு மற்றும் சீனி யை உணவுடன'சேர்ப்பதற்குப் பதிலாக அவற்றினை தனித்தனியாக வழங்கும் படிவேண்டுகோள் விடுக்கப்படுகின்றது . சாதாரண ஒரு இலங்கைக் குடிமகன் தனது நாளாந்தம் பாவனையில் 5 கிராம் (1தே.க) உப்பு பயன்படுத்துவதற்குப் பதிலாக ஏறக்குறைய 10-15 கிராம் உப்பை உட்கொள்ளுகின்றான் . உயர் மட்ட உத்தியோகத்தர்கள் கூறுகின்றன ,ஒருவரிற்கு ஒரு நாளைக்கு 6-11 கிராம் (2தே.க) சீனியை நுகரவேண்டியிருப்பதற்குப் பதிலாக ஏறக்குறைய 60 கிராம் சீனியை நுகர்வதாக பதனம்செய்யப்பட்ட மற்றும் உடனடி உணவுகளில் உப்பு மற்றும் சீனி அதிகரிப்பே காரணம் எனவைத்திய பரிசோதனை மூலம் கண்டுபிடிக்கப்பட்டிடுப்பட்டிருப்பதானதுதொற்றாநோய்கள் இலங்கை மக்களிடையே அதிகரிப்பதற்குக் காரணமாக இருப்பதனால் சுகாதார அமைச்சு இவ்விடயம் தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கவுள்ளது . நுகர்வோர் அதிகார சபையினால் தர நிர்ணயம் செய்யப்பட்ட வகையில் உணவுகள் தயாரிக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதனை கடுமையாகப் பின்பற்றுவதற்கு உணவு தயாரிப்பாளர் , உணவு விடுதியாளர் தேநீர் கடைகளிற்கு அறிவுறுத்துதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது . எதிர் காரத்தில் 6 கிராமிற்கு ஆமலதிகமான சீனிப்பாவனைக்கு ஆமலதிகமான ஒரு கிராம் ரூபா 1.00 வீதம் தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

- **உலக உள நல ஆரோக்கிய தினத்தில் - "உள நலத்தைகௌரவப்படுத்துவோம்" எனும் தலைப்பிலான விழிப்புணர்வு நடைபவனி**

உலக சுகாதார தினத்திற்கு அனுசரனையாக " உளநலத்தை கௌரவப்படுத்துவோம் , அனைவருக்கும் உளவியல் உளநல முதல் உதவி" எனும்தொனிப்பொருளினால் ஆன நடைபவனி . சுகாதார அமைச்சர் தைதிய இராஜித சேனாரத்ன அவர்களின் இணை ஆதரவுடன் நடாத்தப்பட்டது.

- **உலக தலை மற்றும் தொண்டைப் புற்றுநோயை வருமுன் - தடுத்தல் தினக்கொண்டாட்டம்**

உலக தலை மற்றும் தொண்டைப்புற்றுநோய் வருமுன்- தடுத்தல் தினத்தன்று ஆரம்பத்திலேயே வாய்ப்புற்றுநோயைத் தடுத்தலா எனும்தொனிப்பொருனில் விசேட நடை பவனி ஒழுங்குபடுத்தப்பட்டுகொண்டாடப்பட்டது.

❖ . உலக காக்காய் வலி வருமுன் -தடுத்தல் தினக்கொண்டாட்டம்

உலக காக்காய் வலி தினமான பெப்பிரவரி 12 ஆம் திகதி இலங்கை காக்காய் வலி சங்கத்தினால் கொழும்பில் சுகாதார அமைச்சர்கௌரவ வைத்தியர் இராஜிதசேனாரத்ன அவர்களின் பங்குபற்றுதலுடன்கொண்டாடப்பட்டது.

❖ தேசிய பாரிசவாத பதிவுக்கொண்டாட்டம்

பாரிசவாத நோயாளிகளிற்கான தேசிய பதிவு இலங்கையின்தேசிய வைத்தியசாலையில் சுகாதார அமைச்சர் கௌரவ வைத்தியர் ராஜித சேனாரத்ன அவர்களின் முன்னிலையில் வெளியிடப்பட்டது. பாரிசவாதம் வயதுவந்தவர்களிற்கு முடக்கு வாதம் ஏற்படுவதற்கான முன் அடையாளமாக அடையானம் காணப்பட்டுள்ளது . இலங்கையில் பாரிசவாதம் 1000 நபர்களிற்கு 10 நபர்கள் வீதம் பரவியுள்ளது . வயதுவந்தவர்களிடையே பாரிசவாதம் ஊனத்தன்மையை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருப்பதுடன் இலங்கைவைத்தியசாலை இறப்பவர்களில் 3வது இடத்தில் இருப்பதாக சுகாதார அமைச்சர் வைத்தியர் இராஜிதசேனாரத்தன கூறியுள்ளார். முல்லேரிய வைத்தியசாலையில்தேசிய பாரிசவாத நிலையம் திறக்கப்படவுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் இவைபொன்ற நிலையங்கள் திறக்கப்படவும் உள்ளது .சகல அரச வைத்தியசாலைகளிலும் பாரிசவாத நோயாளிகளிற்கு சிகிச்சை வசதிகளை வழங்கிவருவதுடன் சுகாதார அமைச்சு இவர்களுடைய புணர்நிர்மான வசதிகளை மேம்படுத்துவதற்கு தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது . தற்பொழுது இலங்கையில் 98 % பாரிசவாத நோயாளிகள் அவர்களுடைய அவசரதேவைக்கான மூளை CT ஸ்கானை விரைவாகப்பெறக்கூடியவர்களாக இருக்கின்றார். பாரிசவாதம் நோயாளிகளின் வாழ்க்கையில் மிகப்பெரிய பாதிப்பை அவர்களிற்கு ஏற்படுத்துவதுடன் அவர்களது முழுக் குடும்பத்தையும் பாதிப்பதாக உள்ளது. எனவே ,மக்கள் பாரிசவாத்த்தை வருமுன்

காப்பதற்கும் அதனை அவசரமாக முகாமை செய்வதற்கும் அறிவூட்டபடவேண்டியவர்களாகின்றனர்.

- ❖ **47 வது உலக நுரையீரல் காங்கிரசின் அமைச்சர்களின் வசேட கூட்டத்தொடரிற்கான பங்குபற்றுதல்**



சுகாதார அமைச்சர்கௌரவ ராஜித சேனரத்தன அவர்கள் ஐக்கிய இராட்சியம் லிவப்பூலில் இடமபெற்ற 47 வது உலக நுரையீரல் காங்கிரசின் அமைச்சர்களின் கூட்டத்தொடரில் பிரதிநிதித்துவப்படுத்தியிருத்தார். நுரையீரல் நோய்களினால் அவதிப்படுவர்களது துன்பங்களை முடிவுக்குக்கொண்டுவர மிகப்பெரியளவில் கூட்டப்பட்ட இந்த உலகத் தலைவர்கள் மாநாட்டு " எதிர்த்துத் தடுக்கம் ஆற்றல் புதியகண்டுபிடிப்புகள் மூலாதாரமாவை " என்னும்தொனிப்பொருளில் நடாத்தப்பட்டது.

ஆரோக்கிய வாழ்க்கை முறைகளைமேம்படுத்தல்

- ❖ **தேசிய சத்துணவு நிகழ்ச்சி**

"உடலைக் கட்டழகாக்குவதற்கு உணவைத் திட்டமிடல்" எனும்தொனிப்பொருளில் தேசிய சத்துணவு மாதம் பற்றிய விளக்கமூட்டும் விழிப்புணர்வு விசேட அணிவகுப்பு ஒழுங்கு அமைக்கப்பட்டது ஒரு விசேட உணவு மேன்மை தாங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறசேன அவர்களிற்கு வழங்கப்பட்டதுடன்பொருத்தமான சத்துணவுபொதுகளின் காட்சிப்படுத்தப்பட்டன கலப்பு சத்துணவை பல்வகையான உணவு , சமைக்கும்பொது உணவின் தரத்தை பாதுகாத்தல் மற்றும்பொருத்தமான உணவை உற்கொள்வதனை

தெரிவுசெய்வதன் மூலம்பெற்றுக்கொள்ள மடியும்தேசிய சத்துணவு ம்மாத்த்தின் பிரதான கருப்பொருள் ,பொதுமக்களை சரியான உணவுப் பகுதிகள் மற்றும் பல்வகையான உணவுகளை அவர்களது நாளாந்த உணவில்சேர்த்துக்கொள்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகும்.

.

❖ தொற்றாநோய்களை எதிர்த்து நிற்பதற்கு உடற்பயிற்சிகளை ஊக்கப்படுத்தல்

உலக சுகாதார தாபனத்தின் பிராந்திய சபையினால் முதற் தடவையாக சுகாதார அமைச்சு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கும் மற்றும் ஆரோக்கியமாக இருப்பதற்கு உடற்பயிற்சி எடுத்தலைப் பரிந்துரைப்பதற்கும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைகளிற்கு ஊக்கம் அளிப்பதற்கும் ஆன ஒரு உடற் பயிற்சி நிகழ்ச்சி ஒன்று அறிமுகம்செய்து வைக்கப்பட்டது. இலங்கையின் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் பிராந்தியத்தைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள், உலக சுகாதார நிறுவனப் பணிப்பாளர் நாயகம் திரு. மார்கிரட் ஷான் மற்றும் உலக சுகாதார நிறுவனப் பிராந்தியப் பணிப்பாளர் திரு.பூனம் கேட்ரபல் சிங் ஆகியோரால் இணைக்கப்பட்ட முதலாவது காலை கூட்டத்தொடரிற்கு தலைமை தாங்கினார்.

❖ உலக சுகாதார தின நிகழ்ச்சித்திட்டம்

உலக சுகாதார தாபனம் மற்றும் சுகாதாரம்,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சும் இணைந்து உலக சுகாதார தினத்தை கொழும்பில் கொண்டாடின. 2017 ஆம் ஆண்டின் உலக சுகாதார தினத்தின் போது சர்வதேச பொதுப் பிரச்சினையாகக் கருதக் கூடிய மனச்சோர்வு

மீது கவனம் செலுத்துதிய பிரதான ஒளி விளக்காக உலக சுகாதார தாபனம் விளங்கியது. உலகளாவிய ரீதியில் பலவேறு வயதினரும், வெவ்வேறு வாழ்க்கை போக்கைக் கொண்டவர்களிலும் சுமார் 350 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இம் மனவேதனை அன்றாட வாழ்வில் மேற்கொள்ளும் சிறிய செயற்பாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு சிலவேளை குடும்ப உறவு மற்றும் நண்பர்களில் பேரழிவு மிக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய மனச்சோர்வின் மோசமான நிலை தற்கொலைக்கு வழிவகுக்கும். தற்பொழுது 15-29 வரையான வயதினரிடையே மரணத்தை ஏற்படுத்துகின்ற காரணிகளில் முன்னிலையில் இருக்கின்ற காரணிகளில் இரண்டாவது காரணி இதுவாகும். மனச்சோர்வு என்றால் என்னவென்றும் அதிலிருந்து எவ்வாறு தவிர்ந்து கொள்ளலாம் மற்றும் அதனை எவ்வாறு குணப்படுத்திக் கொள்ளலாம் என்பவை தொடர்பாக நல்லதொரு புரிந்துணர்வைக் கொண்டிருந்தால் அதனோடு தொடர்புடைய சமூக கலங்கத்தைக் குறைக்க உதவுவதோடு மக்கள் உதவி பெறுவதற்கும் வழிவகுக்கும்.

- **இருதய நோய்களின் அபாயத்தைக் குறைப்பதற்கான தீர்வாக யோகாவை அன்றாட உடற் பயிற்சியாக முன்மொழிதல்**

69 வது உலக சுகாதார தாபனத்தின் பிராந்தியக்குழுக் கூட்டத்தின் புதிய சேர்க்கையாக காலைநேர உடற் பயிற்சியானது இந்தியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் சுகாதார அமைச்சர்களால் ஒழுங்கு செய்யப்பட்டது

- **தேசிய மதுபான மாநாடு-2016 "மதுபானமற்ற இலங்கையை நோக்கி"**

2016 ஆம் ஆண்டின் தேசிய மதுபான மாநாடானது சுகாதார அமைச்சு மற்றும் தேசிய மதுபான கட்டுப்பாட்டு அதிகார சபையின் ஒத்துழைப்புடன் "மதுபானமற்ற இலங்கையை

நோக்கி" எனும் தொனிப் பொருளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. அண்ணளவாக 40% இலங்கையர்களில் 35% மேற்பட்டவர்களில் 15 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் 2% பெண்களும் மது அருந்துகின்றனர். இதன் மூலம் அரசாங்கத்திற்கு பாரிய அளவு வருமானம் கிடைத்தாலும் மதுபானத்தினால் ஏற்படுகின்ற சுகாதாரப் பிரச்சினைகளுக்கான செலவானது வருமானத்தை மிஞ்சி விடுகின்றது. உலக சுகாதார தாபனத்தின் புள்ளிவிபரவியலின் படி ஒரு வருடத்தில் வீதி விபத்தினால் ஏற்படுகின்ற 20 மரணங்களுடன் ஒப்பிடு போது 1 வருடதடதில் மதுபானப் பாவனையினால் ஏற்படுகின்ற ஈரல் கரணை நோயினால் 100,000 மக்களுக்கு 57 ஆண்கள் இறக்கின்றனர். கடந்த வருடத்தில் அரசாங்கமானது 106 பில்லியன் ரூபா வருமானத்தினை மதுபானத் தொழில் மூலம் பெற்றுக் கொள்ள சுகாதார அமைச்சானது 140 பில்லியன் ரூபாவினைப் தொற்றா நோய்களுக்கு எதிராகப் போராடுவதற்கும் மது பாவனையினால் ஏற்படுகின்ற விபத்துக்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் செலவிடுகின்றது.

❖ "சுகாதாரமாக இருப்போம்" - தொற்றா நோய்த் தடுப்பு மீதான தேசிய நிகழ்ச்சித் திட்டம்

பேருவலை டீ.எஸ் சேனாநாயக்க மகா வித்தியாலயத்தில் "சுகாதாரமாக இருப்போம்" என்ற தேசிய நிகழ்ச்சித் திட்டமானது தொற்றா நோய்ப் பிரிவினாலும் போஷாக்குப் பிரிவினாலும்ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது இத் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக பாடசாலைக்கான சுகாதாரமான ஒரு வாழ்க்கை முறை நிலையம் திறந்து வைக்கப்பட்டது. வழிகாட்டல் புத்தகங்கள் மற்றும் தொற்றாநோய்த் தடுப்பு பற்றிய கையேடுகளும் நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் பகிர்ந்தளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

❖ "மஹ ஜன சுவ தான"- சுகாதாரமான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கின்ற மருத்துவக் கண்காட்சி

*இலங்கை மருத்துவக் கல்லூரி மற்றும் போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ துறை அமைச்சு ஆகியவற்றுடன் கைகோர்த்து இலங்கை வர்த்தக சம்மேளனமனது 2017 ஜுலை மாதம் 14,15,16 ஆம் திகதிகளில் பண்டாரநாயக்க சர்வதேச நாட்டு மண்பத்தில் **மஹ ஜன சுவ தன** என்ற சர்வதேச சுகாதார பாதுகாப்புக் கண்காட்சி மற்றும் மருத்துவக் கருத்தரங்கினை நடத்தியது. இந் நிகழ்வானது இலங்கை மருத்துவக் கல்லூரியின் 50 ஆம் ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 3 நாட்களுக்கு மேல் நீடித்த ஞாபகார்த்த இம் மருத்துவக் கண்காட்சியானது இலங்கையில் உள்ள சுகாதாரப் பாதுகாப்பு ,நோய்களைக் கண்டறிவதற்கு உள்ள வசதிகள் குறித்துக் காட்டல், ஆதரவான பாதுகாப்பு, எதிர்கால அபிவிருத்திகள்,பொதுவான மருத்துவ நிபந்தனைகள் மீது பொது மக்களுக்கு சுகாதாரக் கல்வியை வழங்கல் ஆகியவற்றை சித்தரித்தது.*

❖ உள்நாட்டு சந்தைக்கு சுவபோஷாவை அறிமுகம் செய்தல்

குழந்தைகள் மற்றும் பாடசாலை மாணவர்கள் மத்தியில், அவர்களது வாழ்வில் பின்னைய கட்டங்களில் உள்ள சுகாதாரப் பிரச்சினைக்கான பிரதான காரணங்களில் ஒன்று,அவர்களது வாழ்வில் ஆரம்ப கட்ட உடல்,உள வளர்ச்சிக்கு மிகவும் அத்தியவசியமான காலை உணவு நேர நிறை உணவை அவர்களது பெற்றோர் வழங்கத் தவறியமை ஆகும். ஒவ்வொரு தாயினதும் முதன்மைப் பொறுப்பு தனது பிள்ளைக்கு போஷாக்கான உணவு வழங்கப்படுகின்றதா என்பதை உறுதி செய்தல் ஆகும். இது முழு நாட்டிலும்போஷாக்கு மற்றும் கலாச்சாரத்தை உருவாக்க உதவும். வளரும் பிள்ளைகளின் முழு போஷாக்கையும் பூர்த்தி செய்யும் வகையில் இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் புதிய உற்பத்தியான சுவபோஷாவானது வீட்டுத்தோட்டத்தில் பயிரிடப்பட்ட சோயா மற்றும் சோளத்தினால் முற்று முழுதாக உள் நாட்டில் இயற்கையாக உருவாக்கப்பட்ட மேலதிகமான காலை உணவு

ஆகும். சுகாதார அமைச்சின் கண்காணிப்பின் கீழ் சிறுவர்களின் ஆரம்ப கட்ட வளர்ச்சிக்குத் தேவையான சரியான அளவு போசனையை வழங்கக் கூடிய நிறை உணவுத் தேவையை பூர்த்தி செய்யக் கூடியபோஷாக்கு உற்பத்தியான "சுவபோஷாவானது" வீட்டு நுகர்வுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது. இவ்வாறு சுவபோஷாவானது காலைவேளையில் விரைகின்ற பெரும்பாலானோருக்கு சிறந்த போஷாக்கு பெறுமதி மிக்க காலை உணவாக் காணப்படுவதோடு சுவபோஷாவானது விட்டமின் பீ, செயற்கை அமைப்பிலுள்ள போலேட், நரம்புக் குறைபாடு மற்றும் மூலை,முள்ளந்தண்டின் தீவிர குறைபாட்டைத் தடுக்கின்ற போலிக் ஆகியவற்றைக் கொண்டுள்ளதால் சிறந்ததாகக் காணப்படுகின்றது.

டெங்கு நோய்த் தடுப்பு

- **தேசிய டெங்கு நோய்த் தடுப்பு செயற் திட்ட மீளாய்வு மீதான விஷேட கூட்டம்**

இக் கூட்டத்தில், டெங்கு நோய்த் தடுப்பு தொடர்பாக விஷேட நடவடிக்கைகள் கலந்தாலோசிக்கப்பட்டதுடன் உலக சுகாதார தாபனமானது 58 மில்லியன் ரூபாவை உடனடியாக டெங்குநோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை இலங்கையில் அமுல் படுத்துவதற்காக வழங்கியுள்ளது.

❖ தேசிய டெங்கு நோய்த் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்

சுகாதார அமைச்சானதுவருடத்தின் பல வாரங்களை டெங்கு நோய்த் தடுப்பு வாரமாக அமுல்படுத்தி நுளம்புகளை ஒழிப்பதற்காக நாடளாவிய ரீதியில் சுத்தப் படுத்து வேலைத் திட்டம்,விளிப்புணர்வு வேலைத் திட்டத்தையும் அமுல் படுத்துவதற்காக பிரகடனப் படுத்தி இருக்கின்றது. டெங்குத் தடுப்பு பிரகடனங்களின் போது பாதுகாப்பும் படையினரின் உதவியுடன் சுகாதார உத்தியோகத்தர்கள் வீடுகளிலும் கட்டிட வளாகங்களிலும் டெங்கு நுளம்புகள் பெருகும் இடங்களை சோதனை செய்து நுளம்புகள் பெருகும் இடங்கள் அடையாளங் காணப்பட்டால் சுட்டிக்காட்டி பிரகடனம் செய்வதற்காக சோதனை செய்வார்கள் இக் காலப் பகுதியில் தமது சூழலை சுத்தம் செய்வதன் மூலம் வீட்டுக்கு வீடு வரும் சுகாதார உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அசைசானது பொது மக்களை வேண்டிக் கொள்கின்றது.

❖ கள மட்டத்திலான டெங்குத் தடுப்பு நடவடிக்கைகள்- ஒன்றிணைந்த காவி முகாமைத்துவம்- “ ஒன்றிணைநடது டெங்குவைத் தடுப்போம்”

டெங்கு வைரஸ் பரிமாற்றத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடானது முழுமையாக காவி நுளம்புகளின் கட்டுப்பாடு அல்லது காவித் தொடர்பு படுவதில் மனிதத் தலையீடு ஆகியவற்றில் தங்கி உள்ளது. டெங்கு நோய்ப் பரவலைத் தடுப்பதற்கான நீண்ட கால செயற் திட்டமாக அவுஸ்ரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகமானது சுகாதார மற்றும் சுதேச மருத்துவ அமைச்சுடன் இணைந்து அவுஸ்ரேலிய விஞ்ஞானிகள் முன்னோடியாக இருந்து தரை முறித்தல் ஆராய்ச்சி ஒன்றை மேற்கொள்ள உள்ளனர். மொனாஷ் பல்கலைக்கழகமானது இயற்கையாக உள்ள வொல்பேஷியா பக்டீரியாவை இலங்கையில் உள்ள நுளம்புகளுக்கு அறிமுகம் செய்யும் பரிசோனையைச் செய்யும். வொல்பேஷியா பக்டீரியாவானது டெங்கு வைரஸ் மனிதர்களிடையே பரவுவதைத் தடுக்கும். இது உயர்மட்ட வெற்றியைப்பெற்றுள்ளதோடுபிரேசில்,கொலொம்பியா,அவுஸ்ரேலியா,இந்தோனேஷியா,வியட்னாம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் பயன்படுத்தப்படுகின்றது.

டெங்கு நோயாளிகளின் மருத்துவ முகாமைத்துவத்தை விருத்தி செய்தல்

- ❖ **தொற்று நோய் வைத்தியசாலையில் புதிய டெங்குநோய் சிகிச்சை தொகுதி திறப்பு**

அங்கொடை கொதடுவ தொற்று நோய் வைத்தியசாலை வளாகத்தில் டெங்கு நோயாளிகளுக்காக இராணுவத்தினால் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடத் தொகுதியை கௌரவ சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவின் அழைப்பின் பேரில் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமை அதிதியாக் கலந்து கொள்ள அமைச்சர் திறந்து வைத்தார்.இராணுவத் தளபதியின் விஷேட பணிப்புரையைப் பின் பற்றி பாதுகாப்புப் படை தலைமைக் காரியாலயமானது , தொற்று நோய் வைத்தியசாலையில் டெங்கு நோயாளிகளின் சிகிச்சைக்காக அதிக வதிவிட வசதி தேவைப்படுவதைக் கருத்திற் கொண்டும் டெங்கு நோய் ஒழிப்பிற்கான தேசிய இயக்கத்திற்கும் நோயாளிகள் தங்குவதற்கு

37 புதிய கட்டில்களையும் வழங்குகின்ற செயற் திட்டத்திற்கு 7 மில்லியன் ரூபாவினை செலவு செய்தது.

- **கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில்,களுபோவில புதிய உயர் சார்பு அலகு திறப்பு**

சிறப்பான டெங்கு முகாமைத்துவத்தைக் குறிப்பதற்காக புதிய உயர் சார்பு அலகு ஒன்று கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டது. வைத்தியசாலையானது தெஹிவலை, இரத்மலானை, கல்கிஸ்சை மற்றும் அவற்றுக்கு அப்பால் டெங்கு நோய் பரவியுள்ள இடங்களிலிருந்து வரும் நோயாளிகளை கண்காணிக்கின்றது. உயர் சார்பு அலகுகள் கூட ....செயற்பாட்டு மற்றும் நடுத்தர பாதுகாப்பு அலகுகள் எனவும் அழைக்கப்படுகின்றன. உயர் சார்பு அலகுகளானவை பொது நோயாளிகள் அறையில் உள்ளவர்களை விட அதிகமாகவும் அதி தீவிர சிகிச்சை பிரிவில் உள்ள நோயாளிகளை விட குறைவான தீவிர அவதானிப்பு,சிகிச்சை மற்றும் பராமரிப்பு தேவைப்படுகின்ற நோயாளிகளுக்கான பிரிவு ஆகும். மேலுள்ள மாவட்ட பொது வைத்தியசாலைகளிலும் தெரிவுசெய்யப்பட்ட சில பிரதேச வைத்தியசாலைகளிலும் உயர் சார்பு அலகுகளை நிறுவுவதற்காக சுகாதார அமைச்சானது நடவடிக்கைகளை மேற் கொண்டிருக்கின்றது.

- **டெங்கு முகாமைத்துவத்திற்கான ஆய்வு கூட வசதிகளை விருத்திசெய்வதனை நோக்காகக் கொண்டு பிரதான வைத்தியசாலைகளுக்கு புதிய தன்னியக்கநோய் சிகிச்சை பகுப்பாய்வுக் கருவிகளை பங்கீடு செய்தல்**

அரசாங்கத்தின் சுகாதார வசதிகளினூடாக தேவையான பாரிய அளவு சேவைகளை வழங்குவதனை வலுப்படுத்துவதற்காக அரசாங்கமானது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. மேலுள்ள எல்லா போதனா வைத்தியசாலை வகைகளும் 2.5 பில்லியன் பெறுமதி உள்ள தன்னியக்க பகுப்பாய்விகளுடனான ஆய்வு கூட வசதிகளை வழங்கப் பெற்றுள்ளன. இது நோயாளிகளுக்கு மற்றும் உடனடிப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்குமான செலவினங்களைக் குறைக்கும்

❖ தனியார் வைத்தியசாலைகளில் டெங்கு நோய் இரத்தப் பரிசோதனை விலைகள் குறைக்கப்படல்

டெங்கு நோயைக் கண்டறிவதற்கான இரத்தப் பரிசோதனை கட்டணங்களை குறைப்பதற்கு சுகாதார அமைச்சர் டாக்டர். ராஜித சேனாரத்ன எல்லா தனியார் வைத்தியசாலைகளையும் அறிவுறுத்தியுள்ளார். எல்லா முன்னணி தனியார் வைத்தியசாலைகளும் புதிய வைத்தியசாலைகளை அமுல்படுத்தி உள்ளன. அதன் படி இதற்கு முன்னர் முறையே 750 ரூபாவாகவும் 3000 ரூபாவாகவும் இருந்த ப்லட் கவன்ட்டெஸ்ட் மற்றும் டெங்கு அன்டிஜன்ட் டெஸ்ட் ஆகியன தற்போது 250 ரூபாவாகவும் 1000 ரூபாவாகவும் உள்ளது.

❖ சார்க் பிராந்தியத்தில் காசநோயைத் தடுப்பதற்கு இலங்கை தலைமை தாங்குகின்றது

சார்க் பிராந்தியத்தில் நோயைக் கண்டறியும் பயிற்சியாளர்களுக்கான பயிற்சி , குழந்தை காசநோய் செயற் திட்ட ரீதியான முகாமை மற்றும் சிகிச்சையானது சுகாதாரம்,போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவ துறை அமைச்சர் டாக்டர். ராஜித சேனாரத்னவின் முன்னிலையில்

கொழும்பில் இடம்பெற்றது. 2015 ஆம் அண்டு இலங்கையில் 13000 புதிய காசநோய் நிகழ்வுகள் கண்டு பிடிக்கப்பட்டதோடு அவற்றில் 9,975 மாத்திரம் அடையாளங் காணப்பட்டன என உலக சுகாதார தாபனம் மதிப்பீடு செய்கின்றது. 206 ஆம் ஆண்டின் வருடாந்த புள்ளி விபரத்தின் படி மொத்தமாக 8,886 எல்லா வகையான காசநோய் வகைகளும் தேசிய காசநோய் மற்றும் இருதய நோய்கள் தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்கு அறிக்கையிடப் பட்டுள்ளது. இலங்கையானது காசநோயில் மத்திய தர சுமையில், சார்க் பிராந்தியத்தில் இரண்டாவது குறைவான நாடாக உள்ளது. சார்க் பிராந்தியமானது 1.5 பில்லியனுக்கு மேற் பட்ட சனத்தொகையைக் கொண்டுள்ளது. இப் பிராந்தியமானது குழந்தை காசநோயாளிகள் உட்பட பாரிய எண்ணிக்கையிலான காச நோயாளிகளைக் கொண்டுள்ளன. சார்க் பிராந்தியத்தில் உள்ள சில நாடுகள் காசநோயை ஒழிப்பதற்கு திடமான செயற்பாடுகளை மேற்கொள்கின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் காசநோய் காரணமாக ஏற்படுகின்ற மரணங்களே சிறுவர் அநாதைகளாவதற்கான முன்னணிக் காரணி என அமைச்சர் கூறினார்.

Medicinal drugs and Pharmaceutical Services

- **அதிக பட்ச சில்லறை விற்பனை மீதான வர்த்தமானி அறிவித்தல் (2016.02.17) மற்றும் தேசிய மருந்து ஒழுங்கமைப்பு அதிகார சபையின் சட்ட இலக்கம் 2015.05 கீழ் மருத்துவ உபகரணங்களை விலையிடல் ஒழுங்கமைப்புச் சட்டமானது விதிக்கப்பட்டது.**



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

EXTRAORDINARY

අංක 2006/45 - 2017 පෙබරවාරි මස 17 වැනි සිකුරාදා - 2017.02.17

No. 2006/45 - FRIDAY, FEBRUARY 17, 2017

(Published by Authority)

PART I : SECTION (I) — GENERAL

Government Notifications

L.D. B 9/2016.

THE NATIONAL MEDICINES REGULATORY AUTHORITY ACT, No. 5 OF 2015

REGULATIONS made by the Minister of Health, Nutrition and Indigenous Medicine under Section 142 read together with Section 118 of the National Medicines Regulatory Authority Act, No. 5 of 2015.

Dr. Rajitha Senaratne,
Minister of Health, Nutrition and Indigenous Medicine.

Colombo,
17th February, 2017.

Regulations

1. These regulations may be cited as the Medical Devices Pricing Regulations, No. 01 of 2017.
2. No manufacturer, importer, distributor, trader, pharmacist or a medical institution inclusive of a private medical institution or a person who is in possession of a medical device shall sell, offer for sale or charge for any medical device described by brand name or approved name and set out in Column II of the Schedule hereto, above the Maximum Retail Price (MRP) stipulated in the corresponding entry in Column IV thereof.
3. Every person or institution referred to in regulation 2, who sells or offer for sale or charges for any medical device which is described by its brand name or approved name and set out in the Schedule hereto, shall issue a receipt clearly indicating the brand name or the approved name and the price of such medical device.

This Gazette Extraordinary can be downloaded from www.documents.gov.lk 1A



ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

EXTRAORDINARY

අංක 1989/61 - 2016 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2016.10.21

No. 1989/61 - FRIDAY, OCTOBER 21, 2016

(Published by Authority)

PART I : SECTION (I) — GENERAL

Government Notifications

L.D.-B 9/2016

THE NATIONAL MEDICINES REGULATORY AUTHORITY ACT, No. 5 OF 2015

REGULATIONS made by the Minister of Health, Nutrition and Indigenous Medicine under Section 142 read together with Section 118 of the National Medicines Regulatory Authority Act, No. 5 of 2015.

Dr. Rajitha Senaratne (M.P.),
Minister of Health, Nutrition and
Indigenous Medicine.

Colombo,
21st October, 2016.

Regulations

1. These regulations may be cited as the National Medicines Regulatory Authority (Ceiling on Prices) Regulations, No. 2 of 2016.
2. There shall be a ceiling on prices of the drug-formulations set out in the Schedule hereto (hereinafter referred to as "scheduled drugs") which shall come into operation on the date of publication of these regulations in the *Gazette Extraordinary* (hereinafter referred to as the "relevant date").
3. The ceiling on prices of the scheduled drugs shall apply to and in respect of all branded and generic versions of such drug-formulations.
4. On and after the relevant date, no manufacturer, importer, trader and pharmacist shall sell any scheduled drug set out in Column II of the Schedule hereto, above the Maximum Retail Price (MRP) stipulated in the corresponding entry in Column V thereof.
5. A manufacturer, importer, trader or pharmacist who currently sells a scheduled drug at a price less than the MRP stipulated in the Schedule is required to maintain the existing price without any price increase.

This Gazette Extraordinary can be downloaded from www.documents.gov.lk 1A

❖ தேவையான மருந்துகளின் மொத்த சில்லறை விற்பனையை நிறுவுதல்

நீண்ட கால தீர்வு ஒன்று அமுல் படுத்தப்படும் வரை மொத்த சில்லறை விற்பனை விதிகளுக்கு கீழ் புதிய விலைத் தொழிநுட்பத்தை அறிமுகப் படுத்துவதன் மூலம் நோயாளிகளுக்கு மலிவு விற்பனையில் ஔடதங்களை வழங்குவதற்கு இலங்கையானது 2016 ஒக்டோபர் 21 ஆம் திகதி தேவையான மருந்துகளின் விலையை மாற்றியுள்ளது. அரசாங்கமானது நீரிழிவு, இதய நோய், உயர் இரத்த அழுத்தம், உயர் இரத்தக் கொழுப்பு போன்ற சில தொற்றா நோய்களுக்கும் ஏனைய பொதுவான சில நோய்களுக்கு சிகிச்சை அளிக்கக் கூடிய 48 பொதுவான மருந்துகளின் (300 கு மேற்பட்ட ஔடதங்கள்) அதிக பட்ச விலை அமைப்பை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது. இலங்கையின் பெறுமதியானது வருடத்திற்கு 400 மில்லியன் அமெரிக்க டொலராக மதிப்பிடப்பட்டுள்ளது. மக்களின் சுகாதாரத்தில் இம் மருந்துகளின் விலை ஒழுங்கு விதிகள் பாரிய தாக்கத்தைக் கொண்டுள்ளன. 2016 ஆம் ஆண்டில் அறிமுகப் படுத்தப்பட்ட புதுப்பிக்கப்பட்ட ஔடதங்களின் விலை நிர்ணயிப்பு விதிகளானவை,எல்லா நேரங்களிலும் தேவையான மருந்துகள் மொத்த சில்லறை விற்பனை விலைக்குக் கீழ் விற்கப் பட வேண்டும் என்பதை உறுதி செய்கின்றது. வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் விளைவாக சில ஔடதங்களின் விலைகள் 85% மாக குறைவடைந்துள்ளது. மருந்து விலைகளின் வெற்றிகரமான ஒழுங்குவிதிகளானவை ஆதரங்களை அடிப் படையாகக் கொண்ட கொள்கைகளால் நோயாளிகளின் உரிமையைப் பாதுகாக்க முடியும், தர உறுதி செய்யப்பட்ட மருந்துகளுக்கான அணுகல் மற்றும் சர்வதேச சுகாதார பாதுகாப்பு கொள்கைகளின் மேம்பாட்டை உறுதி செய்தல் ஆகியவற்றைக் காட்டுகின்றது. திருத்தி அமைக்கப் பட்ட விலை நிர்ணயிக்கும் கொள்கையானது இலங்கையில் மலிவு விலையில் மருந்துகளைப் பெற்றுக் கொள்வதற்கான நோயாளிகளின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற பாரிய வெற்றியாகும்.



Example: Prescription for diabetes & high blood pressure

Product	Brands	Retail range (Rs.)	MRP(Rs.)	Reduction (%)
AMLODIPINE 5mg	8	21.00-2.00	15.32	29%
LOSARTAN 50mg	23	28.00-2.00	10.30	64%
ATORVASTATIN 20mg	18	41.80-4.90	17.63	58%
CLOPIDOGREL 75mg	4	20.50-6.80	15.27	26%
METFORMIN 500mg	22	10.00-1.75	3.75	63%
GLICLAZIDE 80mg	28	19.00-3.80	9.28	54%

Product	Dosage	Current Cost (Rs.)		MRP	Cost (Rs.)
AMLODIPINE 5mg	daily	21.00	21.00	15.32	15.32
LOSARTAN 50mg	daily	28.00	28.00	10.30	10.30
ATORVASTATIN 20mg	daily	41.00	41.00	17.63	17.63
CLOPIDOGREL 75mg	daily	20.50	20.50	15.27	15.27
METFORMIN 500mg	3xday	10.00	30.00	10.00	11.25
GLICLAZIDE 80mg	daily	19.00	19.00	9.28	9.28
COST per day			Rs. 159.50		Rs. 79.05
COST per month			Rs. 4,785.00		Rs. 2,371.50

❖ புற்றுநோய் எதிர்ப்பு மருந்துகளின் விலை குறைக்கப்படுதல் மற்றும் வாழ் நாள் முழுவதும் புற்றுநோய் எதிர்ப்பு ஔடதங்களை இலவசமாக வழங்கல்

புற்றுநோய் சிகிச்சைக்காகப் பயன்படுத்துகின்ற ஔடதங்களின் விலைகளில் விதிக்கப்பட்டுள்ள குறைப்பானது இலங்கையில் புற்றுநோய் முகாமைத்துவத்தின் குறிப்பிடத்தக்க விருத்தியை உறுதிப் படுத்துகின்றது. இதன் விளைவாக சில புற்றுநோய் ஔடதங்களின் விலை கணிசமான அளவிற்கு குறைந்துள்ளது. கிடைக்கின்ற தரமான பிரதியீடுகளானவை ஔடதங்களின் விலையானது மலிவு விலைக்கு குறைக்கப்பட்டுள்ளது என்பதனையும் மேலும் ஔடதங்களின் இறக்குதி செலவானது 2 பில்லியனில் இருந்து 1 பில்லியனாகக் குறைக்கப் பட்டுள்ளமையினையும் உறுதிப்படுத்துகின்றன. புற்றுநோய் ஔடதங்களிலிருந்து தனியான சேமிப்பு அண்ணளவாக 2 பில்லியன்கள் ஆகும். இதற்கு மேலதிகமாக சுகாதார அமைச்சானது, சிகிச்சை செலவு எதுவாக இருந்தாலும் நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றுவதற்காக உயர்ந்த பட்ச உள்ளூர் கொள்வனவு மட்டங்கள் இல்லாமல் புற்றுநோய்க்கான சிகிச்சையைத் தொடர்வதற்கு தீர்மாணித்துள்ளது. இது நாட்டில் உள்ள பிரஜைகளின் இலவச சுகாதார வரப்பிரசாதத்தை உறுதிப் படுத்துகின்ற நடவடிக்கைகளில் ஒன்றாகும்.

இல	புற்று நோய் எதிர்ப்பு ஔடதத்தின் பெயர்	முன்னைய விலை	தற்போதைய விலை	விலைக் குறைப்பு சதவீதம்
01	Trastuzumab 440mg injection	230,000.00	144,100.00	37.35%
02	Bevacizumab 100mg injection	65,500.00	47,400.00	27.63%
03	Lapatinib 250mg tablet	960.58	795.00	17.24%
04	Pemetrexed di Sodium 100mg injection	35,200.00	5,500.00	84.38%
05	Pemetrexed di Sodium 500mg injection	158,000.00	19,750.00	87.50%
06	Abiraterone acetate 250mg tablet	2,416.66	479.00	80.18%

❖ இருதய அறுவை சிகிச்சை ஸ்டென்ட்களை இலவசமாக விநியோகித்தல்



சுகாதார அமைச்சானது தொற்றா நோய்களைத் தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளதுடன் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வினை மேம் படுத்துவதற்காக சமமான முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். ஸ்டென்ட்டுக்களானவை குருதியோட்டக் குறைவுடைய இதய நோய்களுக்கான மிகப் பிரசித்தி பெற்ற குறைவான ஆக்கிரமிப்புத் தலையீடாகும். அரசாங்கமானது இருதய நோயாளர்களுக்கான வாழ்நாள் முதலீடாக இருக்கின்ற ஸ்டென்ட்களின் விலையினை 350,000 ஆகவும் அவர்களது மருந்தை 50,000 ஆகவும் குறைப்பதற்கு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. ஆகவே, அரசாங்க வைத்தியசாலைகளில் அறுவை சிகிச்சைக்கு உட்படுகின்ற நோயாளிகளுக்கு நிபுணர்களால் தெரிவு செய்யப்பட்ட உயர்தரமான ஸ்டென்ட்கள் இலவசமாக வழங்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் ஸ்டென்ட்களை இலவசமாக வழங்குவதற்காக 640 மில்லியன் ரூபாய்கள் செலவிடப் பட்டதோடு தனியார் மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கும் நிவாரணம் வழங்குவதற்குக் கூட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஸ்டென்ட்களின் விலையானது புதிய இயக்கத்துடன் அண்ணளவாக 450,000 முதல் 105,000 வரை குறைந்துள்ளதோடு மருந்துகளின் விலையானது 75,000 முதல் 24000 வரை குறையும். மாரடைப்பு ஏற்பட்ட இருதய நோயாளிகளுக்கு வழங்கப்படும் இம் மருந்துகளானவை உண்மையிலேயே முழுமையாக அந்நோயாளியை 2 மணி நேரத்தில் சாதாரண நிலைக்குக் கொண்டு வரும்.இது எல்லா மருத்துவமனை அமைப்புக்களிலும் கிடைக்கக் கூடியவாறு செய்யப்பட்டுள்ளது. ஸ்டென்ட்டுக்களை சந்தையில் விற்பனை செய்கின்ற நிறுவனங்கள் மற்றும் நோயாளிகளுக்கு ஸ்டென்ட்டுக்களைப் பயன் படுத்துகின்ற தனியார் மருத்துவனைகளுகும் விலை ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுமாறு வேண்டப்பட்டு இருக்கின்றனர். இவ் விலைகளானவை, தேசிய ஔடதங்கள் ஒழுங்கு விதிகள் அதிகார சபையின் 2015 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சட்டத்திற்கு ஏற்ப ஒழுங்கமைக்கப்பட்டு இருக்கின்றது.

❖ மொத்த சில்லறை ஒழுங்கு விதிகள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் விலை நிர்ணயிப்பு ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தல்

சந்தைப் படுத்தலின் பின்னரான தொடர்ச்சியான கண்காணிப்பு, முறைப்பாடுகள் மீதான சோதனைகள், புதிதாக விதிக்கப்பட்ட மொத்த சில்லறை விற்பனைக்கு ஏற்ப ஔடத விநியோகம், ஔடத மற்றும் மருத்துவ உபகரணங்கள் விற்பனை மீதான அவதானிப்புக்கள் தேசிய மருந்துகள் ஒழுங்கு விதிகள் அதிகார சபையின் பிரதானள உணவு மற்றும் ஔடத அதிகார சபையால் நடத்தப்படுகின்றது.

❖ இன்ரா ஒகீயூலர் லென்ஸ் களின் (INTRA OCULAR LENSES) விலைக் குறைப்பு

தேசிய ஔடதங்கள் ஒழுங்கமைப்பு அதிகார சபையானது கண்ணாடி வில்லைகளின் விலையைக் குறைப்பதற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் விலைகள் 30,000 முதல் 8000 வரை குறைக்கப்பட்டுள்ளது. கண்ணாடி வில்லைகளின் விலையைக் குறைப்பு மீது வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதே நேரம் அரசாங்க வைத்தியசாலைகளில் கண் அறுவை சிகிச்சைகளுக்கு உட்படுகின்ற நோயாளிகளுக்கு இலவசமாக கண்ணாடி வில்லைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. சுகாதார அமைச்சரின் பணிப்புரைகளின் கீழ் உள்ள சுகாதார அமைச்சானது 1000 மில்லியன் ரூபா பெறுமதியான 100,000 கண்ணாடி வில்லைகளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தேசிய ஔடதங்கள் ஒழுங்கமைப்பு அதிகார சபையானது அறுவை சிகிச்சை உபகரணங்களுக்கு புதிய விலை விதிகளை உருவாக்கியுள்ளது

❖ ஒழுங்குவிதிகளுக்குப் பின்னர் வில்லைகளின் விலைக் குறைப்பு

IOL PRICE REVISION

		BRAND	SUPPLIER	OLD PIRCE	NEW PRICE	PRICE DEDUCTION
1	IOL	Alcon Acrysof IQ	Delmage	25500	16000	9500
2		Alcon Acrysof		18500	12700	5800
3		Alcon MA60MA		18500	12700	5800
4		Sensar	AMO - Hemas	17000	11750	5250
5		Sensar 1 Piece		19000	12800	6200
6		Tecnis		25000	15500	9500
7		Tecnis 1 Piece		28000	16200	11800
8		Hoya-PS AF-1 (UY)	Vision Solution	17000	7900	9100
9		Hoya - Yellow		25000	12100	12900
10		Hoya - Clear		25000	12100	12900
11		Akreos B+L	Vision 2000	22600	11600	11000
12		Envista B+L		25500	14800	10700
13		Acriva	Geourge Stuart	18000	6500	11500
14		Acriva BB		25000	6900	18100
15		Acryfold		6325	3000	3325
16		Rayner C-Flex	Pan Pharma	14900	5100	9800
17		Rayner C-Flex Aspheric		24000	6000	18000
18		Nidek	Vision 20-20 Techno	25900	11750	14150
19		CT Asphina 404 - Zeiss	Dimo	25000	10500	14500
20		CT Spheris 204 - Zeiss		17000	8200	8800

❖ ஒசுசலவின் தனியுரிமை கிளை மையங்களை நிறுவுதல்

சலுகை விலைகளில் ஔடதங்களை மக்களுக்கு வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவின் பணிப்புரைகளின் கீழ் நாடளாவிய ரீதியில் அரசு உடமையாக்கப்பட்ட ஒசு சல விற்பனை மையங்களை அமைப்பதற்காக சுகாதார அமைச்சானது தீர்மானம் எடுத்துள்ளது. நாடளாவிய ரீதியில் 35 ஒசு சல விற்பனை மையங்கள் திறக்கப்பட்டு இயங்குகின்றது. எஸ்.பி.சி யானது சலுகை விலைகளில் ஔடதங்களை வழங்குவதன் மூலம் நாடளாவிய ரீதியில் அரச ஒசு சல விற்பனை மையங்கள் இயங்குகின்றன. ஒசு சலவிற்கு மேலதிகமாக பொது மக்களின் ஔடதத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஒசு சல முகவர்களும் இயங்குகின்றனர்.

❖ 38 ஔடத உற்பத்திக் கைத்தொழில்களை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைச்சாத்திடல்

சுகாதார,போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத் துறை அமைச்சானது இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்திற்கு உள்ளூரில் ஔடதங்களை உற்பத்தி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமானது 31 ஔடத உற்பத்தி நிறுவனங்களுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அண்ணளவாக 2,500 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய புதிய தொழிற்சாலைகள் ஹொரன,களுத்துறை,கொக்கல, மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களில் அமைக்கப்படும். பல தொழிற்சாலைகளின் நிர்மாணப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு விட்டன. அண்மையில் சுகாதார அமைச்சில் சுகாதார,போஷாக்கு மற்றும் சுதேச மருத்துவத் துறை அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன அவர்களை இத் தொழிற்சாலைகளின் முகாமை அதிகாரிகள் சந்தித்து இப் புதிய தொழிற்சாலைகளை நிறுவுவது தொடர்பான பிரச்சினைகளை கலந்தாலோசித்தனர். அதன் விளைவாக 85 % ஔடதத் தேவைகள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும்.

- **அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தின் உள்ளூர் ஔடத உற்பத்தி ஆற்றலை விரிவு படுத்தல்**



ஜப்பானிய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் உள்ளூர் ஔடத உற்பத்திகளை விரிவு படுத்துவதன் மூலம் அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தின் உற்பத்தி ஆற்றலானது திட்டமிடப்பட்டு இருக்கின்றது. அதன் படி,1.5 பில்லியன் ரூபா செலவில் உற்பத்தி வசதியானது அமைக்கப்பட்டு நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுடன் உபகரணமயப் படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தமானது அண்மையில் சுகாதார அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. தற்போது அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தின் உற்பத்தி ஆற்றலானது உச்ச நிலையை அடைந்துள்ளதுடன் இவ் உற்பத்தியை இரு மடங்காக்குவதற்கு புதிய வசதிகள் உதவும். தற்பொழுது அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனமானது வருடாந்தம் 1.9 பில்லியன் மாத்திரைகளை உற்பத்தி செய்கின்றது. புதிய தொழிற்சாலையானது பூரணமாக நிர்மாணிக்கப்ப பட்டதன் பின்னர் இத் தொகையானது 3.8 பில்லியனாக அதிகரிக்கும். மேலும் அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபமானது உள்ளூர் மருந்துகளுக்கான கேள்விகளை 70% உற்பத்தி செய்ய எதிர் பார்க்கின்றது. அண்ணளவாக 24 நிறுவனங்கள் மருந்துகளை உற்பத்தி செய்வதற்காக அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்துடன் ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டுள்ளதுடன் மேலு 7 நிறுவனங்கள் கைச்சாத்திட திட்டமிட்டுள்ளன. புதிய தொழிற்சாலைகள் களுத்துறை,ஹொரன மற்றும் குருநாகல் பிரதேசங்களில் அமைக்கப்பட உள்ளன.

- **இலங்கையின் சுகாதாரத் துறைக்கு தேசிய ஔடதக் கொள்கையை நிறுவுவதில் பேராசிரியர் சேனக்க பிபிலேயின் சேவையை நினைவு கூர்தல்’**

செப்டம்பர் 23 இடம் பெற்ற சேனக்க பிபிலேயின் நினைவு கூறலில் சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன பிரதான அதிதியாக கலந்து கொண்டு அவரது அமைச்சின் புதிய ஔடதக் கொள்கையின் முதல் கட்டத்தினை முன்வைக்கும் போது மரணித்த பேராசிரியரை கௌரவிப்பதற்கான சந்தர்ப்பத்தை தெரிவு செய்தார். இதன் போது அமைச்சர் , "ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அனுசரனை யுடனான செயற்பணியான பொருத்தமானமருந்தாக்கல் கொள்கையை மூன்றாம் உலக நாடுகளில் அறிமுகப் படுத்துவதற்காக நாட்டை விட்டு வெளியேறிய பேராசிரியர் சேனக்க பிபிலே அவர்கள் நாட்டுக்கு மீண்டும் சிறிய மட்பானையில் திரும்ப வேண்டி இருந்தது. ...அவரது புனித அஸ்தியை மாத்திரமேனும் அவரது நினைவுப் பொறிகல் மீது பதிக்கக் கூடியதாக இருந்தமை எமது அதிஷ்டமே.இச் சந்தர்ப்பத்தில் அம் மா மனிதர் இருந்திருப்பாரானால் நன்மைகளுக்கு வழிவகுக்கும் அவரது முன்மொழிவுகளின் அமுலாக்கத்தைப் பாரத்து அதிர்ச்சி மற்றும் ஆச்சரியத்திற்கு உள்ளாகி இருப்பதோடு அவரது கனவுகளிற்குக் கிடைத்த நிலையைக் கண்டு அச்சம் மற்றும் வெறுப்பில் அவரது மீளத் திரும்பக் கூடும்." எனக் கூறினார்.

❖ பொதுப் பெறுகை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மீதான ஆற்றலைக் கட்டி எழுப்பும் நிகழ்ச்சித் திட்டம்

*சுகாதார அமைச்சானது **SLIDA & MILODA** நிறுவனங்கள் ஆகியவற்றின் ஒத்தழைப்புடன் மருத்துவ நிர்வாகிகள்,அமைச்சின் அலுவலர்கள்,மருத்துவ உத்தியோகத்தர்கள், நிர்வாக மற்றும் நிதியியல் அலுவலர்களின் அறிவு,திறமை மற்றும் நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்காக பொதுப் பெறுகை மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை மீதான ஆற்றலைக் கட்டி எழுப்பும் நிகழ்ச்சித் திட்டத்தை ஒழுங்கமைத்து இருக்கின்றனர். ஆற்றலைக் கட்டி எழுப்பும்*

இந் நிகழ்ச்சித் திட்டமானது நல்ல பொதுப் பெறுகை நடவடிக்கைகளை உறுதிப் படுத்துவதனூடாக நல்லாட்சியின் கொள்கைகளை நிறுவுவதை நோக்காகக் கொண்ட உலக வங்கியின் இரண்டாம் சுகாதாரத் துறை அபிவிருத்தி வேலைத் திட்டத்தினால் நிதியிடப்பட்டு இருக்கின்றது.

சுகாதாரத்திற்கான மனித வளம்

- **சுகாதார அமைச்சில் மனித வளப் பிரிவின் நிறுவல் திட்டமிடல் மீதான விஷேட கலந்துரையாடல்**

தெளிவான சந்தர்ப்ப பகுப்பாய்வின் பின்னர் சுகாதாரத்தில் மனித வளம் 2009-2018 ற்கான செயல்நுணுக்கத் திட்டத்தை சுகாதார அமைச்சானது விருத்தி செய்தது. செயல்நுணுக்கத் திட்டமானது மனித வள அபிவிருத்தியின் பிரதான 3 பகுதிகளான கொள்கை,முகாமைத்துவம் மற்றும் பயிற்சி ஆகியவற்றை தெளிவாக அடையாளங் காண்கின்றது. செயல்நுணுக்கத் திட்டத்தின் செயலாக்கத்திற்கு தேவையான சுகாதார அமைச்சு ஒழுங்கமைப்பினுள் மனித வளத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ முறைமையை விருத்தி செய்யும் மத்திய மனித வள அபிவிருத்தி அலகு ஒன்றை நிறுவுவதற்கான உயர் முன்னுரிமை ஒன்று காணப் படுகின்றது. சுகாதாரத்தில் மனித வளக் கொள்கையிலுள்ள பிரச்சினைகைகளுக்கு மத்திய தொழிநுட்ப பொறிமுறையினை நிறுவுவதற்கான ஆற்றலில் உள்ள இடை வெளியானது அடையாளங் காணப்பட்டுள்ளன.இப் பகுதிகளில் ஒழுக்கத்துடன் தொடர்பு பட்ட நடை முறையில் உள்ள பட்டப் பின் பயிற்சியிலும் அவதானம் செலுத்த வேண்டும் .

❖ *2006 ஆம் அண்டுடன் ஒப்பிடும் போது 2016 ஆம் ஆண்டு சுகாதார சேவைகளுக்கான சம்பளமானது அதிகரித்துள்ளது*

சேவை	சம்பள அளவுத் திட்டம்	அடிப்படைச் சம்பளம்		சம்பள உயர்வு சதவீதத்தில்	தொழிலாளர்களின் எண்ணிக்கை
		2006/6 அல்லது 2006/6A	3/2016 (2020 இல்)		
மருத்துவ சேவை	SL 2	25,515/=	52,955/=	107.5%	16,000
Nursing Service	MT7	15,620/=	32,525/=	108.2%	30,000
Para Medical Services	MT4	15,080/=	31,190/=	107.8%	16,000
	MT5	15,260/=	31,635/=	107.3%	
Professionals Supplementary to Medicine (PSM)	MT6	15,440/=	32,080/=	107.7%	5000
Management Assistants	MN2	13,990/=	28,940/=	106.3%	
Development Officers	MN4	15,215/=	31,490/=	106.9%	

❖ மனித வளங்களின் மீதான ஆசிய பசுபிக் நடவடிக்கை கூட்டணியின் 9வது மாநாடு, கொழும்பு

சுகாதாரத்திற்கான மனித வளங்களின் மீதான ஆசிய பசுபிக் நடவடிக்கை கூட்டணியானது சுகாதார ஊழியப் படை மீதான நாட்டின் திட்டமிடல் மற்றும் நடவடிக்கையினை வலுப்படுத்துவதற்கான உலக மற்றும் பிராந்திய நடவடிக்கைக்கான தேவையின் சர்வதேச அங்கீகாரத்திற்கான பதில் ஆகும். 2013 ஜனவரியில் இருந்து பங்களாதேஷ், கம்போடியா, சீனா, பிஜி, இந்தியா, இந்தோனேஷியா, லாவோ பொ.ஜ.கு. மொங்கோலியா, மியன்மார், நேபால், புபுவா நியூகினியா, பிலிபைன்ஸ், சமோ, இலங்கை, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய நாடுளை உள்ளடக்கிய 16 உறுப்பினர்களை இது கொண்டுள்ளது. சுகாதாரத்திற்கான மனித வள ஆலோசனை தகவல் கண்காணிப்பு, ஆற்றலை வலுப்படுத்தல்,, அறிவு சந்த்தியினர் மற்றும் தொழிநுட்ப ஒருங்கிணைப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய 5 முதன்மை செயற்பாடுகள் உள்ளன. மனித வளங்களின் மீதான ஆசிய பசுபிக் நடவடிக்கை கூட்டணியின் 9வது மாநாட்டின் நோக்கங்களானவை நிறுவனங்களுக்கு

இடையில் உலக சுகாதார செயல்நுணுக்க உள்ளடக்கத்தின் ஆழமான புரிந்துணர்வை அடைதல் மற்றும் செயல்நுணுக்கத்தை நாட்டு நடவடிக்கைகளாக மாற்றுவது எவ்வாறு என்பதை அறிதல்.

கஷ்டமான மற்றும் பின் தங்கிய பிரதேசங்களில் உள்ள சூழல் மற்றும் வதிவிட வசதிகள் சுகாதாரத்தில் உள்ள மனித வளத்தை வலுப்படுத்தல், சம்மான முறையில் போதுமான மனித வளங்களை வழங்கல் மற்றும் பொருத்தமான நடவடிக்கையை மேம்படுத்தல்

- **இலங்கை சுகாதாரத் துறைக்கு 1034 உள்ளக மருத்துவ உத்தியோகத்தரின் நியமனம்**

- **ப.ச.ஞ.மா.ம இல் இலங்கை சுகாதார சேவைக்கு 309 உள்ளக மருத்துவ உத்தியோகத்தர்களின் ஆடசேர்ப்பு வைபவத்தில் நியமனக் கடிதங்களை பகிர்ந்தளித்தல்**

❖ 120 தாதி அலுவலர்களுக்கு நியமனம் வழங்கல்,226 மேலதிக மருத்தவ ஆளணியினர் மற்றும் 287 பட்டதாரி தாதி அலுவலர்கள் நியமனம்

❖ 338 மருந்துக் கலவையாலருக்கான நியமன வழங்கல் வைபவம்

❖ 107 ஆயுர்வேத மருத்துவர்களுக்கு நியமனம் வழங்கல்

❖ 496 சுகாதாரப் பராமரிப்பு பரிசாரகருக்கான நியமனம் வழங்கல்

❖ 1 500 தாதி உத்தியோகர்களுக்கான நியமனம்

❖ 308 உள்ளகப்பயிற்சியை நிறைவு செய்த வைத்திய உத்தியோகத்தர்களின் நியமனம்

❖ 500 டெங்கு தடுப்பு உதவியாளர்கள்

❖ 336 மருந்துக் கலவையாளர்கள் மற்றும் 150 குடும்பநல உத்தியோகத்தர்கள் நியமனம்

❖ 2250 தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் 754 உதவி சுகாதார பராமரிப்பு குடும்ப நல உத்தியோகத்தர்கள்

❖ பல்வைத்திய நிபுணர்களின் நியமனம்

❖ தாதி உத்தியோகத்தர்களின் நியமனம்

❖ தாதி டிப்ளோமா சான்றிதழ் வழங்கல்

❖ ஆய்வுகூடத் தொழிநுட்ப உத்தியோகத்தர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ்

❖ ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை பராமரிப்பு சேவைகளின் சுகாதார பராமரிப்ப விநியோக தரம் மற்றும் பாதுகாப்பு விருத்தி

சுகாதாரப் பராமரிப்பு தரம் மற்றும் நோயாளர் பாதுகாப்பின் அபிவிருத்திக் கட்டத்தில் இலங்கை உள்ளது. இலங்கையில் சுகாதார சேவை விநியோகத்தில் தரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை விருத்தி செய்வதற்கான தேவையை சுகாதார அமைச்சு அடையாளங்கண்டுள்ளது

- **04 பாரிய தனிக்கூறுகளில் 20 சிகிச்சைக் குறிகாட்டிகளை விருத்தி செய்தல்**

சுகாதார கவனப்பராமரிப்பு தரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய நிலையம், 04 பாரிய தனிக்கூறுகள் அதாவது மருந்து, சத்திரசிகிச்சை, குழந்தை மருத்துவம் அத்துடன் மகப்பேறியலும் பெண் மருத்துவமும் ஆகியவற்றிற்காக உரிய கல்லூரிகளின் ஒத்துழைப்புடன் சிகிச்சைக் குறிகாட்டிகளை தயாரித்துள்ளது. ஒவ்வொரு கல்லூரியையும் சேர்ந்த உறுப்பினர்கள் இந்தக் குறிகாட்டிகளை தயாரிப்பதற்காக பல்வேறு ஆலோசனைக்கூட்டங்களில் கலந்துகொண்டனர். சிகிச்சைக் குறிகாட்டிகள் சுகாதார கவனப்பராமரிப்பு தரத்தை கண்காணிக்கும் ஒரு கருவியாக உள்ளன. பல்வேறு சுகாதார குறிகாட்டிகள் உலகம் பூராவும் சுகாதார கவனப்பராமரிப்பு முறைமையில் இருக்கின்றன என்பதோடு எமது நாட்டிற்கு பொருத்தமானதாகவும், கண்காணிப்பதற்கு இலகுவானதாகவும் இருக்கின்ற சில முக்கியமான சிகிச்சைக் குறிகாட்டிகளை நாம் அடையாளங்கண்டுள்ளோம்.

- **தேசிய அங்கீகார முறைமையினைத் தாபித்தல் [சுகாதார கவனப்பராமரிப்பு தரநியமங்கள் மீதான இலங்கைப் பேரவை(SLCHS)]**

தேசிய அளவிலான அங்கீகார முறைமையினைத் தாபித்தல் ஆபத்துக்களைக் குறைக்கும் அதேநேரத்தில் சுகாதார சேவையினை வழங்குவது தொடர்பான தரத்தையும் மேம்படுத்தும். அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அங்கீகார குழுவான சுகாதார கவனப்பராமரிப்பு தரநியமங்கள் மீதான அவுஸ்ரெலியப் பேரவை(ACHS), உள்ளூர் அங்கீகார முறைமையொன்றினை செயற்படுத்துவதில் அவர்களின் நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்ளுவதற்கானதொரு ஒத்துழைப்பு பங்காளியாக அடையாளங்கண்டுள்ளது [சுகாதார கவனப்பராமரிப்பு தரநியமங்கள் மீதான இலங்கைப் பேரவை(SLCHS)]

- **"பிரதிபலிக்கின்ற பரிவான சேவை" தொலைகாட்சி ஆவணப்படம்**
  ("Senehasin Suwandanaya")

சுகாதார போசணை மற்றும் சுதேசிய வைத்திய அமைச்சின் சுகாதார கவனப்பராமரிப்பு தரம் மற்றும் பாதுகாப்பு பற்றிய நிலையம் சுதந்திர தொலைக்காட்சி வலையமைப்பின் தொழில்நுட்ப உதவியுடன் சுகாதார கவனப்பராமரிப்பிலுள்ள பொறுப்புணர்வு மீதான தொலைக்காட்சி ஆவணப்படத் தயாரிப்பினை பூர்த்தி செய்துள்ளது. இது இரகசியத்தன்மை, தன்னிருப்புரிமை, கௌரவம், வசதிகள் மற்றும் கவனப்பராமரிப்பின் போது சமூக ஆதரவு போன்ற சுகாதார கவனப்பராமரிப்பின் நோயாளிகள் / நுகர்வோர் ஆகியோரின் சுகாதாரமற்ற எதிர்பார்ப்புகளுக்கு பதிலளிக்கும் காலத்தின் தேவையை கையாளும் நோக்கத்துடன் செய்யப்பட்டது.

❖ ஜேர்மனி Bonn இல் நோயாளர் பாதுகாப்பு 2017 தொடர்பான உலகளாவிய அமைச்சர்கள் மாநாட்டில் பங்குபற்றல்

இந்த உலகளாவிய மாநாடானது உலக சுகாதார நிறுவனம் (WHO), உலக வங்கி, OECD மற்றும் ஐரோப்பிய பேரவை உட்பட 40 இற்கு மேற்பட்ட அரசுகளைச் சேர்ந்த அமைச்சர்களினாலும், சர்வதேச அமைப்புக்களைச் சேர்ந்த உயர்மட்ட பிரதிநிதிகளினாலும் உலக சுகாதார நிறுவனத்தினால்(WHO) இணை அனுசரணை வழங்கப்பட்ட ஒரு நிகழ்வான இரண்டவது அமைச்சர்கள் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. இந்த மாநாடானது உலகில் நோயாளர் பாதுகாப்புக்கு முகம்கொடுக்கின்ற சவால்களுக்கு நடவடிக்கை மேற்கொண்டது. அத்துடன் பொருளாதாரம், நோயாளர் பாதுகாப்புப் பற்றிய வினைத்திறன் அத்துடன் உலகளாவிய பண்டமாற்று உட்பட தலைப்புக்களின்தொகுதி தொடர்பாகவும் மேலும் விவாதிக்கப்பட்டது.

❖ சர்வதேச நோயாளர் பாதுகாப்புத் தினத்தை நினைவுகூறல்

சர்வதேச நோயாளர் பாதுகாப்புத் தினத்தை நினைவுகூறல் சுகாதார போசணை மற்றும் சுதேசிய வைத்திய அமைச்சர் கௌரவ வைத்தியகலாநிதி ராஜித சேனாரத்ன அவர்களின் முன்னிலையில் "பாதுகாப்பான கலாசாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவோம்" என்னும் கருப்பொருளின் கீழ் நடைபெற்றது. நோயாளர் பாதுகாப்பு என்பது சுகாதார கவனப்பராமரிப்பின் ஓர் அடிப்படைக் கோட்பாடாகும். சுகாதார கவனப்பராமரிப்புடன் தொடர்புடைய நோயாளிகளுக்குரிய பிழைகளையும், பாதகமான விளைவுகளையும் தடுப்பதாக இது உள்ளது. கவனப்பராமரிப்பிலுள்ள ஒவ்வொரு விடயமும் இயல்பாகவே பாதுகாப்பற்ற குறித்த படிநிலையைக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நோயாளிகள் சுகாதார கவனப்பராமரிப்பின் போது நிரந்தர ஊனத்தை ஏற்படுத்தியோ, சுகாதார கவனப்பராமரிப்பின் போது அதிக காலம் தங்குவதை அதிகரித்தோ துன்பத்திற்குள்ளாக்கப்படுகின்றனர் அல்லது சில வேளைகளில் மரணம்கூட ஏற்படுகின்றது. மருத்துவ பாதுகாப்பு, அறுவை சிகிச்சை பராமரிப்பு, பாதுகாப்பான மகப்பேறு மற்றும் பெண்ணோயியல் கவனப்பராமரிப்பு அத்துடன் தொற்றுநோய் கட்டுப்பாடு ஆகியவை ஒரு நூற்றாண்டுக்கு மேலாக உலகம் பூராவும் அவசியமானதொரு சுகாதார கவனப்பராமரிப்புக் கூறுகளாக உள்ளன. சுகாதார அமைச்சின் பணிப்புரைகளின் கீழ், சுகாதார கவனப்பராமரிப்பு, தரம் மற்றும் பாதுகாப்பு நிலையமானது, "பாதுகாப்பான அறுவைச்சிகிச்சை உயிர்களைப் பாதுகாக்கிறது" என்னும் உலக சுகாதார நிறுவனத்தின்(WHO) குறிக்கோளுக்கு இணங்க அறுவைச்சிகிச்சை பாதுகாப்பினை மேற்கொள்வதற்கு கணிசமான பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அத்தகைய செயற்பாடுகளாக அறுவைச்சிகிச்சை இட தொற்றுப் பாதுகாப்பு, பாதுகாப்பான மயக்கமருந்து மற்றும் பாதுகாப்பான அறுவைச்சிகிச்சைக் குழுக்கள் என்பவையே அவையாகும். உலக சுகாதார நிறுவனத்தின்(WHO) அறுவைச்சிகிச்சை பாதுகாப்பு பரிசோதனைப்பட்டியல் பிளைகளையும், தீங்கு விளைவிக்கும் சம்பவங்களையும் குறைப்பதனையும், அறுவைச்சிகிச்சையில் குழுச்செயற்பாட்டினையும்,தொடர்பாடலையும் அதிகரிப்பதனையும் நோக்காகக் கொண்டு விரிவான கலந்தாலோசனையின் பின்னர் விருத்தி செய்யப்பட்டது. இலங்கையானது தற்போது பெரிய வைத்தியசாலைகள் எல்லாவற்றினாலும் கடைப்பிடிக்கப்படுகின்ற அதே பரிசோதனைப்பட்டியலைப் பின்பற்றியது. மேலும் 23 தரக் குறிகாட்டிகள் 04 தனிக்கூறுகள்(மருத்துவம், அறுவைச்சிகிச்சை, மகப்பேறு மற்றும் பெண்ணோயியல் அத்துடன் குழந்தை மருத்துவம்) மற்றும் நுண்ணுயிரியல் என்பவற்றின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. எல்லா வைத்தியசாலைகளும் ஒவ்வொரு காலாண்டும் தங்களுக்குரிய நிறுவகங்களில் இடம்பெறும் ஏதேனும் பாதகமான நிகழ்வு பற்றி தெரிவிக்கின்றன என்பதோடு, சுகாதார கவனப்பராமரிப்பு, தரம் மற்றும் பாதுகாப்பு நிலையமானது தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஒவ்வொரு பாதகமான நிகழ்வினையும் முக்கியமாக பகுப்பாய்வு செய்கின்றது, தெளிவான கொள்கைகள், நிறுவனரீதியான தலைமைத்துவ ஆற்றல், பாதுகாப்பான மேம்படுத்தல்களை மேற்கொள்வதற்கான தரவு, திறன்மிக்க சுகாதார கவனப்பராமரிப்பு தொழில் நிபுணர்கள் மற்றும் தங்களின் கவனப்பராமரிப்பிலுள்ள நோயாளர்களின் பயனுறுதிவாய்ந்த ஈடுபாடு எல்லாம் சுகாதார கவனப்பராமரிப்பு பாதுகாப்பில் நிலையான மற்றும் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை நிட்சயப்படுத்துவதற்கு தேவைப்படுகின்றன.

கொள்கை விருத்தியும், வெளியீடுகளை அறிமுகப்படுத்தலும்

❖ தேசிய சுகாதார கணக்கீட்டின் முதல் வெளியீட்டினை அறிமுகப்படுத்தல்



சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு கொழும்பில் அதன் முதல் தேசிய சுகாதார கணக்குகளை(NHA) 2013 அறிமுகப்படுத்தியது. இத்தேசிய சுகாதார கணக்குகள் இலங்கையில் 20.5 மில்லியன் மக்களால் பயன்படுத்தப்படுகின்ற சுகாதார பராமரிப்புப் பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக நிதியளிப்புக்களை கண்கிட்டு நாட்டின் சுகாதார கவனப்பராமரிப்பு நிதியளிப்பு பற்றிய ஒரு முழுமையான விளக்கத்தை கொடுக்கின்றன. இத்தேசிய சுகாதார கணக்குகள் சுகாதாரத்துறை நிதியளிப்புக்காக இப்போதுள்ள இடைவெளிகளையும், முன்னுரிமைகளையும் அடையாளங்காணக்கூடிய கொள்கை வகுப்பாளர்களுக்கு முக்கியமான தகவலை வழங்குகின்றது. 2013 ஆம் ஆண்டிற்கான தற்போதைய சுகாதார செலவினம்(CHE) கிட்டத்தட்ட 176 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது என்று தேசிய சுகாதார கணக்குகள் தெரிவித்துள்ளன. 2013 இல் சுகாதார செலவினம்(CHE) மீது தனிநபருக்காக 97.2 அமெரிக்க டொலர்களை அரசாங்கம் செலவு செய்தது. இது 1995 இல் தனிநபருக்கான 25 அமெரிக்க டொலர்களிலிருந்து ஏற்பட்ட பாரிய அதிகரிப்பாக உள்ளது. 2013 இல் அரசாங்க சுகாதார முறைமையில் கிட்டத்தட்ட 5.9 மில்லியன் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர் அனுமதிகளும், 53.8 மில்லியன் வெளி நோயாளர் வருகைகளும் பதிவாகின என்று இத்தேசிய சுகாதார கணக்குகள் 2013 வெளிப்படுத்தின.

"I would like to congratulate Sri Lanka on becoming the first country in the WHO South-East Asia Region to complete the National Health Accounts based on the WHO guidelines for the System of Health Accounting (2011). This is a very important step towards the creation of improved health policies, a stronger health system and the achievement of Universal Health Coverage in Sri Lanka," highlighted Dr Jacob Kumaresan, WHO Representative to Sri Lanka 2016.

சுகாதார கணக்கீட்டு முறைமைக்கான உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுநெறிகளின் அடிப்படையில் தேசிய சுகாதார கணக்குகளை பூர்த்தி செய்வதற்கு உலக சுகாதார நிறுவனத்தின் தென் - கிழக்காசியப் பிராந்தியத்திலுள்ள முதல் நாடாக திகழுகின்ற இலங்கையைப் பாராட்ட விரும்புகிறேன். இது ஸ்திரமான சுகாதார முறைமையொன்றாக இருக்கின்ற மேம்படுத்தப்பட்ட சுகாதார கொள்கைகளின் உருவாக்கத்தை நோக்கிய மிக முக்கியமான முதற்படியாக இருப்பதோடு, இலங்கையில் உலகளாவிய சுகாதார காப்பீட்டின் சாதனையாகவும் உள்ளது என்று 2016 ஆம் ஆண்டு இலங்கைக்கான உலக சுகாதாரப் பிரதிநிதி கலாநிதி ஜகொப் குமரேசன் என்பவர் சுட்டிக்காட்டியிள்ளார்

- **மதுபானத்தின் மீதான தேசிய கொள்கையொன்றை அறிமுகப்படுத்தும் முதல் நாடாக இலங்கை மாறியுள்ளது.**

புகையிலை மற்றும் மதுபானம் பற்றிய தேசிய அதிகாரசபை (NATA) குறிப்பிட்டவாறு, ஏனைய நாடுகள் புகையிலை தொடர்பான தேசியக் கொள்கையொன்றை கொண்டிருக்கும் அதேவேளையில், மதுபானத்தின் மீதான தேசிய கொள்கையொன்றை அறிமுகப்படுத்தியதன் மூலம் இலங்கையானது புகையிலை மற்றும் மதுபான கட்டுப்பாட்டிற்காக தேசிய கொள்கைகளைக் கொண்டிருக்கும் ஒரேயொரு நாடாக இலங்கை மாறியுள்ளது. "மதுபானமற்ற இலங்கையை நோக்கி" என்னும் தொனிப்பொருளின் கீழ் சுகாதார அமைச்சினாலும் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான அதிகார சபையினாலும் கூட்டாக ஒழுங்குசெய்யப்பட்ட தேசிய மதுபான மாநாடு 2016 இல் இக்கொள்கையானது அறிமுகப்படுத்தப்பட்டது. மதுபானம் தொடர்பானதேசியகொள்கையானது , புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான அதிகாரசபையின் கூட்டத்திற்கிணங்க மதுபான வியாபாரம்தொடர்பான விலையிடல் வியாபாரம் மற்றும் முதலீட்டுக்கொள்கைகள் ,மதுபான உற்பத்திகளுக்கான அணுகுவழி கிடைப்பதை குறைத்தல் , மதுபான கட்டுப்பாடு பற்றிய தேசியகொள்கை மீது மதுபான கைத்தொழில் தலையீட்டைத் தடுத்தல் அத்துடன் மதுபான கட்டுப்பாடுதொடர்பான தேசியக்கொள்கையினை நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல் ஆகியவை உட்பட 10 குறிக்கோள்களைக்கொண்டுள்ளது. மதுபானமானது 60 வகையான நோய்களுக்கும் , புண்களுக்கும் தற்காலிக காரணமாக இருப்பதோடு , ஏனைய 200 வகையான நோய்களுக்கு பகுதிக் காரணமாகவும் உள்ளது. இலங்கையில் , ஒவ்வொரு பத்து இறப்புக்களில் ஏழு இறப்புக்கள்தொற்றாநோய்கள் (NCD) காரணமாக ஏற்படுகின்றன மதுபான நுகர்வானது நான்கு தற்காலிக காரணங்களில் ஒன்றாக அடையாளங் காணப்பட்டிருக்கிறது . புகையிலைப்

பாவனை , சுகாதாரமற்ற உணவுப்பழக்கங்கள் மற்றும் உடற்பயிற்சியின்மை என்பவையே ஏனைய மூன்று காரணங்களாக உள்ளன.

❖ நடைமுறை அனுபவம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து, கருவி, செயல்முறை நுண்ணுயிர்க் கொல்லிப்பாவனை தொடர்பாக தேசிய வழிகாட்டு நெறிகள் பற்றிய வைபவத்தினை ஆரம்பித்தல்

நுண்ணுயிர்களுக்கு எதிரான நடைமுறை அனுபவம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்து ,கருவசெயன்முறைப் பிரயோகம் மீதானதேசிய வழிகாட்டு நெறிகள் கௌரவ சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ராஜூதசேனாரத்தன அவர்களின் முன்னிலையில் அறிமுகப்படுத்தப்பட்டது . உலகம் தற்போது முகம் கொடுக்கின்ற மிகப்பெரிய பொது சுகாதார அச்சுறுத்தல்களில் ஒன்றாக நுண்ணுயிர்களுக்கு எதிரான தடுப்பு (AMR) காணப்படுகிறது . 2050 ஆம் ஆண்டளவில் ஆசிய பிராந்தியத்தில் மட்டும் 4.7 மில்லியன் மரணங்களுக்கு இந்த AMR பொறுப்பாக இருக்கும். என்று மதிப்பிடப்பட்டுள்ளது. நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளால் கொல்லப்படாத அல்லது தடுக்கப்படாத நுண்ணுயிர்களின் உலகளாவிய வளர்ச்சிப்போக்கினை நுண்ணுயிர்களுக்கு எதிராக தடுப்பு குறுப்பிடுகின்றது. அதன் விளைவாக , மருந்துகள் வினைத்திறனற்றதாக மாறியுள்ளதோடு ,தொற்றுநோய்கள் மற்றவர்களுக்கு பரவும் அபாயத்தினை அதிகரித்து உடலில் தொடர்ந்திருக்குன்றன. AMR நவீன மருத்துவத்தின் வினைத்திறனை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குவதோடு , நீண்ட காலநோய் இயலாமை , மற்றும் மரணம் என்பனவற்றை ஏற்படுத்துகின்றபொதுவான தொற்றுநோய்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான எமது ஆற்றலையும் குறைக்கிறது. உறுப்பு மாற்று ,வேதியல் மருந்து சிகிச்சை மற்றும் பாரிய சத்திரசிகிச்சை போன்ற மருத்துவ நடவடிக்கைமுறைகள் சத்திர சிகிச்சையின் பின்னரானதொற்றுக்கான கட்டுபடுத்துவதற்கு வினைத்திறன் மிக்க நுண்ணுயிர்க்கொல்லிகள் இன்மையினால் மிகப்பெரும் ஆபத்தாக மாறுகின்ற படியினால் AMR ஆனது ஆரோக்கியத்தின் மீது பாரியதொரு தாக்கத்தினையும் ஏற்படுத்தும் .மனித மற்றும் மிருக சுகாதாரத்தில் தொற்றுநொய்களுக்கான சிகிச்சைக்காக நுண்ணுயிர்க்கொல்லிகளின் தவறான பிரயோகத்தின் மூலம் AMR பிரதானமாக ஏற்படுத்தப்படுகிறது . நுண்ணுயிர்கொல்லிகள் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைகளில் வளர்ச்சிமேம்படுத்திகளாக மேலும்மேலும் பயன்படுத்தப்படுகின்றன. WebMD மீதான உலகளாவிய ஆய்வொன்றின் படி , சுகாதார கவனப்பராமரிப்பு நிபந்தனைகளில் 95% மானவர்கள் நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகள் தேவைப்படாதபோதிலும் அவற்றை எழுதிக்கொடுக்கின்றனர் .மக்கள் தடுமல் மற்றும் சளிக்காய்ச்சல் போன்றவைரஸ் தொற்றுக்களுக்கு அடிக்கடி நுண்ணுயிர்க்கொல்லிகளைப் பயன்படுத்துகின்றனர். எவ்வாறாயினும் , நுண்ணுயிர்க்கொல்லி

மருந்துகள் பக்றீரியாதொற்றுநோய்களுக்கு எதிராக மட்டுமே வினைத்திறன் மிக்கதாக உள்ளன.
இந்தபொதுவான நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளின் தவறான பிரயோகமானது தொற்றுவதற்கான AMR ஐ ஏற்படுத்துகிறது. சரியான மருந்துப் பாவனையை நிட்சயப்படுத்துவதற்காக உலகளாவிய மற்றும் தேசியளவில் அவசரமானதும் ,ஒருங்கிணைக்கப்பட்டதுமான நடவடிக்கை தேவைப்படுகிறது.நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளின் விகிதாசார மருந்துக் குறிப்பை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையானது அணமையில் நுண்ணுயிர்களுக்கு எதிரான நடைமுறை அனுபவம் ,நோய்த்தடுப்பு மருந்து ,கருவி ,செயல்முறை என்பவற்றின் மிதான தேசிய வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தியுள்ளது.இந்த வழிகாட்டுநெறிகள் பொதுவான பக்றீரியாதொற்றுநோய்களுக்கு சிபார்சுசெய்யப்பட்ட மருந்தின் அளவைக்கொண்டிருக்கின்றன . அதுதொற்றுநோய்களை கட்டுப்படுத்தபெரியளவில் உதவும் என்பதோடு ,நுண்ணுயிர்க்கொல்லி மருந்துகளுக்கான தடுப்பினை குறிப்பிடத்தக்க அளவு குறைக்கும்.

❖ முதியோர் கவனப் பராமரிப்புக் கொள்கையை ஆரம்பித்தல்

இலங்கையில் (60 வயது மற்றும் அதற்குமேற்பட்ட) முதியோர்களின் எண்ணிக்கை 2021 இல்மொத்தச் சனத்தொகையில் 12.5 வீத்திலிருந்து 16.7 வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது . இலங்கையில் ஒவ்வொரு நாலுபேருக்கு ஒருவர் முதியவராக இருக்க எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையானது ஆசியாவில் விரைவாக அதிகரித்து வருகின்ற முதியொர்களின் எண்ணிக்கையைக்கொண்டிருக்கும் என்றுசொல்லப்படுகிறது. முதியோர்களின் எண்ணிக்கையானது விரைவாக அதிகரிப்பது மட்டுமல்லாமல் உள , உடல் ரீதியான மனத்தாக்கத்தின் கீழும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.பத்துநோயாளிகளில் ஆறுபேர் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் வைத்தியசாலையில் தங்கியுள்ள இளைஞர் ,மற்றும் நடுத்தர வயதினருடன் ஒப்பிடும் போது முதியோர்களே அதிகமாக காணப்படுகின்றனர்.2001 இல் குறிப்பிடப்பட்ட 1.7 மில்லியன் முதியோர் எண்ணிக்கையானது 2021 ஆம் ஆண்டளவில் 3.6 மில்லியனவாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 20வருடகாலப்பகுதியில் முதியோர்களின் எண்ணிக்கை இருமடங்காக காணப்படும். (60 வயது மற்றும் அதற்குமேற்பட்ட) முதயோர்களின் எண்ணிக்கை 2021 இல் 12.5 சதவீதத்திலிருந்து 16.7 சதவீதத்திற்கு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது .2041 ஆம் ஆண்டளவில் இலங்கையில் ஒவ்வொரு நாலுபேரில் ஒருவர் முதியொராக இருப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.
2001இல் வேலைசெய்யும் வயதுடைய நபர்களில் ஒவ்வொரு 100பேருக்கும் 55 நபர்கள் தங்கிவாழ்வோர்களாக இருந்தனர். தங்கிவாழ்வோரின் மொத்த எண்ணிக்கையானது 2016

ஆம் ஆண்டளவில் 55.9 வீதமாக ஆக அதிகரிக்கும் என்பதோடு , இது 2031 ஆம் ஆண்டளவில் 58.3 வீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது . முதியோரின் தங்கி வாழும் நிலைமையால் ஏற்பட்டவேகமான அதிகிப்பின் விளைவாக ,இளைஞர் தங்கிவாழும் நிலையில் குறைவை ஏற்படுத்துகிறது .திட்டமிடப்பட்ட தங்கிவாழும் நிலையானது 2014 ஆம் ஆண்டின் பின்னர் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும் (2012) ஒக்டோபர் 10 ஆம் திகதிய உலகவங்கி அறிக்கை பற்றிய ஆவணம்)

ஓய்வுதிய முறையானது (60 வயது மற்றும் அதற்குமேற்பட்ட) முதியோர்களின் 10தொடக்கம் 15 வீதத்தினரை மட்டும் உள்ளடக்குகின்ற காரணத்தினால் முதியோர்களை விட்டுச்செல்லுதல் குடும்பங்களின் மீது சார்ந்திருக்கின்றது என்பது மேலும் திகிலூட்டுவதாகவுள்ளது.மேற்படி அவசர தெவையை புரிந்துகொண்டு ,சுகாதார மற்றும் சுதேசவைத்திய அமைச்சின் இளவயதினர் ,முதியோர் மற்றும் இயலாமையுடையோர் பிரிவானது ,யப்பான் சர்வதேச கூட்டுத்தாபன மகவராண்மை மற்றும் யப்பான் நகனோ கிராமிய சுகாதார பயிற்சி நிலையம் (RHTC) என்பவற்றால் நிதியுதவியளிக்கப்படுகின்ற மிகவும் தேவையான முதியோர் கவனப்பராமரிப்பு கொள்கையில் ஈடுபட்டுள்ளது.

❖ சுகாதார தகவல் தொடர்பான தேசிய கொள்கை



இத் தேசிய கொள்கை தொலைத் தொடர்புகள் மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சு,சனத் தொகை மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம்,பதிவாளர் நாயகத் திணைக்களம்,உல.சுகா.தாபனம்,உலக வங்கி மற்றும் ஏனைய நிதியளிப்பு முகவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களது பங்களிப்புடன் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான தகவல் முகாமைக்கு இழைவரிவடிவம் கொடுப்பதற்குமாக விருத்தி.சுகாதாரத் தகவல் தொடர்பான வளங்கள்,சுட்டிக் கருவிகள் மற்றும் அடிப்படைத் தரவுகள்,தரவுகள் மற்றும் தகவல் முகாமை,தரவுகள்/தகவல் பாதுகாப்பு,வாடிக்கையாளர் அந்தரங்கம்,இரகசியத் தன்மை மற்றும் ஒழுக்கவியல்,மின் - சுகாதாரம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்கள் தொடர்பான விடயத்தரப்புக்களில் தகவல்களை வழங்கும் கொள்கைக்கு 2017 ஜனவரி 3ம் திகதி அமைச்சரவை சிபார்சு வழங்கியுள்ளது. இலங்கையின்

❖ "சுகாதாரத்துறையின் அங்கமான தேசிய சத்துணவு நிகழ்ச்சித் திட்டத்தின் செலவு" தொடர்பான அறிக்கையை வெளியிடல்

இலங்கையின் சுகாதாரத்துறையின் அங்கமான தேசிய சத்துணவு நிகழ்ச்சித் திட்டத்தின் செலவு தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டது. இது UNICEF இன் அனுசரணை ஆதரவுடன் தயாரிக்கப்பட்டு, சுகாதார அமைச்சிடம் வழங்கப்பட்டது.

❖ அவசர பராமரிப்பிற்கான பெறுகை வழிகளை விஸ்தரித்தல்

இது நாடு பூராகவும் 14 விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்தி நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தற்பொழுது இவற்றில் நான்கின்(யாழ். போ.வைத்தியசாலை, கல்முனை ஆதார வைத்தியசாலை, பொலநறுவை மாவட்ட பொதுவைத்தியசாலை மற்றும் களுத்துறை ஆதார வைத்தியசாலை) கட்டுமான வேலைகள் இடம் பெற்று வருகின்றது. ஏனைய 6 பிரிவுகளிற்கு விலைமனு கோரபட்டுள்ள நிலையில் 2017 இல் கட்டி முடிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 14 விபத்து, அவசரப் பரிவுகள் இவ்வருடத்திற்குள் செய்து முடிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுகின்றது. இது அவசர சிகிச்சைக்கான பெறுகை வழிகளை அதிகரிக்கச் செய்வதுடன் அனாவசியமான சிக்கல் தன்மைகளை தடுப்பதுடன் உயிர் இழப்புக்களையும் தடுக்கும். இந்திய அரசின் உதவியுடன் மருத்துவம் தொடர்பாகப் பயிற்றப்பட்டவர்களுடன் கூடிய வீடு - வைத்தியசாலைகளிற்கு இடையிலான அம்பியுலஸ் சேவையை அரசு நாடு முழுவதும் 2017, 2018 இல் விஸ்தரித்து வழங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

❖ இலங்கையின் அரச வைத்தியசாலைகளில் விபத்து மற்றும் அவசர பராமரிப்பு சேவைகளிற்கான வழிகாட்டல்களை வெளியிடல்



❖ முதல்நிலைப் பராமரிப்பு சீராக்கம் - சகலருற்கும் ஒரு குடும்ப வைத்தியர்

சுகாதார அமைச்சு வைத்தியசாலைகளில் முதல் நிலைப் பராமரிப்பு மட்டத்தை மீள் அமைத்து ஸ்திரப் படுத்துவதற்கு ஆர்வமாகவுள்ளது. அதாவது நிபுணர்களல்லாத வைத்தியசாலைகளில் வீட்டிற்கு அருகமையில் ஒரு குடும்ப வைத்தியர் என்ற வகையில் மக்களிற்கு சேவையை வழங்குவதற்கு 5000 பேரிற்கு ஒரு குடும்ப வைத்தியர் என்ற வகையில் வீட்டிற்கு அருகமையில் முதல் நிலைப் பராமரிப்பு சிகிச்சை வசதிகளின் பயன்களைப் பெற்றுக் கொள்வதே இதன் நோக்கமாகும். நாட்டில் உள்ள சகல வைத்தியசாலைகளும் கொத்தணிகளாக இருக்கும். ஒரு கொத்தணி ஒரு மேல்நிலை நிபுணத்துவ பராமரிப்பு வைத்தியசாலையாக இருப்பதுடன் இது (தற்பொழுது வகைப்படுத்தப்பட்டவை - போதனா வைத்தியசாலை, பொது வைத்தியசாலை, மாகாண வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலை) முதல் நிலைப் பராமரிப்பை வழங்கும் வைத்தியசாலைகளினால் சூழப்பட்டும் (தற்போது பிரதேச வைத்தியசாலை, முதல் நிலை வைத்திய பராமரிப்புப் பிரிவுகள்) இருக்கும். அவற்றுள் ஒரு கொத்தணி மற்றும் அதனது வைத்தியசாலைகள் எவை வரையறுக்கப்பட்டனவாக காணப்படும்.

உடனிருந்த பராமரிப்பு கொத்தணி என அறியப்பட்ட முன்மொழியப்பட்ட மீள் உருவாக்கம் பின்வரும் பயன்களைக் கொண்டிருக்கும்.

அ) முதல் நிலைப் பராமரிப்பு வைத்தியசாலைகளில் சகல அத்தியவசியமான NCD வைவைத்திய மற்றும் அடிப்படை ஆய்வுகூடப் பரிசோதனைகள் உட்பட சிறந்த வெளிநோயாளர் பராமரிப்பு.

ஆ) முதல் நிலைப் பராமரிப்பு வைத்தியசாலைகளில் அடிப்படை அவசர பராமரிப்பு சேவைகளை வழங்கல்.

இ) சகலரிற்கும் கிடைக்கக் கூடியதான ஒரு குடும்ப வைத்தியர். இதற்காக அதிகளவிலான வைத்தியர்களை சில கிராம சேவகர் பிரிவுகளிலும் நியமிக்கப் படுவர்.

ஈ) நிபுணத்துவ பராமரிப்பிற்கான பெறுகை வழிகளை உறுதிப்படுத்தல், தீங்கான வெளிப்பாடுகளை வருமுன் தடுத்தல் என்பவற்றிற்கான தகவல் முறைமைகளை நிறுவுதல்.

உ) கட்டம் கட்டமாக நிறைவேற்றக் கூடிய வகையில் ஒவ்வொரு குடிமக்களிற்கும் கிடைக்கக் கூடிய வகையிலான தனிநபர் சுகாதாரப் பதிவேடு.

ஊ) சகல முதன் நிலை மட்ட வைத்தியசாலைகளிலும் ஒரு சுகாதார முறையான வழ்க்கை முறை மற்றும் தொற்றா நோய்க்களிற்கான அபாய நேர்வில் இருந்து பாதுகாபளிக்கப்பட்ட மற்றும் தொற்றா நோய்க்களிற்கான வைத்திய சிகிச்சை பெற்று வருபவர்களிற்கான முழுநேர சுகாதார வாழ்க்கை முறைக்கான வழிகாட்டல்களை வழங்குதல்.

எ) கஸ்ட மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் சுகாதாரப் பணியாட்களின் தொடர்ச்சியான சேவையை உறுதிப்படுத்துவதன் மூலம் மக்களிற்கு வழங்கப்படும் வதிவிட வசதிகளை இப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக வழங்கல்.

ஏ) *முதல் நிலைப் பராமரிப்பு வைத்தியர்கள் நிபுணத்துவ வைத்தியர்களின் ஆதரவு முறைமையும் தொடர்பும் இருப்பதன் மூலம் முதல் நிலைப் பராமரிப்பு வைத்தியர்களின் சிகிச்சைத் திறன்களை மேம்படச் செய்தல்.*

ஐ) *முதல் நிலை மட்ட வைத்தியசாலைகளில் ஒரு சமுதாயத்திற்கான தாதி ஒருவரை நியமிப்பதன் மூலம் அவர் முதியவர்கள், இயலாதவர்கள், இயக்கத் தன்மை குறைந்தவர்களிற்கு வேண்டப்படும் பராமரிப்புக்களை வீடுகள் வரை சென்று வழங்கக் கூடியதாகச் செய்தல்.*

ஒ) *இந்த மீள் உருவாக்கம் குறிப்பாக தொற்றா நோய்களிற்கான உலகளாவிய பெறுகை வழிகள் மூலம் மக்களிற்கு நன்மைகள் ஏற்படுவதனை உறுதி செய்யும் பொருட்டு முதன் நிலைப் பராமரிப்பு வைத்தியசாலைகளை எதிர்காலத்தில் கண்காணித்தல்.*

ஓ) *சுகாதார அமைச்சு வட மாகாணத்தில் மீள் - உருவாக்கத்தை ஆரம்பிக்கவுள்ளது*

❖ முதல் நிலை சுகாதாரப் பராமரிப்பு மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களின் சேவைகளின் முக்கியத்துவமும்

மேலும் உலக வங்கியின் உதவியுடன் முதல் நிலை சுகாதாரப் பராமரிப்பு மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்களின் சேவைகளைமுன்னேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. ஆரம்பக் கட்ட கலந்துரையாடல்கள் உலக வங்கியின் உத்தியோகத்தர்களிற்கும் சுகாதார, போசாக்கு மற்றும் சுதேசவைத்திய அமைச்சுக்கும் இடையில் இடம்பெற்றுள்ளன.கூட்டத்தில் உலக வங்கி அலுவலகர்கள் இலங்கையின் முதல் நிலை சுகாதாரப் பராமரிப்பு மற்றும் தற்போதைய அபிவிருத்தி, தர முறைமைகள் ஏனைய நாடுகளிற்கு முன் மாதிரியான எடுத்துக்காட்டாக உள்ளதாக கூறியுள்ளனர்.

❖ தனியார் சுகாதாரப் பராமரிப்பு முறைமைகளில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளும் அபிவிருத்தியும்

சுகாதார, போசாக்கு மற்றும் சுதேசவைத்திய அமைச்சர் இராஜிதசேனாரத்தின மற்றும் தனியார் வைத்தியசாலைகளின் சங்க அங்கத்தவர்களுக்கும் இடையில், தனியார் வைத்தியசாலைகளினால் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை அடையாளம் காணல் மற்றும் மேலும் அதனை ஸ்திரப்படுத்தல், வழங்கப்படும் சேவைகளை முன்னேற்றலை நோக்கமாகக் கொண்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

ஆயுர்வேதத் துறையின் விருத்தி.

❖ 2016 - ஆயுர்-வே-எக்ஸ்போ



2016 - ஆயுர்வேத எக்ஸ்போ மெகா கண்காட்சி 4வது தடவையாக சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு மற்றும் ஏனைய அரச நிறுவனங்களுடன் இணைந்து தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் நடத்தப்பட்டது. 2016 ஆயுர்வேத எக்ஸ்போ கண்காட்சி, ஆயுர்வேத/மூலிகை, இயற்கை, சுகாதாரமான உணவுகள் மற்றும் பானங்கள், ஆரோக்கியமாக றிசோட்ஸ்/ஸ்பா, ஆயுர்வேத வைத்தியசாலைகள்/சிகிச்சைகள், கல்வி நிறுவனங்கள் ,யோகா, அக்குபஞ்சர்,கோமியோபதி, அழகியல் பராமரிப்பு உற்பத்திகள், மூலிகை அழகுசாதனப் உற்பத்திகளை மையப்படுத்திளதாக இருந்தது.

❖ **2017 இலங்கை சர்வதேச "றேட்மிட்"("TradMed")**

சுகாதார,போசாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், உலக சுகாதார அமைப்புடன் இணைந்து மரபு மற்றும் பூரணமானவைத்தியம், கல்விக் கண்காட்சி தொடர்பான சிம்போசியத்தையும் மற்றும் இலங்கையின் 2017 சர்வதேச "றேட்மிட்" வர்த்தக விழாவினையும் நடாத்தியது. சர்வதேச சிம்போசியத்தின் நோக்கம் மரபு முறையான வைத்தியத்தின் செயன்முறையை அடிப்படையாகக் கொண்ட அனுபவ முறைகள் மூலம் நோய்களை வருமுன் காத்தல், நோய் நிருணயம், முகாமையில் நவீன விஞ்ஞான,தொழில்நுட்பம்,நோய் நிருணய கருவிகள், உயிரியல் - வைத்திய தகவல் முறைமைகளை மரபு முறையான வைத்யைத்துடன் தொடர்புபட்ட பாதுகாப்பான மற்றும் பயனுறுதியான உற்பத்திகளை தரமானதாக விருத்தி செய்தல் ஆகும். சர்வதேச சிம்போசியத்தின் இன்னுமொரு எதிர்பார்க்கப்பட்ட தனித்தன்மை கொழும்புப் பிரகடனம்/ கூற்றை வெளியுடல் அத்துடன் சிம்போசியத்தின் முக்கியமான விளைவுகளை வெளிக்கொணர்ந்து நடைமுறைப்படுத்தல். பங்குபற்றிய நாடுகளின் அமைச்சர்கள் மட்டத்திலான கடப்பாடாகவும் இருந்தது. பார்வையாளர்களாக சர்வதேச , உள்ளூர் ஆயுர்வேத ,சித்தமருத்துவம், யுனானி மற்றும்மரபு / சுதேசவைத்திய முறை, இயற்கை/மூலிகை உற்பத்திகளை விருத்தி செய்யும் ஆய்வாளர்கள், கல்விமான்கள், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள், தொழிற்துறை சார்ந்தோர்,கைத்தொழிலாளர், கண்டுபிடிப்பாளர், கொள்கை வகுப்பாளர்களை இலக்காகக் கொண்ட சுதந்திரமான பொது மக்கள், மற்றும் சகலருக்குமான வர்த்த விழாவை குறியிலக்காக் கொண்டது.

❖ **பண்டாரகமவில் புதிய ஆயுர்வேத வைத்தியசாலையைத் திறந்து வைத்தல்**

புதிய இரண்டு மாடி வாட்டுக்களைக் கொண்ட கட்டிடத் தொகுதி பண்டாரகம வீதிய கொடவில் அரச ஆயுர்வேத வைத்தியசாலை சுகாதார,போசனை மற்றும் சுதேசவைத்திய அமைச்சர் கௌரவ வைத்தியர் இராஜிதசேனாரத்ன அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கௌரவ அமைச்சர் சுதேச மருத்துவ முறைமையை விருத்திசெய்வதற்கான சகல அளவீடுகள் பற்றிய விபரங்களையும் எடுத்துள்ளார். வருத்தத்தில் இருந்து மீள வேண்டும் என்ற மக்களிற்கு மருத்துவ முறைமை மேலைத்தேயமா அல்லது கீழைத்தேச மருத்துவ முறையா என்பதனை கருத்தில் கொள்வதில்லை. அரசாங்கம் ஆயுர்வேத முறைமையை விஞ்ஞான பூர்வமானதாக அறிமுகப்படுத்த மற்றும் அலோபதி , ஆயுர்வேத மற்றும் ஏனைய முறைமைகளை இணைத்து எதிர்காலத்தில் நோயாளர்களைப் பராமரிப்பதற்கு என எதிர்பார்த்த பயன்களைப் பெற்றுக் கொடுபதற்கு கடுமையாக உழைத்து வருகின்றது

❖ தொம்பேயில் புதிய ஆயுர்வேத வைத்தியசாலை

ஆயுர்வேத சேவையை சமுதாயத்திற்கு வழங்குவதனை விரிவுபடுத்தும் நோக்குடன் சரத்சந்திர ராஜகருணா நினைவு ஆயுர்வேத வைத்தியசாலையை வெதாகம, தொம்பேயில் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது

❖ வட மாகாணத்தில் மரபு ரீதியாக ஆயுர்வேத மருத்துவர்களை பாராட்டல்

சுகாதார ,போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர் கௌரவ வைத்தியர் இராஜிதசேனாரத்ன அவர்களால் வட மத்திய மாகாணத்தில் விசேடமாக ஒழுங்குபடுத்தப்பட்ட வைபவத்தில் மரபு ரீதியாக பெறுமதி மிக்க சேவையை வழங்கி வரும் ஆயுர்வேத மருத்துவர்கள் பாராட்டப்பட்டனர்.

❖ கலன் பிடுனவெவவில் சமுதாய ஆயுர்வேத சுகாதார நிலையத்தை திறந்து வைத்தல்

கலன் பிடுனவெவவில் சமுதாய ஆயுர்வேத சுகாதார நிலையத்தை சுகாதார அமைச்சர் கௌரவ வைத்தியர் இராஜிதசேனாரத்ன அவர்கள் திறந்து வைத்தார்.

❖ தலாவ்விற்கான புதிய சமுதாய ஆயுர்வேத சுகாதார நிலையம்

ஆயுர்வேத வைத்திய சேவையை ஸ்திரப்படுத்தும் நோக்குடன் தலாவவில் ஆயுர்வேத சுகாதார நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

- **2016 - 2017 இல் இலங்கையின் சுகாதாரத் துறையின் முக்கிய முயற்சிகள்**

I. இலங்கையின் கிராமப்புற ஏழைகள் மற்றும் சேவைகளை எதிர் பார்த்திருப்போர் , இடம்பெயர்ந்த சமுதாயங்களிற்கு சமமான வகையில் நன்மைகளைப் பெறுவதற்கான இலவச சுகாதார சேவையை ஸ்திரப்படுத்தலும் வழங்குதலும்.

II. கஸ்ட மற்றும் பின்தங்கிய பிரதேசங்களில் வேலை செய்வதற்குப் பொருத்தமான சூழமைவுகள் மற்றும் வதிவிட வசதிகளை மேம்படுத்தக் கூடிய வகையிலான மனித வளங்களை போதுமான அளவிலும் சமமாகவும் வழங்கல்.

III. மனிதவள விருத்தி மனித நடத்தைக்கு ஏற்ற வகையில் கட்டிடங்கள் கட்டப்படுவதனை வற்புறுத்தல், சேவைகளை வழங்குவதற்கென வரையறுக்கப்பட்ட தரத்திற்கேற்ற அறிவு மற்றும் தேர்ச்சி.

IV. தொற்றா நோய்கள் மற்றும் வீதியில் வாகன நெரிசலினால் ஏற்படும் மரணங்களை வருமுன் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்.

V. சுகாதாரமான வாழ்க்கை முறைகளை மேம்படுத்தல்.

VI. மகப்பேறு மற்றும் சிறுவர் சுகாதாரத்தை இயலக் கூடிய மட்டத்திற்கு உயர்த்துதல்.

VII. நிதியியல் இடர் வரவு தற்காப்பு, தரமான அத்தியாவசிய சுகாதராப் பராமரிப்பு சேவைக்கான பெறுகைவழிகள் மற்றும் நம்பிக்கைக்குரிய பெறுகை வழிகள் ,பயனுறுதியுள்ள, தரமான மற்றும் அத்தியாவசியமான மருந்துகளிற்கான வாய்ப்பு மற்றும் சகலருக்குமான மருத்துவ உற்பத்திகள் உட்பட உலகளாவிய சுகாதாரத் தரத்தினை அடையக் கூடியதாகச் செய்தல்.

VIII. எயிற்ஸ், காசநோய் மற்றும் ஏனைய தெற்றுநோய்களைக் கட்டுப்படுத்து வதற்கான ஏற்பாட்டு நிகழ்ச்சிகளை ஸ்திரப்படுத்தல்.

IX. ஆரம்ப, இரண்டாம் கட்ட, மூன்றாம் கட்ட சுகாதாரப் பராமரிப்பு சேவைகளை வழங்கும் போது தரமான பாதுகாப்பான முறையில் வழங்குதலை முன்னேற்றல்.

X. சுகாதாரத் தகவல் முறைமை மற்றும் ஈ - சுகாதார முதற்படிகளை முன்னேற்றல்.

XI. புகையிலை மற்றும் இதனுடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்களின் பயன்பாடு மூலப் பொருட்களின் தவறான பயன்பாடு ,போதைப்பொருள் துஸ்பிரயோகம் மற்றும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் மதுபாவனை உட்பட பயன்பாடுகளைக் கட்டுப்படுத்தி, தற்பாதுகாத்தலை ஸ்த்திரப்படுத்தல்.

XII. வளங்களின் ஆகக் கூடுதலான பயன்பாட்டை உறுதிப்படுத்துவதனூடாக பணத்திற்கான பெறுமதியை பயனுறுதியுடைய மற்றும் செயல்விளைவுடைய தாவதனை உறுதிப்படுத்தி,பொறுப்புடையதான்வெ ளிப்படையபன, பாராபட்சமற்ற மற்றும் சம்மான சந்தர்ப்பங்களை வழங்கல்.

XIII. சரியான கழிவு முகாமை மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்கான ஆரம்பக் கட்டங்களை ஸ்திரப்படுத்தல்.

XIV. சுகாதாரப் பராமரிப்புத் துறையில் தனியார் துறை முதலீடுகளை ஊக்கப்படுத்தல்.

4. தேசிய சுகாதார விவரணம் (சாராம்சம்)

Indicator	2005	2009	2012	2014	2015
Demographic Indicators					
Total population (in thousands)	19,668	20,476	20,271	20,771	20,966
Land area (sq. km)	62,705	62,705	62,705	62,705	62,705
Population density (persons per sq.km) Population growth rate (%)	314 1.1	327 1.1	323 0.9	332 0.9	334 1.1
Crude birth rate (per 1000 population) Crude death rate (per 1000 population)	18.83 6.6	18.0 6.2	17.5 6.0	16.9 6.2	16.0 6.3
Urban population (%) Sex ratio (No of males per 100 females)	14.6 97.9	16.3 95	18.3 94	18.2 93.8	14.2 93.8
Child population (under 5 years) %	8.6	9.0	8.6	8.6	8.6
Women in the reproductive age group (15-49 years) %	54.78	51.4	51.0	51.0	51.0
Average household size (Number of persons per family)	4.7	4.0	3.8	3.8	3.8
Socio-economic Indicators					
GNP per capita at current prices (Rs)	120,875	233,716	365,192	461,650	508,936
Human development index	0.751	0.653 5.8	0.715	0.711	0.766
Dependency ratio Total Old-age (60 years and more) Young (under 15 years)	49.27 9.49 39.77	50.8 10.9 28.4	60.2 19.8 40.4	60.2 19.8 40.4	60.2 19.8 40.4
Literacy Rate % Total Female Male	90.7 89.2 92.2	90.7 89.2 92.2	95.6 94.6 96.8	95.7 94.6 96.9	95.7 94.6 96.9
Health and Nutrition Indicators					
Life expectancy at birth (years) Female Male	 76.4 71.7	 78.7 69.9	 79.8 70.5	 78.6 72	 78.6 72.0
Neonatal mortality rate (per 1,000 live births) -FHB Data	8.4	7.3	6.8	6.2	6.59
Infant mortality rate (per 1,000 live births) - FHB Data	11.17	10.5	9.2	8.6	9.16

Under-five mortality rate (per 1,000 Under 5 population)	13.39	12.1	12.1	12.2	10.0
Average no. of children born to ever married women in Sri Lanka	1.9	2.2	2.6	2.4	2.4
Maternal mortality rate (per 100,000 live births) – FHB Data		40.2	37.7	32	32.0
Low-birth-weight per 100 live births in government hospitals %	17.6	17.2	16.3	16.0	
Percentage of under five Children Under weight (weight-for- age)	29.4	21.1	17.3	16.4	6.94
Wasting (Acute undernutrition (weight-for- height)	14	14.7	14	12.2	11.38
Stunting (Chronic malnutrition (height-for-age)	13.5	17.3	11.4	10.5	16.97
Primary Health Care Coverage Indicators					
Percentage of pregnant women attended by Skilled provider	96	98.6	98.6	98.6	
Percentage of live births in government hospitals	92.2	92.2	95.6	94.6	
Women of childbearing age using contraceptives (%) Modern Method / Tradional Method	49.5 20.5	52.5 15.9	52.5 15.9	52.5 15.9	55.93
Population with access to safe water (%)	68.4	89.1	80.5	81.1	
Health Resources					
Government health expenditure as % of GNP	1.85	1.41	1.2	1.62	1.62
Government health expenditure as % of total government expenditure	5.4	3.86	4.1	5.96	
Per capita health expenditure (Rs)	2,215	3,298	4,392	7,497	
Medical Officers per 100,000 population	51.9	67.2	78.6	84.8	
Population per Medical Officer	1,927	1,491	1,278	1,179	
Dental Surgeons per 100,000 population	4.9	5.1	6.0	6.5	
Nurses per 100,000 population	101.4	153.0	180.3	185.1	
Public Health Midwives per 100,000 population	24.9	26.3	28.6	28.7	

Number of hospitals	608	642	621	622	610
Number of hospital beds	60,237	70,842	76,087	80,105	76,829
Hospital beds per 1,000 population	3.1	3.5	3.8	3.9	3.6
Number of Medical office of Health(MOH) Divisions	286	303	337	338	

Source : Medical Statistics Unit – "Annual Health Bulletin"

2011 – 2017 ஜூன் வரையான சுகாதாரத் துறைக்கான பாதீட்டின் சாராம்சத் தொகுப்பு

Rs.Million

Years	2011	2012	2013	2014	2015	2016	2017 Up to June
Recurrent Allocation	53,341	59,258	76,450	91,000	109,446	137,067	125,623
Recurrent Expenditure	52,994	57,859	75,559	90,494	100,754	112,992	55,487
Recurrent Expenditure %	**99.35**	**97.64**	**98.83**	**99.44**	**92.06**	**82.43**	**44.17**
Capital Allocation	15,575	19,621	18,522	26,162	38,718	39,992	46,139
Capital Expenditure	10,360	13,647	17,435	21,628	29,488	23,641	10,431
Capital Expenditure %	**66.52**	**69.55**	**94.13**	**82.67**	**76.16**	**59.11**	**22.61**
Total Allocation (Recurrent. + Capital.)	**68,916**	**78,879**	**94,972**	**117,162**	**148,164**	**177,059**	**171,762**
Total Expenditure (Recurrent. + Capital)	**63,354**	**71,506**	**92,995**	**112,122**	**130,241**	**136,633**	**65,918**
Total Health Expenditure %	**91.93**	**90.65**	**97.92**	**95.70**	**87.90**	**77.17**	**38.38**

2011 – 2017 ஜூன் வரையான மொத்தப் பாதீட்டு ஒதுக்கீடு (மில்லியன் ரூபாவில்)



2014 தொடக்கம் 2017 வரையிலான மீண்டுவரும் செலவினத்தின் பிரதானமான பகுதிகள்

Rs.Million

Description	2014	2015	2016	2017
Medical Supplies	34,915.45	40,000.00	45,000.00	45,158.00
Personal Emoluments	42,680.79	56,050.84	58,268.30	60,413.00
Other Recurrent Expenditure *	13,403.76	13,395.41	33,799.20	20,052.00
Total	**91,000.00**	**109,446.25**	**137,067.50**	**125,623.00**

- ஏனைய மீண்டுவரும் செலவீனங்களாவன பிரதானமாக போக்குவரத்து, வழங்கல், ஆகாரம், சீருடை, எரிபொருள், மின்சாரம் நீர்விநியோகம் என்பனவாகும்.

5. சுகாதார அமைச்சின் நிறுவனக் கட்டமைப்பு



6. அமைச்சின் கீழான நிறுவனங்கள், வேலைத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் சாதனைகள்

6.1 நோய்க் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம்

6.1.1 *தொழுநோய் ஒழிப்பு வேலைத்திட்டம்*

தொழுநோய் ஒழிப்பு வேலைத்திட்டத்தின் பிரதான வகிபங்கு கொள்கைத் திட்டமிடல், நிகழ்ச்சித் திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு, முகாமைத்துவ தகவல் முறைமையை வலுப்படுத்தல், பயிற்சி நிகழ்ச்சிகள் மதிப்பீடு என்பனவாகும். உலக சுகாதார தாபனத்தினால் 2011- 2015 வரையான காலப்பகுதியில் தொழுநோய்க் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை தொடர்வதற்கும் தொழுநோய் சுமையைக் குறைப்பதற்குமான மேம்படுத்தப்பட்ட தந்திரோபாயத்தில் கோடிட்டுக் காட்டப் பட்ட பலதரப்பட்ட நிசழ்ச்சிக் குறிகாட்டிகள் பயன் படுத்தப்பட்டள்ளது. உரிய பங்குதாரர்களுடன் கூட்டிணைக் கட்டி எழுப்புவதற்கும் தொடர்வதற்கும் தொழுநோய் ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு கட்டளையிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, மத்திய தொழுநோய் மருத்துவமனை மற்றும் ஹந்தல தொழுநோய் வைத்தியசாலை ஆகியன தொழுநோய் ஒழிப்பு வேலைத்திட்டத்தினால் நேரடியாக முகாமை செய்யப்படுகின்றது.

நீண்ட கால தொற்று நோய் ஒன்றான தொழுநோய்க்கு சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் நிரந்தர மற்றும் படிப்படியான நரம்பு பாதிப்பிற்கு இட்டுச்செல்வதோடுஅதன் மூலம் மூட்டுக்கள்,கண்கள் மற்றும் முகம் ஆகியவற்றில் ஊனத்தை ஏற்படுத்தும். தொழுநோயைக் கண்டறிவதிலான தாமதமானது நரம்பியல் செயற்பாட்டின் குறைபாடுகளுக்கான ஆபத்தை அதிகரிப்பதோடு ஒரு சமூகத்தில் நோய்ப்பரவலை அதிகப்படுத்த முடியும்.

கடந்த இரு தசாப்தங்களாக, இலங்கையானது தொழுநோயைக் குறைப்பதற்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. 1982 ஆம் ஆண்டில் குறுகிய கால வினைத் திறனான சிகிச்சை முறையொன்றான பல ஔடத சிகிச்சை முறையின் அறிமுகமும் விரிவாக்கமும்மற்றும் விளிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்ட அறிமுகம்; 1990 ஆம் அண்டின்,தொழுநோயின் ஆரம்ப அறிகுறிகள் தொடர்பாக பொது மக்களை அறிவூட்டுவதற்கும்நோய் தொடர்பான தவறான கருத்துக்களை அகற்றுவதற்குமான சமூக சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம் ஆகியவை 1995 ஆம் அண்டு தேசிய ரீதியிலான தொழுநோய் அகற்றும் இலக்கை அடையப்பெறுவதற்கான விளைவாக அமைந்தன.

மேலும் சிகிச்சைக்காக நோயாளிகளின் அணுகலை மேம்படுத்துவதற்கும் தொழுநோயின் உரிமையை மாகாண மற்றும் சுகாதார சேவைகளுக்கு மாற்றுவதற்கும், 2001 ஆம் ஆண்டு தொழுநோய் சேவைகளானவை பொது சுகாதார சேவைகளுடன் ஒன்றிணைக்கப்பட்டன. இன்று எந்த ஒரு தோல்நோய் மருத்துவமனையிலும் தொழுநோயனைக் கண்டறிய முடிவதோடு சிகிச்சையினைப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.மேலும் தொடர்பு தடமறிதல் ஊடாக புது நோய்களைக் கண்டிறிவதற்கும் கள நிலை தொழுநோய் தொடர் செயல் விருத்தியானது 2013 ஆம் ஆண்டு கவனிக்கத்தக்க நோயாகச் செய்துள்ளது.

வருடம்	100,000 சனத்தொகைக்கு புதிய நோய்க் கண்டுபிடிப்புக்கள்	பல் தரப்பட்ட பக்டீரியா சதவீதம்	குழந்தை சதவீதம்	100,000 சனத்தொகைக்கு அங்கக் குறைபாட்டு விகிதம்
2001	12.1	35.0	11.0	1.06
2002	11.6	34.6	11.1	1.07
2003	10.0	37.4	11.5	0.82
2004	9.9	41.3	11.4	0.75
2005	9.0	41.5	10.5	0.62
2006	9.0	43.9	10.3	0.57
2007	10.0	44.8	10.0	0.60
2008	9.9	44.8	10.3	0.78
2009	9.1	47.6	9.9	0.58
2010	9.5	46.2	9.7	0.69
2011	10.6	48.2	10.7	0.72
2012	10.6	49.3	7.6	0.79
2013	9.6	48.8	9.2	0.65
2014	10.4	47.01	10.39	0.71
2015	9.43	53.81	11.28	0.94

தொழு நோய் அகற்றலானது தேசிய மட்டத்தினை அடைந்துள்ள போதிலும், நோய்ப் பரவலானது குழந்தைகளின் அளவின் படி வெளிக் காட்டப் படுகின்றது என்பதைதொழுநோய் ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டமானது அவதானிக்கின்றது. இந் நிகழ்ச்சித் திட்டமானது உப தேசிய ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் கட்டுப்படுத்தலைதீவிரப் படுத்த வேண்டி இருக்கின்றது.

6.1.2 *யானைக்கால் நோய் வேலைத் திட்டம்*

யானைக்கால் நோய் ஒழிப்பு நிகழ்சித் திட்டமானது இலங்கையில் நிணநீர் யானைக்கால் நோய்ச் சுமையை குறைப்பதற்காக உள்ள சுகாதாரத் திணைக்களத்தின் நிலைக்குத்தான அமைப்பாகும். நிணநீர் யானைக்கால் நோயானதுசுகாதார முறைமைகள் மீதான பாரிய சுமையுடனான சமூகக்கத்திலிருந்து ஒதுக்கப்படுதல், பொருளாதார இழப்பு ஆகியவற்றிற்கு இட்டுச்செல்கின்றநிரந்தர இயலாமையை ஏற்படுத்துகின்ற உலகிலே மிகவும் உருக்குழைக்கின்ற நோய்களில் ஒன்றாகும்.

நோக்கங்கள்

- I. ஒட்டுண்ணியல் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை வலுவூட்டல்
- II. பூச்சியியல் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை வலுவூட்டல்
- III. யானைக்கால் நோய் ஒழிப்பு நிகழ்சித் திட்டத்தில் ஆய்வுகூட வசதிகள் மற்றும் பிரதேச யானைக்கால் நோய் ஒழிப்புப் பிரிவு ஆகியவற்றை வலுவூட்டல்
- IV. நோயுற்ற தன்மையை முகாமை செய்வதன் மூலம் பாதிக்கப்பட்ட தனி நபர்களின் சிக்கல்கள் மற்றும் இயலாமையைத் தடுத்தல்.

2016 ஆம் ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்/சாதனைகள்

- உலக சுகாதார அமைப்பினால் சான்றுப்படுத்தப்பட்ட மற்றும்பொது சுகாதாரப் பிரச்சனையாகக் கருதப்படுகின்ற நிணநீர் யானைக்கால் நோயினைக் குறைத்தல்.
- காலி மாவட்டத்தில் உள்ள மக்களுக்கான வெகுசன மருந்து நிர்வாகம்.

கடந்த 5 வருட கால செயலற் திறன் போக்கு







6.1.3 *பொது சுகாதார கால்நடை மருத்துவ சேவைகள்*

சுகாதார அமைச்சின் பொது சுகாதார கால்நடை மருத்துவ சேவைகளானவை இலங்கையில் மனித மற்றும் மிருக நீர்வெறுப்பு நோயைத் தவிர்ப்பதற்கும் ஏனைய விலங்குவழி நோய்களைத் தடுப்பதற்குமான தேசிய பொறுப்புடன் பொறுப்பாக்கப்பட்டு இருக்கின்றது.

நீர்வெறுப்பு மற்றும் ஜப்பானிய மூலைக் காய்ச்சல் நோய் ஆகிய இரு நோய்களும் விலங்குவழியாக பரவக் கூடிய இலங்கையில் உள்ள மனிதர்களைப் பாதிக்கின்ற இரு பாரிய நோய்களாகும். வெறி நாய் நீர் வெறுப்பு நோயின் பிரதான வாயில் மற்றும்நோயை மனிதர்களில் பரப்பும் நோய்ப் பரப்பி நாய் ஆகும். மதிப்பீடுகளின் படி இலங்கையில் உள்ள நாய்களின் சனத்தொகை அண்ணளவாக மூன்று மில்லியனாக இருப்பதோடு அதில் 20 % கட்டாக்காலி நாய்கள் ஆகும். அதே போன்று ஜப்பானிய மூலைக் காய்ச்சல் பெறுக்கியாக பன்றிகள் காணப்படுகின்றன. இலங்கையில் மதிப்பீடு செய்யப்பட்ட பன்றிகளின் எண்ணிக்கை அண்ணளவாக 150,000 ஆகும்.

	செயற்பாடுகள்	2015 உடலியல் நடவடிக்கை	2016 உடலியல் நடவடிக்கை (மில்லியன்)
01	Anti — rabies vaccination for dogs	1,480,668	472,976
02	Female dog sterilization	167,379	52,809
03	In Service training of staff on dog vaccination	26	8 programme
04	Training of Medical officers and Nursing officers on post Exposure Treatments	22 programme (22x15) 330	16 Programme

6.1.4 *மலேரியா ஒழிப்பு வேலைத் திட்டம்*

மலேரியா ஒழிப்பு வேலைத் திட்டமானது கொள்கை உருவாக்கம், மலேரியாவைக் கட்டுப் படுத்துவதற்கான தந்திரோபாயங்கள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் மலேரியா சூழ்நிலையைக் கண்காணித்தல், மாகாண ரீதியான நிகழ்சித் திட்டங்களுக்கு உபகரணங்களை வழங்கல், மாகாணங்களுக்கு இடையிலானஒருங்கிணைப்பு, மலேரியாவைக் கட்டுப் படுத்துவதற்கான பயிற்சி மற்றும் ஆய்வு செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு மற்றும் நன்கொடைகளை வழங்கும் வெளிநாட்டுமுகவர் நிலையங்களுடனான உறவுகள் ஆகியவற்றில் பங்கு கொள்கின்றது.

2016 செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி செவ்வாய்கிழமை அன்று உலக சுகாதார அமைப்பானது இலங்கையை மலேரியா அற்ற நாடு எனப் பிரகடனப் படுத்தியது. இது நாட்டின்பொது சுகாதாரத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியைப் பறை சாற்றுகின்றது. உலகிலே மலேரியாவால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட மக்களாக ஆசிய மக்கள் காணப்பட்டனர்.

மாலைதீவிற்குப் பின்னர் தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் மலேரியா அற்ற இரண்டாவது நாடாக இலங்கையை ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சுகாதார முகவர் நிலையம் பிரகடனப்படுத்தி உள்ளது. உலக சுகாதார அமைப்பின் படி கடந்த மூன்றரை வருடங்களாக நுளம்புகளால் உள்ளூரில் பரவிய நோய்கள் எதுவும் நாட்டில் கண்டு பிடிக்கப்படவில்லை, ஆகையால் தான் இச் சான்றிதழ் வழங்கப் பெற்றது.

2016 ஆம் ஆண்டின் விஷேட நிகழ்வுகள்/சாதனைகள்

- இலங்கையானது மலேரியாஒழிப்பில் மைல்கல்லை எட்டியுள்ளதோடு 2016 ஆம் ஆண்டு கொழும்பில் இடம் பெற்ற உலக சுகாதார அமைப்பின் /தென் கிழக்காசிய பிராந்திய அழுவலக வருடாந்த அமர்வில் உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகத்தினால் உலக சுகாதார அமைப்பின் கடுமையான மதிப்பீட்டுன் பின்னர் 2016 செப்டம்பர் மாதம் இலங்கையானது மலேரியா அற்ற நாடு என சான்றுப்படுத்தப் பட்டிருக்கின்றது.
- இறக்குமதி செய்யப்பட்ட மலேரிய அபாயக் குழுக்களுக்கு இடையில் வெளி நாட்டுப் பணியாளர்கள்,புகலிடக் கோரிக்கையாளர்கள்,பயணிகள், சுற்றுலாப் பயணிகளைப் பாதுகாப்பதற்காக அபாயக் குழு கண்காணிப்பை மேலும் வலுப்படுத்தல்.
- வழிகாட்டல்களை விருத்திசெய்தல்மற்றும் படிப்படியாக பதில் அளிக்கும் குழுக்களை நிறுவுவதன் மூலம்நோய் பரவுதலை முகாமைத்துவம் செய்வதற்கான முறைமைகளை விருத்திசெய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டன.
- மலேரியா ஒழிப்பு வேலைத் திட்டமானது; துறைமுக மற்றும் விமான நிலையங்களின் ஊடாகஉட்பிரவேசிக்கின்ற தொற்றுதலுக்கு உட்பட்ட காவி நுளம்புகளன் பிரவேசத்தைத் தடுப்பதற்காக அவற்றைச் சுற்றி பூச்சியியல் கண்காணிப்பை ஆரம்பித்தது.
- 1,842,857.00 ரூபா செலவில் மலேரியா ஒழிப்பு வேலைத் திட்ட தலைமையகங்ளில் உள்ள நோயாளிகளுடன் கலந்தாலோசிக்கும் அறை மற்றும் நோயாளிகள் காத்திருக்கும் பிரதேசம் ஆகியவற்றை புதுப்பித்தல் மற்றும் சீரமைத்தல்.
- 1494955 ரூபா செலவில் மலேரியா ஒழிப்பு வேலைத் திட்ட தலைமையகங்ளில் உள்ள ஔடதக் களஞ்சியம் மற்றும் களஞ்சிய அறைகளைப் புதுப்பித்தல்.
- 2,273,695.50 ரூபா செலவில் மலேரியா ஒழிப்பு வேலைத் திட்ட தலைமையகங்ளில் உள்ள ஒட்டுண்ணியியல் ஆய்வு கூடத்தை நுண்ணோக்கியல் மலேரியா தர உறுதி மற்றும் தரக் கட்டுப்பாட்டுக்கான தேசிய குறிப்பு ஆய்வு கூடமாக தரமுயர்த்தல் (PCR இயந்திரத்தை நிறுவுதல் மூலம்). பூச்சியியல் ஆய்வு கூடத்தையும் பூச்சிவளர்ப்பகத்தையும்மலேரியா பூச்சியியல் தேசிய குறிப்பு நிலையமாக ரூபா. 1,571,509 செலவில் தரமுயர்த்தல்.



6.1.5 காசநோய் மற்றும் இருதய நோய்களுக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம்

காசநோய் மற்றும் இருதய நோய்களுக்கான தேசிய நிகழ்ச்சித் திட்டமானது (NPTCCD)சுகாதார அமைச்சில் உள்ள பரந்துபட்ட காசநோய் மற்றும் இருதய நோய்களுக்கான தேசிய நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளரினால் தலைமை தாங்கப்படுகின்ற ஒரு பிரிவு ஆகும். இந் நிகழ்ச்சித் திட்டமானது; சுகாதார அமைச்சின் பொது சுகாதார சேவைகளின் (I)பணிப்பாளர் நாயகத்தின் கீழ் தொழிற்படுகின்றது. NPTCCD யின் மத்திய பிரிவு,தேசிய காசநோய் குறிப்பு ஆய்வு கூடம்,NPTCCD யின் மத்திய ஔடதக் களஞ்சியம்,கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட இருதய மருத்துவமனைகள் என்பன நேரடியாக NPTCCD பணிப்பாளரின் நிர்வாக எல்லையினுள் உள்ளன.

25 மாவட்டங்களில் உள்ள 26 மாவட்டஇருதய மருத்துவமனைகள் மூலம் காசநோய் மற்றும் சுவாச நோய் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மாவட்ட ரீதியில் மேற்கொள்ளப் படுகின்றன.கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட இருதய மருத்துவமனைகள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ள இருதய மருத்துவமனைகள் முறையே மாகாண மற்றும் மாவட்ட சுகாதார அதிகார சபைகளின் நிர்வாக எல்லையினுள் உள்ளன.

நோயைக் கண்டறியும் சேவைகளானவை தேசிய காசநோய் குறிப்பு ஆய்வுகூடம், கண்டிமற்றும் இரத்தினபுரி பிரதேச கலாசார ஆய்வுகூடங்கள்,மாவட்ட இருதய மருத்துவமனை ஆய்வுகூடங்கள் மற்றும் 160 நுண்ணோக்கியல் நிலைய்ஙகளினூடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

NPTCCD யின் மத்திய ஔடதக் களஞ்சியமானது காச நோய்த் தடுப்பு ஔடதங்களை மாவட்ட இருதய மருத்துவமனைகளுக்கு பங்கீடு செய்தல் மற்றும் மதிப்பீடு,பெறுகை,வழங்கல் ஆகிய செயற்பாடுகளுக்கு பொறுப்பாக உள்ளது.

கடந்த 5 வருட கால செயலற் திறன் போக்கு



2012 முதல் 2015 ஆம் ஆண்டு வரையான விடயக் கண்டு பிடிப்புப் போக்கானதுபெரும்பாலும் நிலையானதாக இருந்ததோடு 2016 ஆம் ஆண்டின் விடய எண்ணிக்கை குறைவடைந்திருந்தது.2016 ஆம் ஆண்டில் நாட்டில் அறிக்கையிடப்பட்ட 8886 காசநோய் விடயத்தில் 8332 புதிய விடயங்களாகும். அப் புதிய விடயங்களில் 5807 நுரையீரல் காசநோய்களும் 2525 மேலதிக நுரையீரல் காசநோய்களும் விடயங்களாகும்.



2016ஆம் ஆண்டின் காசநோய் அறிவித்தல் விகிதமானது 100,000 சனத்தொகைக்கு 42.0 ஆகும்.



2015 ஆம் ஆண்டின் சிகிச்சை வெற்றியளிப்பானது 84.1 % ஆகும்.தொடர் விகித வீழ்ச்சியானது 4.2 ஆகும். ஒப்பீட்டளவில் குறைந்த சிகிச்சை வெற்றி விகித்த்துற்கு 6.8 % இறப்பு விகிதமானது கணிப்பிடப்பட்டு இருக்கின்றது

6.1.6 இலங்கைக்கான தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் (NCCP)

இலங்கைக்கான தேசிய கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டமானது (NCCP) நாட்டிலுள்ள புற்று நோய்களைத் தடுப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்குமான தேசிய மையம் ஆகும்.மேலும் இது கொள்கை , ஆதரவு,துட்டமிடல், கண்காணித்தல் மற்றும் புற்று நோய்களை கட்டுப் படுத்தல்,தவிர்ப்பது உட்பட புற்று நோயைக் கண்காணித்தல் மற்றும் தடுப்பதை மதிப்பீடு செய்தல், நோய் தொடர்பான ஆராய்ச்சிகளை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்கு பொறுப்பாக உள்ளது.

2016 ஆம் ஆண்டின் விஷேட நிகழ்வுகள்/சாதனைகள்

1. 1 புற்று நோய்த் தடுப்பு, ஆரம்பத்தில் நோயைக் கண்டுபிடித்தல் மற்றும் புற்று நோயிலிருந்து பிழைத்துக் கொண்டவர்கள் மீதான அக்கறை ஆகியவற்றுக்கான ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப் பட்டன.
    - 2016 ஆம் ஆண்டு உலக புற்று நோய் தினம் மற்றும் உலக தலை , கழுத்துப் புற்று நோய் தினம் மற்றும் உலக மார்பகப் புற்று நோய் மாதமாக ஒக்டோபர் மாதம் ஆகியவற்றை அனுஷ்டிப்பதற்காக 3 ஊடக்க் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.
    - இலங்கை மருத்துவ சங்கத்துடன் இணைந்து உலக நோயாளுகள் பாதுகாப்பு தினத்தை அனுஷ்டிப்பதற்காக ஆதரவு நிகழ்சடசித் திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

2. புற்று நோய்த் தடுப்பு மற்றும் கட்டப்படுத்தல் தொடர்பான விளிப்புணர்வு மற்றும் பொதுக் கல்வியைஆகியவற்றை வலுவூட்டல்
    - புற்று நோய் கட்டப்படுத்தல் தொடர்பான நடமடும் கணகாட்சிப் பிரிவுகளை மாவட்ட மட்டத்தில் நிறுவுதல் - பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகப் பிரிவுகளில் 115 “லய்ட் பொக்ஸ் “தொகுதிகள்,நெகிழ்வப் பதாதைகள் பதாதைகள்(easy pull) ஆகியவவை சேகரிக்கப்பட்டு பங்கீடு செய்யப்பட்டன.
    - ஜூலை மாதத்தில் வாய்ப் புற்று நோய் தொடர்பாகவும் ஒக்டோபர் மாதத்தில் மார்பகப் புற்று நோய் தொடர்பாகவும் வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
    - மார்பகப் புற்று நோயின் ஆரம்ப அறிகுறிகள் தொடர்பாக எச்சரிக்கை செய்யும் 1000 நெகிழ்வப் பதாதைகளை அச்சிட்டு எல்லா சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்கும் அனுப்புதல்.
    - முதன்மை சுகாதார பாதுகாப்பு நிறுவனங்களுக்கும் சமூகத்தற்கும் (மக்களுக்கு பங்கீடு) செய்தவதற்காக புற்று நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாக700,000 துண்டுப் பிரசுரங்களும் சுய மார்பகப் பரிசோதனை தொடர்பாக 10,000 காட்சி அட்டைகள் (FLASH CARDS)தொகுதியும் அச்சடிக்கப்பட்டன.
    - உலக தலை மற்றும் கழுத்துப் புற்று நோய் தினத்தை அனுஷ்டிப்பதற்காக பாடசாலை மாணவர்களுக்கு இடையில் தேசிய மட்டத்திலான சுவரொட்டிப் போட்டி, வாகன அணிவகுப்பு மற்றும் சுகாதார அணிவகுப்பு ஒன்றை நடாத்துதல்.
    - வைத்தியசாலைகளில் வாய்ப் புற்று நோய்த் தடுப்பு தொடர்பாக 4 Tri Vision பலகைகளை நிறுவுதல்.
3. மத்திய மற்றும் மாவட்ட மட்டங்களில் சுகாதார பாதுகாப்பு ஆளணியினர் மற்றும் ஏனைய இலக்குக் குழுக்களுக்கு தேவையான உபகரணங்களை வழங்குவதோடு சுகாதார பாதுகாப்பு ஆளணியினருக்கு பயிற்சிப் பாசறைகளை நடத்துவதன் ஊடாக ஆற்றலைக் கட்டி எழுப்புதல்.
    - உலக நோயாளிகள் பாதுகாப்பு முதுநிலை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மீதான இரு தொகுதிகள் நடத்தப்பட்டன.
    - MO/NCD,MO /திட்டமில் HEOO ஆகியவற்றுக்கான புற்று நோய் கட்டுப்பாடு தொடர்பாக 2 நாட்கள், 3 நாட்கள் வதிவிட பயிற்சிப் பாசறைகள் நடத்தப்பட்டன.
    - முதன்மைப் பாதுகாப்பு வேலையாட்களை வலுவூட்டுவதற்காக 10,000 தகவல்அட்டைகள் அச்சிடப்பட்டன.
    - புற்று நோய் ஆராய்ச்சிக்கான சர்வதேச முகவர் நிலையம்/ உலக சுகாதார தாபனம் ஆகியவற்றுடன் இணைந்து யோனி ஆகநோக்கல் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது.
    - வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் தாதி அலுவலர்களுக்கு புற்று நோய் ஆராய்ச்சி மேம்பாடு தொடர்பான 2 நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
    - பல் மற்றும் OMF பரிவுகளிடையே பகிர்ந்தளிப்பதற்காக 1000 OPMD வழிகாட்டல்களை அச்சிடுதல்.
4. மத்திய மற்றும் மாவட்ட மட்டங்களில் புற்று நோய் கண்காணிப்பை வலுவூட்டல்.
    - வைத்தியசாலைகளில் உள்ள மருத்துவ அறிக்கைப் பிரிவிற்குப் பொறுப்பான அலுவலகங்கள்,கொழும்பு மாவட்டத்தின் பிராந்திய மரணப் பதிவு பதிவாளர்களுக்கு 2 மறு ஆய்வுக் கூட்டங்களும் புற்று நோய் சிகிச்சை நிலையங்களில் 6 மறு ஆய்வுக் கூட்டங்களும் நடத்தப்பட்டன.

- 250 புற்று நோய் பதிவப் புத்தங்கள் அச்சிடப்பட்டு பங்கீடு செய்யப்பட்டன.
- வலைத்தள தரவு முகாமைத்துவ முறை விருத்தி.

கடந்த 5 வருடங்களிலான செயலாற்றுகைப் போக்குகள்

தேசிய புற்றுநோய் திரையிடல், ஆரம்ப நோய்க் கண்டுபிடிப்பு நிலையம் மற்றும் நடமாடும் மருத்துவமனைகளில் வழங்கப்படும் சேவைகள்

	2012	2013	2014	2015	2016
No. attended to clinics	7386	7137	7602	5478	6208
No of breast examination done	7076	6599	7075	5293	6008
No. of breast abnormalities detected	1185	1295	1367	1428	1584
No of cervical visualizations done	1016	3323	3242	2111	2550
No of cervical abnormalities detected	386	565	372	299	339
No of PAP smears taken	4104	3239	3308	2076	2470
No. of PAP smear abnormalities detected	484	445	490	492	442
No of mammography done	390	355	344	414	243
No of colposcopy examinations done	-	24	13	37	57
No. of referrals made	2139	1770	912	1141	863

அரசாங்க புற்றுநோய் சிகிச்சை நிலையங்களில் புதிதாக பதிவு செய்யப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை

புற்றுநோய் சிகிச்சை நிலையம்	Year								
	2008	2009	2010	2011	2012	2013	2014	2015	2016
NCI - மஹரகம	11,163	11,756	11,513	12,403	12,550	12,689	13,247	13,890	14,248
TH-கண்டி	3,648	3,634	4,046	5,042	3,717	3,516	4,000	4,023	3,877
TH -கராப்பிடய	1,764	1,866	1,793	2,193	2,158	2,455	2,479	2,394	2,595

TH -யாழ்ப்பாணம்	412	479	659	1,055	1,048	1,061	1,032	1,100	1,099
TH - அநுராதபுரம்	712	551	641	698	803	850	1,114	1,300	1,131
PGH – பதுளை	753	794	858	1,430	2,152	2,203	1,527	2,285	2,225
TH – மட்டக்களப்பு	-	169	565	727	1,094	932	897	900	1,325
TH - குருநாகல்	538	804	806	1,174	1, 122	1,042	1,238	1,680	1,863
PGH – இரத்தினபுரி	319	485	636	735	808	767	807	902	1094
மொத்தம்	**19,309**	**20,538**	**21,517**	**25,457**	**25,452**	**25,515**	**26,341**	**28,474**	**29,457**

* சில நோயாளிகள் ஒன்றுக்கு மேற்பட்ட புற்று நோய் சிகிச்சை நிலையங்களில் பதிவு செய்கின்றமையினால் மிகைப் படுத்தப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை அறிக்கையிடப்பட்டன. உதாரணமாக, ஒன்றுக்கு மேற்பட்ட ஒரே மாதிரியான எல்லா பதிவுகளையும் அகற்றியதன் பின்னர் 2008 ஆம் ஆண்டு புது நிகழ்வுகளின் நோய்கள்) எண்ணிக்கை 16,511 மற்றும் 2009 ஆம் ஆண்டில் இவ் எண்ணிக்கை 16,888 ஆகும்.

** மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் உள்ள மாகாணப் புற்றுநோய் சிகிச்சை நிலையமானது 2009 இல் இருந்து தொழிற்பட ஆரம்பித்தது.

6.1.7 பாலியல் தொற்று நோய்/ எய்ட்ஸ் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித் திட்டம் (NSACP)

HIV/AIDS தொடர்பாக பொறுப்பாக உள்ள சுகாதார அமைச்சின் பாலியல் தொற்று நோய்/ எய்ட்ஸ் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித் திட்டமானது(NSACP) அரசாங்கத்தின் பிரதான ஒழுங்கமைப்பாகும். சுகாதார அமைச்சின் விஷேட பொது சுகாதார நிகழ்ச்சித் திட்டமாக இருக்கின்ற NSACP யானது தேசிய HIV செயல் நுணுக்கத் திட்டத்தினை ஒருங்கிணைத்தல்,திட்டமிடல், மற்றும் அமுல் படுத்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக உள்ளது. NSACP யின் தலைமையகமானது 29, சரம் ப்ளேஸ்,கொழும்பு 10 அமைந்துள்ளது.

2016 ஆம் ஆண்டு இறுதியாகும் போது 31 முழு நேர STD மருத்துவமனைகளும் STD மருத்துவமனைகளின் 23 ற்கு மேற்பட்ட கிளைகளும் நாடளாவிய ரீதியில் அதி தீவிர “ரெட்ரோ வைரஸ்” சிகிச்சை அளிக்கக் கூடிய ஆற்றலைக் கொண்ட 21 மருத்துவமனைகளும் இருக்கின்றன. NSACP தவிர வெளிவாரியாக ART வசதியினைக் கொண்ட ஒரே வைத்தியசாலை அங்கொடை ஆதார வைத்தியசாலை மாத்திரம் ஆகும். NSACP யானது இவ் எல்லா மருத்துவமனைகளும் மருத்துவமனைகளுடனும் வலையமைக்கப்படுகின்றது.

பிரதான நோக்கங்களானவை ;

1. HIV உள்ளிட்ட எல்லா பாலியல் தொற்று நோய்களின் பரிமாற்றத்தை தடுத்தல்.
2. HIV உள்ளிட்ட பாலியல் தொற்றுக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு மற்றும் ஆதரவு வழங்கல்.

இலங்கையில் HIV தொற்றின் நிலைமை

2016 ஆம் ஆண்டில் புதிதாக 249 HIV நிகழ்வுகள் இலங்கையில் அறிக்கையிடப்பட்டன. இது 1987 ஆம் ஆண்டு இலங்கையில் HIV தொற்றானது கண்டு பிடிக்கப்பட்டதில் இருந்து 1 வருடத்தில் அறிக்கையிடப்பட்ட அதி கூடிய எண்ணிக்கை ஆகும். எவ்வாறு இருப்பினும் அறிக்கையிடப்பட்ட இவ் எண்ணிக்கையானது நாட்டில் உள்ள மொத்த HIV நோயாளிகளை குறிப்பிடுவது அன்று. ஏனெனில் HIV தொற்றுக்கு உள்ளானவர்கள் தமது HIV நிலை பற்றி அறிந்திராமல் இருக்கலாம். இதற்கு மேலதிகமாக HIV பரிசோதணை சேவைகளை நாடுவத்தை HIV பற்றிய களங்கம் மற்றும் பாரபட்சம் ஆகியவை தடுக்கின்றன.

அறிக்கையிடப்பட்ட பால் அடிப்படையிலான HIV போக்குகள் 2007-2016



2011 ஆம் ஆண்டில் இருந்து HIV யைக் கொண்டுள்ள ஆண்களின் விகிதமானது படிப்படியாக அதிகரித்து வருகின்றது. (உரு X) 2016 ஆம் ஆண்டின் இறுதி வரை அறிக்கையிடப்பட்ட ஒட்டு மொத்த நிகழ்வுகளின் படி ஆண்,பெண் விகிதமானது 1.8 ;1 ஆகும். எவ்வாறு இருப்பினும் 2016 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட புதிய HIV நிகழ்வுகளின் படி ஆண்,பெண் விகிதமானது 3.1;1 ஆகும்.

2016 ஆம் ஆண்டு இறுதியில் அறிக்கையிடப்பட்ட வயது மற்றும் பால் பால் அடிப்படைளிலான ஒட்டு மொத்த நிகழ்வுகள்



மேல் உள்ள உருவானது 1987 ஆம் ஆண்டில் இருந்து அறிக்கையிடப்பட்ட HIV நிகழ்வுகளின் வயது,பால் பரம்பலைக் காட்டுகின்றது(N= 57 நிகழ்வுகளில் பால் மற்றும் வயது குறிப்பிடப்படபவில்லை). 25-49 வயதினரிடையே பெரும்பான்மையான நிகழ்வுகள் உள்ளன.

2016 ஆம் ஆண்டு 100,000 சனத்தொகைக்கு அறிக்கையிடப்பட்ட HIV நிகழ்வுகள்



மேல் உள்ள உருவில் காட்டப்பட்டுள்ளதன் படி 2016 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட HIV நிகழ்வுகளில் அதிக எண்ணிக்கையை முல்லைதீவு,கொழும்பு மாவட்டங்கள் கொண்டிருந்தன. 6 ஏனைய மாவட்டங்களில் 100,000 பேருக்கு 1 என்ற விகிதப் படி HIV நிகழ்வுகள் காணப்பட்டன. இம் மாவட்டங்கள் கம்பஹா,களுதுறை,காலி,புத்தளம்,மன்னார் மற்றும் பொலொன்னறுவை ஆகும்.

2016 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட HIV நிகழ்வுகளின் பரிமாற்ற சாத்திய முறைகள்



2016 ஆம் ஆண்டு அறிக்கையிடப்பட்ட HIV நிகழ்வுகளில் 88% பாலியல் பரிமாற்றத்தினால் ஏற்பட்டவை என கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் 11% நிகழ்வுகளின் பரிமாற்ற சாத்திய முறைகளை அறிந்து கொள்வதற்கு தரவுகள் போதுமானதாக இல்லை.

2016 ஆம் ஆண்டில் HIV பரிசோதனை சேவைகள்

நாட்டில் HIV தொற்றுக்கு எதிராக செயற்படுவதில் HIV பரிசோதனை சேவைகளானவை நெருக்கடி நிலையில் உள்ளது. கடந்த வருடங்களில் நாட்டில் மேற் கொள்ளப்பட்ட HIV பரிசோதனைகள் அதிகரித்து இருக்கின்றன. எவ்வாறு இருப்பினும், எல்லா HIV பரிசோதனைகளையும் அறிக்கையிடுவதற்கான முறையான பொறி முறை தாபிக்கப் படாமையினால் தனியார் துறையில் செய்யும் பரிசோதனைகளை அறிக்கையிட முடியாமல் உள்ளது. இருப்பினும் உறுதிப்படுத்தப்பட்ட எல்லா HIV பெறுபேறுகளும் NSACP யின் தேசிய குறிப்பு ஆய்வு கூடத்தில் மாத்திரம் உறுதிப் படுத்தல் பரிசோனை உள்ளதால் NSACP யிற்கு அறிவிக்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் பரிசோனையின் பன்முகத் தன்மை மற்றும் சேவை வழங்கும் முறைகள் பரிசோதிக்கப்பட்டன.

2016 ஆம் ஆண்டில் HIV பரிசோதனையின் விவரங்கள்

Types of blood samples screened for HIV	Number tested	% of samples	Number positive	% of positives	Positivity rate
Blood donor screening (NBTS and private blood banks)	417,428	37%	23	9%	0.01%
Antenatal mothers	323,518	29%	11	4%	0.003%
Private hospitals, laboratories and Sri Jayewardenepura GH	225,047	20%	40	16%	0.02%
STD clinic samples*	90,271	8%	160	64%	0.18%
Tri-forces	29,236	3%	4	2%	0.01%
Survey sample	23,615	2%	1	0%	0.004%
Prison HIV testing programme	12,776	1%	6	2%	0.05%
TB screening	7,896	1%	4	2%	0.05%
Total	**1,129,787**	**100%**	**249**	**100%**	**0.02%**

*(STD மருத்துவ மாதிரிகள் பங்கேற்பாளர்கள், அறிகுறியுள்ள நோயாளிகள், எல்லை மாதிரிகள் மற்றும் தொடர்புகளின் பரிசோதனை ஆகியவற்றை உள்ளடக்குகின்றன

HIV சிகிச்சை மற்றும் பாதுகாப்பு சேவைகள்

AIDS தொற்றை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு உலகமானது செயற்பணி ஒன்றை ஆரம்பித்து இருக்கின்றது. 2030 ஆம் ஆண்டு ஆகும் போது HIV முடிவிற்குக் கொண்டு வருவதற்கான இலக்கினை அடைவதற்கு உலகலாவிய ரீதியில் HIV தடுப்பு மற்றும் பாதுகாப்பு சேவைகளை துரிதப்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று உலகளாவிய ரீதியில் ஒருமித்த தன்மை காணப்படுகின்றது. ART ஆரம்ப ஆடசேர்ப்பானது விஷேடமாக HIV பரிமாற்றத்தைக் குறைப்பதோடு HIV/AIDS தொடர்பான ஆரோக்கியமின்மைகள் மற்றும் இறப்பு வீதம் ஆகியவற்றைக் குறைப்பதற்கு விஷேடமாக பங்களிப்புச் செய்கின்றது.

HIVயுடன் வாழும் மக்கள்* 2016 ஆம் ஆண்டில் அதி தீவிர ரெட்ரோ வைரஸ் சிகிச்சைக்கு முன்னர் மற்றும் சிகிச்சைக் கட்டத்தின் போது

	மருத்துவமனைகளின் எண்ணிக்கை	முன் ART கட்டம்	ART கட்டம்	பாதுகாப்பில் உள்ள மொத்தம்	%
1	கொழும்பு	26	581	607	54%
2	ராகம	4	131	135	12%
3	IDH	2	83	85	8%
4	கண்டி	4	53	57	5%
5	காலி	1	44	45	4%
6	குருநாகல்	3	26	29	3%
7	களுபோவில	3	25	28	2%
8	யாழ்ப்பாணம்	1	21	22	2%
9	அநுராதபுரம்	2	16	18	2%
10	களுத்துறை	1	17	18	2%
11	இரத்தினபுரி	1	17	18	2%

12	சிலாபம்	3	14	17	2%
13	கம்பஹ	1	10	11	1%
14	நீர்கொழும்பு	1	10	11	1%
15	பொலன்னறுவை	0	8	8	1%
16	கேகாலை	3	4	7	1%
17	மாத்தறை	0	4	4	0%
18	மாத்தளை	0	3	3	0%
19	பதுளை	1	1	2	0%
20	அமபாந்தோட்டை	0	0	0	0%
21	மட்டக்களப்பு	0	0	0	0%
	மொத்தத் தொகை	**57**	**1068**	**1125**	**100%**

2016 ஆம் ஆண்டில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட HIVயுடன் வாழுகின்றவர்களின் எண்ணிக்கையானது 249 ஆகும். அவற்றிள் 227 (90%) HIV பாதுகாப்பு சேவைக்கு இணைக்கப்பட்டுள்ளனர்.செயலாற்றுகை அறிக்கையின் படி 2016 இல் தென் கிழக்காசியப் பிராந்தியத்தில் கண்டறியப்பட்ட புதிதாக உள்வாங்கப்பட்ட HIV நிகழ்வுகளின் விகிதமானது இலங்கையில் 1 விகித்த்திற்கு கிட்டியதாகும்.

2016 ஆம் ஆண்டின் STI யின் நிலை

STD சேவைகளின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடானது தேசிய STD / AIDS கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் செயல்நுணுக்க தரவு முகாமைத்துவப் பிரிவினால் மேற் கொள்ளப்படுகின்றத .குறைந்தமட்ட HIV நோய்த் தொற்றில் STI விகிதத்தை கண்காணிப்பதானது HIV பாதிப்பை அடையாளங் காண உதவுவதோடு தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் வெற்றியையும் மதிப்பீடு செய்ய உதவுகின்றது. இதற்கு மேலதிகமாக HIV தொற்றின் தாழ் மட்ட தடுப்பிற்கான உள்ளீட்டுப் புள்ளியாக STI சேவைகள் உள்ளன. STI யின் ஆரம்ப நோய்க் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சையானது HIV பரிமாற்றத்தை குறைக்க்க் கூடியதோடு அதனோடு தொடர் புடைய இறப்பையும் குறைக்கும்.

2016 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்ட பாலியல் தொற்று நோய்களின் எண்ணிக்கை அட்டவணை-30

நோய்க் கண்டுபிடிப்புக்கள்	ஆண்		பெண்		மொத்தம்	
	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%	எண்ணிக்கை	%
அக்கிப்புடை	1,302	31%	1,718	35%	3,020	33%
Non-gonococcal infections	596	14%	1,595	33%	2,201	24%
Genital Warts	1,152	27%	926	19%	2,078	23%
மேகப் புண்	597	14%	337	7%	934	10%
மேகவெட்டை	235	6%	66	1%	301	3%
ஓரணுஒட்டுண்ணி கருச்சிதைவு நோய்	10	0%	55	1%	65	1%
ஏனைய STIs	330	8%	200	4%	530	6%
மொத்தம்	**4,222**	**100%**	**4,897**	**100%**	**9,129**	**100%**

** எல்லா வகையான மேகப்புண் நோய்கள்*

 # பூஞ்சைத்தொற்று மற்றும் புணர்புழையழற்சி ஆகியவை உள்ளடக்கப்படவில்லை

2016 ஆம் ஆண்டில் மொத்தம் 21973 புதிய நோயாளிகள் தேசிய STD / AIDS கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் சேவையைப் பெற்றுக் கொண்டதோடு 65,820 STD பங்கேற்பாளர்கள் மருத்துவமனைக்கு வருகையைமேற் கொண்டிருந்தனர். அவற்றுள் 9,129 STI நோய்க் கண்டு பிடிப்புக்கள்மேலுள்ள அட்டவணையில் சாராம்சப் படுத்தப்பட்டதன் படி மேற்கொள்ளப்பட்டன. அக்கிப்புடை நோயானது பொதுவான STI செயலாற்றுகையாக அறிக்கையிடப்பட்டு இருந்தது.

மேகப் புண் மற்றும் HIV ஆகியவை தாயிடம் இருந்து குழந்தைக்கு பரிமாற்றம் அடைவதை தடுத்தல் (EMTCT)

EMTCT நிகழ்ச்சித் திட்டமானது 2016 இல் முழு நாட்டையும் உள்ளடக்குவதாக அளவிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டமானது 2016 இல் பிரதானமாக அரசாங்க நிதியின் மூலம் மேற் கொள்ளப்பட்டதோடு UNICEF இன் உதவியோடு IEC material அச்சிடப்பட்டதுடன் மறுபரிசீலனைக் கூட்டங்களை நடாத்துதல், பாதுகாப்பான delivery உபகரணங்களை வாங்குதல்.

அறிக்கையிடப்பட்ட தரவுகளின் படி ஆம் ஆண்டின் இறுதியில் EMTCT மேகப் புண்நோய் சரிபார்த்தலுக்கான குறிகாட்டிகளுடன் தொடர்புடைய போதிய நிலையை அடைந்துள்ளதுடன் 2017 ஆம் ஆண்டு இறுதியாகும் போது EMTCT HIV விற்கான குறிகாட்டியை பெரும்பாலும் திருப்தி செய்யும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணுறை சிறப்பு விற்பனை

ஆணுறை சிறப்பு விற்பனையானது HIV உள்ளடக்கிய பாலியல் தொற்று நோய்களை தடுப்பதற்கான வினைத்திறனான முறையாக உலகெங்கும் காணப்படுகின்றது. ஆணுறைப் பாவனையானது அத்தியவசியமற்ற கருத்தரிப்புக்களுக்கு மேலதிக நன்மையைத் தருகின்றது. NSACPனது STD மருத்துவமனை வலையமைப்புக்கள் ஊடாக ஆணுறைகளை ஊக்குவிப்பதுடன் மக்கள் பிரிவினரிடையே இலக்குவைக்கப்பட்ட தனியார் தலையீட்டு நிகழ்ச்சிகளையும் முன்வைக்கின்றது.

2016 ஆம் ஆண்டு பாலியல் தொற்று நோய் மருத்துவ மனைகளால் வழங்கப்பட்ட ஆணுறைகளின் எண்ணிக்கை



மேலுள்ள வரைபானது 2016 ஆம் ஆண்டில் பாலியல் தொற்று நோய் மருத்துவ மனைகளால் வழங்கப்பட்ட ஆணுறைகளின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது

ஆய்வு கூடசேவைகள்

NSACP யானது STI மற்றும் HIV தொடர்பான புதிய பரிசோதனைகளை அறிமுகப்படுத்துவதோடு நடைமுறையில் உள்ள பரிசோதனைகளின் தரத்தையும் விருத்தி செய்ய ஆரம்பித்துள்ளது. HIV திரையிடலுக்கான எல்லா புற ஆய்வு கூடங்களும் ELISA தொழிநுட்பத்துடன் உபகரணமயப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2016 இல் புற மருத்துவமனைகளுக்கு பங்களிப்பு செய்யப் பட்டதோடு அறிக்கையிடப்பட்டுள்ளது. NSACP குறிப்பு ஆய்வு கூடத்தில் க்ளமீடியா,மேகவெட்டை நோய் மற்றும் HSV ஆகியவற்றிற்கு PCR தொழிநுட்பத்துடன் கூடிய real-time பரிசோதனைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.மேலதிகமாக வெளி மாவட்டங்களில் HIV முகாமைத்துவத்தை மேலும் எளிதாக்க இரண்டு CD4 இயந்திரங்கள் கண்டி,காலி பாலியல் தொற்று நோய் மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டதோடு காலி,அநுராதபுரம் மருத்துவமனைகளுக்கு real-time PCR இயந்திரங்கள் இரண்டு வழங்கப்பட்டன.

பல்துறை ஒத்துழைப்பு

இந் நிகழ்ச்சித் திட்ட பரப்பானது 2013-2017 HIV தேசிய செயல் நுணுக்கத் திட்டத்தில் இனங்காணப்பட்ட பாதிக்கப்பட்ட குழுவினரை நோக்காகக் கொண்ட செயற்பாடுகளில் பிரதான கவனத்தைக் கொண்டுள்ளது. இது பல் பிரிவு நிறுவனங்களின் STI மற்றும் HIV தடுப்புச்

செயற்பாடுகளை உள்ளகப்படுத்தல் மற்றும் ஆலோசனை, ஆற்றலைக் கட்டி எழுப்புதல்,விளிப்புணர்வு போன்றவற்றிற்கு தொழிநுட்ப உதவிகளை வழங்கல், ஒருங்கணைப்பு மற்றும் மேற்பார்வை செய்கின்றது. தேசிய STD / AIDS கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் சிறைச்சாலைகளில் HIV தடுப்பு, சிகிச்சை மற்றும் பங்களிப்பு மீது கொள்கையை விருத்தி செய்தது. 2016 ஆம் ஆண்டில் மொத்தமாக 12776 சிறைக்கைதிகள் தன்னிச்சையாக HIV பரிசோதனைக்கும் நாடளாவிய ரீதியில் உளவள ஆலோசனைக்கும் உட்பட்டனர். அவர்களில் 6 பேர் HIV தொற்றுக்கு உள்ளானவர்கள். 2016 இல் ஆயுதம் தாங்கிய படைகள்,பொலிஸ் பிரிவு, இளைஞர் பிரிவினர்,கல்விப் பிரிவு, குடிவரவுப் பிரிவு மற்றும் சுற்றுலாத்துறைப் பிரிவு ஆகியவற்றில் HIV பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டமானது தொடர்ந்தது.

உலக நிதியத்தினால் ஒத்துழைக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டு செயற்பாடுகள்

பல வருடங்களாக தேசிய STD / AIDS கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்துடன் உறுதியாக இணைந்து உலக நிதியமானது AIDS, காசநோய் மற்றும் மலேரியா ஆகியவற்றுக்கு எதிராக தொழிற்பட்டு வருகின்றது. NSACP யானது 2016-2018 வருட காலப்பகுதிக்கு புதிய நிதியிடல் மாதிரி திட்டத்தின் கீழ் 5,323,102 அமெரிக்க டொலர் நன்கொடையைப் பெற்றுள்ளது.

6.1.8 டெங்கு நோய் கட்டுப்பாட்டு தேசிய நிகழ்ச்சித் திட்டம்

கள மட்டத்திலான டெங்கு தடுப்பு செயற்பாடுகள்– ஒன்றிணைந்த காவி முகாமைத்துவம்– "ஒன்றிணைந்து டெங்குவை ஒழிப்போம்"

இலங்கையில் பாரிய சவாலான சுகாதாரப் பிரச்சினையாக டெங்கு நோய் காணப்படுகின்றது. சுகாதார அமைச்சானது கடந்த வருடங்களில் டெங்கு நோய் முகாமைத்துவம் மற்றும் ஆரம்பத்தில் நோயைக் கண்டறிதல் ஆகியவற்றின் ஊடாக டெங்கு நோயைக் குறைப்பதற்கு உயிர்ப்பான நிகழ்ச்சிகள், எண்ணற்ற செயற்பாடுகளை நிறுவியுள்ளது. குறைந்த இறப்பு விகிதத்தால் பிரதிபளிக்கப்பட்டதன் படி 2016 ஆம் ஆண்டில் மொத்தமாக 54,945

டெங்கு நோயாளிகள் முழு நாட்டிலும் அறிக்கையிடப்பட்டனர் 100,000 சனத்தொகைக்கு 262 பேர் விகிதத்தை ஒத்திருக்கின்றது. முன்னைய வருடத்தை விட 0.05% குறைவான இறப்பு விகிதமான 0.15 % உடனான இறப்புக்களின் எண்ணிக்கை 90 ஆகும்.

2017 ஜூன் ஆகும் போது 210 இறப்புக்களுடன் 69380 நோயாளிகள் அறிக்கையிடப்பட்டனர். 2009-2017 வரை இறப்பு நிகழ்வுகள்

2016 ஆம் ஆண்டின் விஷேட நிகழ்வுகள்/சாதனைகள்

வருடம்	அறிக்கையிடப்பட்ட டெங்கு நோய்கள்	டெங்கு மரணங்கள்	இறப்பு விகிதம்
2010	34,105	246	0.72
2011	28,473	186	0.65
2012	44,461	181	0.41
2013	32,063	89	0.27
2014	47,502	97	0.20
2015	29,777	60	0.20
2016	54,945	85	0.15
2017	69,000	120	0.3

ஒன்றிணைந்த காவி முகாமைத்துவம்(IVM); காவி கண்காணிப்பு மற்றும் ஒன்றிணைந்த காவிக் கட்டுப்பாடு

IDH இல் புதிய டெங்கு நோய் சிகிச்சை பிரிவை திறந்து வைத்தல்

கொழும்புதெற்கு, கலுபோவில போதனா வைத்தியசாலையில் உயர் சார்பு பிரிவைத் திறத்தல் மற்றும் டெங்கு நோய் முகாமைத்துவத்திற்காக பிரதான வைத்தியசாலைகளின் ஆய்வு கூட வசதிகளை விருத்தி செய்வதனை இலக்காகக் கொண்டு புதிய தன்னியக்க சிகிச்சை பகுப்பாய்விகளை வழங்கல்.

வளக் குறைப்புக்களை உள்ளடக்கிய (நுளம்பு பெருகும் இடங்களைக் குறைத்தல்) காவிக் கட்டுப்பாட்டுத் தலையீடுகள், உயிரியல் மற்றும் இரசாயன காவிக் கட்டுப்பாட்டு செயற்பாடுகளானவை உரிய எல்லா பங்குதார்ர்களுடனும் இணைந்து சுகாதார அதிகாரிகளினாலும் சுகாதார அமைச்சின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப சமூகத்தினாலும்மேற் கொள்ளப் படுகின்றது.

இணைந்த காவி முகாமைத்துவத்தில் மத்திய மற்றும் பிராந்திய மட்டத்திலான தொழிநுட்ப உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் அனுபவத்தை விருத்தி செய்வதற்காக 10 தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் காவி கண்காணிப்பு,கட்டுப்பாடு ,மேற்பார்வை மற்றும் ஆய்வு கூட செயற்பாடுகளுல் சிங்கப்பூரில் பயிற்றப்பட்டனர். 2016 ஆம் ஆண்டில் இலங்கையின் காவி கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு முறையை சீர் செய்வதற்கான பயிற்சியிலிருந்து உள்ளீடுகளுடனான “ **ஈடிஸ் காவி கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு வழிகாட்டல்** ஆனது அச்சிடப்பட்டு பகிர்ந்தளிக்கப் பட்டது.

நோய்க் கண்காணிப்பு

நோய்த்தொற்றியல் பிரிவுடன் இணைந்த வலையமைப்பை அடிப்படையாகக் கொண்ட காவல் தளக் கண்காணிப்பானது 2016 ஆம் ஆண்டில் டெங்கு நோயாளிகளின் தகவல்களை அனுப்புவதற்காக 56 வைத்தியசாலைகளை உள்ளடக்கியதாக மேலும் வலுப்படுத்தப்பட்டது

விடய முகாமைத்துவம்

சுகாதார அமைச்சின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு, நோய்த்தொற்றியல் பிரிவு மற்றும் கல்வி ஆகியவற்றுக்கிடையில் ஒருங்கிணைக்கப்பட்ட தேசிய வழிகாட்டல்களை அடிப்படையாகக் கொண்ட டெங்கு நோயாளிகளின் முறையான முகாமைத்துவத்தில் குணப்படுத்தும் சுகாதார பாதுகாப்பு பணியாட்கள் பயிற்றப்பட்டனர்.மேலும் விடய முகாமைத்துவ பிரிவினருக்கு உபகரணங்களை வழங்குவதன் மூலம் தரமுயர்த்தப்ப பட்டது.

2016 சுகாதார நிறுவனங்களின் HD அலகுகளுக்கு வழங்கப்பட்ட உபகரணங்கள்

வைத்தியசாலைகள் வகைகள்	2016 வழங்கப்பட்ட HDUs களின் எண்ணிக்கை
பொதனா வைத்தியசாலைகள் (with NHSL)	12
மாகாணப் பொது வைத்தியசாலைகள்	03
மாவட்ட பொது வைத்தியசாலைகள்	15
“A” தர ஆதார வைத்தியசாலைகள்	17
“B” தர ஆதார வைத்தியசாலைகள்	19
மொத்தம்	**66**

இதற்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளை முன்னேற்றுவதற்கு அல்லது விடய முகாமைத்துவ வசதிகளை தரமுயர்த்துவதற்கு அறிவுறுத்தல்களுடன் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன

2016 இல் சுகாதார நிலையங்களில் HD அலகுகளுக்கான ஒதுக்கீடுகள்

மாகாணம்	ஒதுக்கீடுகள் மில்லியனில்
PDHS மேற்கு	14.95
PDHS வடமேல்	24.95
PDHS மத்திய	8.32
PDHS கிழக்கு	24.79
PDHS ஊவா	5.59
PDHS தெற்கு	29.79
PDHS வட மத்திய	2.61
PDHS வடக்கு	13.87
PDHS சப்ரகமுவ	28.38
மொத்தம்	**153.29**

சமூக அணிதிரட்டல்,உள்-துறை ஒருங்கிணைப்பு மற்றும் நோய் பரவலுக்கான எதிர் நடவடிக்கைகள்

2016 ஒக்டோபர் 24 ஆம் திகதி டெங்கு தடுப்பு தொடர்பான சனாதிபதியின் விஷேட படையினரின் கூட்டம் இடம் பெற்றது. பிரச்சினையை சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மார்ச் 29 ஆம் திகதி முதல் ஏப்ரல் 4 ஆம் திகதி, செப்டம்பர் 7 தொடக்கம் ஒக்டோபர் 3 வரை நுளம்பு கட்டுப்பாட்டு இரு வாரங்கள் நடத்தப்பட்டன. ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள் தெரிவு செய்யப்பட்ட உயர் ஆபத்தைக் கொண்ட கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை இலக்காகக் கொண்டு ஆயுதம் தாங்கிய படைகள், பொலிஸ் ஆகியோரின் உதவியுடன் வீடுகள், பாடசாலைகள்,நிறுவனங்கள்,பொது மற்றும் மதத் தளங்கள் தரிசு நிலங்கள் ஆகியவற்றில் இடம் பெற்றன.

முப்படைகள்,சிவில் பாதுகாப்புப் படைகள்,பொலிஸ் மற்றும் சுகாதார சேவைகளிலிருந்து அண்ணளவாக தெரிவு செய்யப்பட்ட 50,000 பணியாட்களைக் கொண்ட உயிர்ப்பான சிவில்-இராணுவ ஒத்துழைப்பொன்று இடம் பெற்றது மொத்தமாக 2,298,003 வளாகங்கள் ஆய்வு செய்யப்பட்டதோடு 40,287 (1.75 %) குடம்பிகளுடனான நுளம்பு பெருகுவதற்கு சாதகமான 452,934 இடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. (பின்னிணைக்கப்பட்டுள்ளது)

இச் செயற்பாடானது பிரதானமாக நுளம்பு பெருகும் இடங்களை கண்டு பிடிப்பது மற்றும் சுகாதாரக் கல்வியின் மூலம் புலப்படுத்தப்பட்ட வளக் குறைப்பினூடாக குறைப்பது, தேவை ஏற்படும் போது ஏனைய காவி கட்டுப்பாட்டு முறைகளான குடம்பிகளை அழித்தல், புகையூட்டல் மற்றும் தேவை ஏற்படும் போது சட்ட நடவடிக்கைகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டது. மருத்துவ சுகாதார உத்தியோகத்தரின் பிரசேங்களில் உள்ள அதி தீவிரமாக நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல் மற்றும் அடையாளங் காண்பதற்காக கட்டங் கட்டமாக 1500 தொழிலாளர்களை (நுளம்புத் தடுப்பு கள உதவியாளர்களை) ஆட்சேர்ப்பு செய்வதற்கான கபினட் பத்திரமானது அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

6.1.9 நிச்சயமற்ற நீண்ட கால சிறுநீரக நோய் தோற்ற முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டம்

நீண்ட கால சிறுநீரக நோய் பாரிய அளவிலான விழ்படிவுக் காரணிகளால் ஏற்படுகின்ற பரந்த ஒரு நோயாகும். குழாய் நொதித்தலை ஏற்படுத்துகின்ற நீண்ட கால சிறுநீரக நோயானது நச்சுத் தன்மையுள்ள நரம்பியல் நோயாகும். நீண்ட கால சிறுநீரக நோயானது முதலாவதாக 90களில் வட மத்திய மாகாணத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தத்தினால் ஏற்படுகின்ற நீண்ட கால சிறுநீரக நோயின் உடல் அறிகுறிகளிலிருந்து வேறுபடுகின்றது. வட மத்திய மாகாணத்தைத் தவிரநீண்ட கால சிறுநீரக நோயானது அம்பாறை,பதுளை, குருணாகல், முல்லைதீவு, மொனராகலை,திருகோணமலை, அம்பாந்தோட்டை,வவுனியா ஆகிய மாவட்டங்களையும் பாதித்துள்ளது.

நிச்சயமற்ற நீண்ட கால சிறுநீரக நோய்த் தோற்றமானது நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம்,நுரையீரல் கல்குலஸ், க்ளோ மெரனெப்டினஸ், சிறுநீரக நுண்குழலழற்சி அல்லது பாம்புக் கடி ஆகியவற்றால் ஏற்படுகின்ற நோய் அல்ல. இலங்கையில் நீண்ட கால சிறுநீரக நோயின் நோய்க் காரணியானது நிச்சயமற்றதாகும். இருப்பினும், விவசாய இரசாயனங்கள், கல்சியம் மற்றும் ப்லோரைட் ஆகியவற்றைக் கொண்டுள்ள கடின நீர் ஆகியவற்றின் உயர் பாவனை,போதிய அளவு நீர் பருகாமை, சூட்டினால் ஏற்படுகின்ற நீரிழப்பு மற்றும் சில இரசாயனங்களின் இருப்பு மற்றும் இன்மை (உயர் மட்டத்திலான ஆர்சனிக் மற்றும் கட்மியம், குறைந்த மட்டத்திலான செலனியம்)போன்ற பல்வேறு காரண காரியங்கள் இந்நோய்க்கு காரணியாக அமைகினறன.

அண்ணளவாக 60,000 நிச்சயமற்ற நீண்ட கால சிறுநீரக நோயாளிகள் அதி தீவிர பிரதேசங்களில் இருந்து பெரும்பான்மையாக வட மத்திய மாகாணத்தில் இருந்து மதிப்பீடு செய்யப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப் பட்ட ஆய்வொன்றின் படி 24,800 நோயாளிகள் அதி தீவிர பிரதேச செயலாளர் எல்லைக்குள் இருக்கின்றனர்.

பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள தீவிர CKDu நோயாளிகள் மற்றும் CKD

தீவிர பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்ட மாவட்டங்கள்	2017 ஜனவரி 31 ஆம் திகதியிலிருந்து நோயாளிகளின் எண்ணிக்கை		2017 ஜனவரி 31 ஆம் திகதியிலிருந்தான நோய்த் தாக்கங்கள்
	பிரதேச செயலாளர் பிரிவுகளின் சனத் தொகை	கண்டறியப்பட்ட CKD/CKDu நோயாளிகளின் எண்ணிக்கை	
அநுராதபுரம் – எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகள்	920,187	9,902	1.07%
பொலன்னறுவை – எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகள்	443,818	5,306	1.19%
பதுளை – கிரதுருகோட்டை, ரிதீமாலியத்த, மஹியங்கனை.	181,644	1,691	1.29%
குருநாகல் – பொலபிடிகம ,எஹெதுவெவ தீவிரம் குறைவு – கிரிபேவ, கொடவெஹெர, மாஹோ,நிகவரடி	433,298	1,904	0.44%

மாத்தளை – வெலிகமுவ தீவிரம் குறைவு – நவுல, ப்லேகம, கலேவல, தம்புளை	114,333	1,611	0.97%
மொனராகலை – புத்தளை, வெல்லவாய, தனமல்வில	162,066	394	0.18%
முல்லைதீவு- வெலி ஓயா, மல்லாவி	28,605	492	1.5%
வவுனியா – செட்டிக் குளம் வவுனியா தெற்கு, வவுனியா	176,030	1,542	0.88%
திருகோணமலை– பதவிசிரிபுர, குமரன்கடவலை, கந்தளாய்	87,079	702	0.49%
அம்பாறை-தெஹியத்தகண்டிய, மஹாஓய	89,510	1,077	1.2%
அம்பாந்தோட்டை- திஸ்ஸமஹாராம,சூரியவெவ அங்குனுகொல பெலெஸ்ஸ, லுநுகம் வெஹெர	611,576	185	0.05%
மொத்தம்	**3,248,146**	**24,806**	**0.76%**

நிச்சயமற்ற நீண்ட கால சிறுநீரக நோய் தோற்ற முகாமைத்துவத்திற்காக குணப்படுத்தும் பிரிவை வலுப்படுத்தல்

1. அதி தீவிரமாக உள்ள மாவட்டங்களில் 15 குருதி சுத்திகரிப்பு அலகுகளை அமைத்தல்

2. நீண்ட கால சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட உயர் ஆபத்தான பிரதேசங்களில் உள்ள வைத்தியசாலைகளின் ஆய்வுகூட வசதிகளை விருத்தி செய்தல்.

   அ) ஆய்வுகூடத் தேவைகளானவை நீண்ட கால சிறுநீரக நோயாளிகள் முகாமைத்துவ முறைமையின் 4 வகைக்கு ஏற்ப அடையாளங் காணப்பட்டு வலுவூட்டப்பட்டன. 2016 இல் 4 தேசிய வைத்தியசாலை,அநுராதபுரம் போதனா வைத்தியசாலை,பேராதனை போதனா வைத்தியசாலை ஆகயவற்றில் 4 சிறுநீரக அலகுகள் வலுப்படுத்தப்பட்டன.

3. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, கராப்பிடிய போதனா வைத்தியசாலை, பதுளை மாகாணப் பொது வைத்தியசாலை , திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை ஆகியவற்றில் சிறுநீரக அலகுகளை அமைத்தல்.

4. குருதி சுத்திகரிப்பு வசதிகளை வலுப்படுத்தல்

   அ) 2016 ஆம் அண்டில் 229 குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள் அரசாங்க வைத்தியசாலைகளில் தொழிட்பாட்டில் இருந்தன. மேலும் 236 புதிய இயந்திரங்களை முறைமைக்கு இணைப்பது 2016 ஆம் ஆண்டு ஆரம்பமாகியது. இது 2017 ஜூலை ஆகும் போது பூரணப்படுத்தப் படும்.

   ஆ) குருதி சுத்திகரிப்பு அலகிற்கான ஆளணியினரின் தேவை அடையாளங் காணப்பட்டுள்ளதோடு ஆட்சேர்ப்பு செய்வதற்கு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்படுகின்றது

பின்வரும் அட்டவணையானது மாவட்டங்களில் விநியோகம் செய்யப்பட்ட

டயலைஸிஸ் இயந்திரங்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றன

மாகாணம்	மாவட்டம்	டயலைஸிஸ் இயந்திரங்களின் எண்ணிக்கை		
		தொழிற்படும் இயந்திரங்கள் 2016	ஆம்ஆ2016 ண்டின் இறுதியில் புதிதாகபெறு கை செய்யப்பட்ட	ஆம் 2017 ஆண்டில் புதிதாகபெறுகை செய்யப்பட்டவை
வட மத்திய	அநுராதபுரம்	33	12	
	பொலன்னறுவை	19	16	
ஊவா	பதுளை	14		25
	மொனராகலை	07		4
வடமேல்	குருநாகல்	16	06	06
	புத்தளம்			04
சப்ரகமுவ	இரத்தினபுரி		03	04
வடக்கு	யாழ்ப்பாணம்	10	11	
	முல்லைதீவு	0	02	
	வவுனியா	06	06	
	கிளிநொச்சி		02	
	மன்னார்		02	
தென்	ஆமபாந்தோட்டை	0		04
	மாத்தறை	02	01	02
	காலி	11		02
கிழக்கு	மட்டக்களப்பு	05	08	
	கல்முனை	0	13	
	திருகோணமலை	09	10	
	அம்பாறை	08	12	
மத்திய	கண்டி	34	32	
	மாத்தளை	0		08
	நுவரெலியா	0		02
மேல்	கொழும்பு	52	13	
	கம்பஹா	03	18	
	களுதுறை	0	08	
மொத்தம்		**229**	**175**	**61**

6.2 சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தர உயர்வு

6.2.1 *நோய்த் தொற்றியல் பிரிவு*

நோய்த் தொற்றியல் பிரிவானது தடுப்பூசி மூலம் தடுக்கக் கூடிய நோய்கள்,எழும் நோய்கள் ,மீள் எழும் நோய்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பெரும்பாலான தொற்று நோய்கள், அவற்றின் ஆபத்தான நோய்க் காரணிகளின் கட்டுப்பாடு மற்றும் தவிர்ப்பு ஆகியவற்றுக்கான தேசிய மையம் ஆகும்.

நோய்த் தொற்றியல் பிரிவினது தூரநோக்கானது " ஆரோக்கியமான இலங்கையில் ஆரோக்கியமான மக்கள்" மற்றும் அதன் செயற்பணி நோய், காயம், இயலாமை ஆகியவற்றின் மூலம் வாழ்க்கைத் தரம் மற்றும் ஆரோக்கியத்தை தரமுயர்த்தல" என்பதாகும்.

2016 ஆம் ஆண்டின் விஷேட நிகழ்வுகள்/பெறுபேறுகள்

A. தேசிய நோய்த் தடுப்பு நிகழ்ச்சித் திட்டம்

- தேசிய நோய்த் தடுப்பு கொள்கையானது இலங்கையில் நீண்ட காலமாக உணரப்பட்ட ஒரு கொள்கை ஆகும். இக் கொள்கைக் காண ஆதரவானது தேசிய தொற்று நோய் நிகழ்ச்சித் திட்டத்தை நன்றாக அமுல்படுத்துவதற்கு மிகவும் உதவியான ஒன்றாகும். வினைத் திறனான ஒரு நோய்த் தடுப்புக் கொள்கையானது நோய்த் தொற்றியல் பிரிவின் தலைமைத்துவத்தின கீழ் அது தொடர்பான தொழில் முறைக் கல்லூரிகள், சிரேஷ்ட கல்வியலாளர்கள்,கல்வி மற்றும் நீதித் துறை அமைச்சு ஆகியோரை உள்ளடக்கிய பங்குதார்ர்களின் பங்களிப்புடன் விருத்தி செய்யப்பட்டது. நோய்த் தடுப்பு கொள்கையானது விருத்தி செய்யப்பட்டு 2015 ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்தையும் பெற்றுக் கொண்டது. நோய்த் தடுப்பு கொள்கையானது 2016 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலாக பிரசுரிக்கப்பட்டு இருந்தது.
- IPV குறைபாட்டை எதிர் கொள்வதற்கான உலக சுகாதார தாபனத்துடன் இணைந்து இலங்கையும் IPV யின் பகுதியான மருந்து அளவு. நிர்வாகத்தை வெற்றிகரமாக நிறுவியுள்ளது. உயர் பாதுகாப்பினை தொடர்ச்சியாக செய்து கொண்டு இதனைப் பரவலாக செய்கின்ற ஒரே நாடு இலங்கை ஆகும். பின்னைய நிறுவல் மதிப்பீடு மற்றும் கண்காணிப்பானது IPV பகுதியான மருந்து அளவின் அறிமுகத்தின் பின்னர் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. போலியோ மாற்றீடு மேற்கொள்ளப்பட்டது. 2016 ஆம் ஆண்டு உலக போலியோ ஒழிப்பு செயல்நுணுக்கத்தை நடைமுறைப்படுத்த topv யானது bopv யாக மாற்றப்பட்டது.

B. மஞ்சள் காமாலை நோயின் மருத்துவ முகாமைத்துவத்தின் மீதான தேசிய வழிகாட்டல்களானவை அதனுடன் தொடர்புடைய தொழில் முறைக் கல்லூரிகள் மற்றும் சிரேஷ்ட கல்வியலாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நோய்த் தொற்றியல் பிரிவினால் விருத்தி செய்யப்பட்டது.

C. நீரின் தரப் பரிசோதனைக்கான ஆய்வு கூட இரசாயனப் பரிசோதனை மற்றும் பாரிய உலோகப் பரிசோதனைக்கான அநுராதபிர நீர்த் தர ஆய்வு கூடத்தை தரமுயர்த்துவதன் ஊடாக வலுப்படுத்தப்பட்டது.

6.2.2 தாய் மற்றும் பிள்ளை பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்

குடும்ப சுகாதார நிகழ்ச்சித் திட்டமானது நாடு பூராகவும் உள்ள குடும்பங்களின் சுகாதாரத்தை மேம்படுத்தல்; விஷேடமாக தாய் மற்றும் பிள்ளையின் சுகாதாரத்தை வலியுறுத்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டுள்ளது. இந் நிகழ்ச்சித் திட்டமானது இலங்கையர்கள் நன்மை பெறக் கூடிய வகையில் பரந்தளவில் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு சுகாதார சேவைகளை வழங்குகின்றது. நடைமுறையில் உள்ள குடும்ப சுகாதார நிகழ்ச்சித் திட்டமானது 85 வருடங்களுக்கு மேலான வெற்றிகரமான முதிர்ச்சி நிகழ்ச்சியைப் பிரதிபளிக்கின்றது. இந் நிகழ்ச்சித் திட்டமானது பல தரப்பட்ட ஒழுங்கைக் கொண்டு சுகாதார பண்பட்டவர்களால் வழங்கப்படுகின்ற வினைத்தறனான தலையீடுகள் மீது தங்கியிருக்கின்றது. நிகழ்ச்சித் திட்டத்தின் பாரிய பகுதியானது இயற்கையாக தடைசெய்தல் ஆவதோடு ஒரு சில பகுதிகள் இரண்டாம் நிலை பாதுகாப்பான சுகாதாரத் தரத்தை உறுதி செய்யக் கூடிய தலையீடுகளை உள்ளடக்கி இருக்கின்றது.

குடும்ப சுகாதார நிகழ்ச்சித் திட்டமானது பாரிய கூறுகளைக் கொண்டுள்ளது.

1. முன்கூட்டிய பராமரிப்பு
2. தாயின் பாதுகாப்பு
3. மகப்பேற்றின் பின்னர் தாய் மற்றும் சேய் பாதுகாப்பு.
4. வளர்ச்சி,போஷாக்கு,விஷேட தேவையை உடைய சிறுவர்களை உள்ளடக்கிய குழந்தை மற்றும் சிறுவர் சுகாதாரம்.
5. பாடசாலை மற்றும் கட்டிளமைப்பருவ சுகாதாரம்
6. குடும்பத் திட்டமுடல்
7. பால்தொடர்பான கவனம் மற்றும் மாதவிடாய் முடியும் காலம்

ஆகியவற்றை உள்ளடக்கிய பெண்களின் சுகாதாரம்.

2016 ஆம் ஆண்டின் விஷேட நிகழ்வுகள்/சாதனைகள்

அ) கொள்கை மற்றும் ஆதரவு

1“ தாய்ப் பாலுட்டல் மற்றும் நியமிக்கப்பட்ட உற்பத்திகளின் சந்தைப் படுத்தலுக்கான தர உயர்வு, பாதுகாப்பு, மற்றும் ஒத்துழைப்பிற்கான இலங்கையின் விதித்தொகுப்புக்களை வலுப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்” என்பதன் மீது மலேஷியாவில் இருந்து வந்த இரு சர்வதேச வளவாளர்களால் குடும்ப சுகாதார பணியகத்தில் ஜூன், ஜூலை மாதங்களில் நடத்தப்பட்ட மருத்துவ நிர்வாகிகள், சமூக ஆலோசனை நிபுணர்கள்,சட்ட அலுவலர்கள், குழந்தை மருத்துவர்களை உள்ளிட்ட 26 நபர்களை உள்ளடக்கிய குழாமிற்கு தேசிய மட்டத்திலான 5 நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றது.

2.பாலின மற்றும் இனப்பெருக்க சுகாதார சுகாதார சேவையை இளம் பெண்களுக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகள் மீதான நீதிபதிகளுக்கு ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம் நடைபெற்றது.

3. நீதி,பொலிஸ் மற்றும் தோடடத்துறை முகாமைத்துவத்திற்கான பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு வன்முறை மற்றும் வினைத்திறனானதும் தரமானதுமான தலையீடுகள் மீதான ஆலோசனை நிகழ்ச்சித் திட்டம்.

ஆ) செயல் நுணுக்கம் மற்றும் தொழிநுட்ப வழிகாட்டல்

1. 2025 ஆம் ஆண்டின் இலக்குகளான தாய்,சேய் மற்றும் சிறுவர் அபிவிருத்தியை நோக்காக் கொண்டு நிகழ்ச்சித் திட்டத்தின் நிகழ்ச்சித் திட்டமானது போஷாக்கு கூறின் செயற்பாட்டிற்கு வழியமைத்தல்.

2. “கைக் குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கு உணவளித்தல் தொடர்பான தேசிய செயல் நுணுக்கம்-2015-2020 ஆரம்பிக்கப்பட்டது. இச் செயல் நுணுக்கத்தின் நோக்கமானது சிறுவர் போஷாக்கை விருத்திசெய்வதில் உரிய பங்குதாரர்களுக்கும் வழிகாட்டலை வழங்குவதாகும்.



3. 2017- 2020 வரை இலங்கையில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் தடுக்கக் கூடிய நோயுற்ற தன்மை மற்றும் இறப்பு விகிதம் ஆகியவற்றைக் குறைப்பதற்கான செயற் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டும் விருத்தி செய்யப்பட்டும் 12 மாவட்டங்களுக்கு அறிமுகப் படுத்தப்பட்டது.

4. 2017- 2020 வரையான தேசிய தாய் மற்றும் சேய் சுகாதார செயல்நுணுக்கத் திட்டமானது விருத்தி செய்யப்பட்டது.

5. ஆற்றலைக் கட்டி எழுப்புதல்

   I. உடல் நிலை சரியில்லாமல் பிறந்நத குழந்தைகளின் சுகாதார பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட இரு முதுநிலை நிகழ்ச்சித் திட்டங்கள் “லிவர்பூல் ஸ்கூல் ஒப் மெடிசினால்” 2 முதுநிலை பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப் பட்டன. குழந்தை நல மருத்துவர்கள், மருத்துவ உத்தியோகத்தர்கள்,தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் குடும்ப நல மருத்துவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய 34 முதுநிலை பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

   II.“போஷாக்கு மாத தொழிநுட்ப மேம்பாடு” ஆனது போஷாக்கு மாத சுகாதார செயற்பாடுகள் மீதான வெளி சுகாதார ஆளணியினரை மேம்படுத்துவதற்காகவும் 2017 ஆம் ஆண்டிலிருந்தான சிறுவர் சுகாதார நிகழ்ச்சித் திட்டத்திற்கு புது சேர்க்கைளை மேம்படுத்துவதற்கு நடை பெற்றது.(CHDR அட்டவணைக்கு குறைப்பிரசவத்தை உள்ளடக்குதல் மற்றும் நாடளாவிய ரீதியில் MN குறை நிரப்பினை அளவிடுதல்)

   II. கைக்குழந்தைகள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கு உணவளித்தல் தொடர்பாக மாவட்ட மட்டத்திலான பயிற்சியாளர்கள் MOMCH,MOH கள் மற்றும் மாகாண மட்ட இலங்கை மருத்துவ கல்லூரிகள் அமைச்சு ஆகியவற்றை உள்ளடக்கிய முதுநிலை பயிற்சியாளர்கள் பயிற்றப்பட்டனர்.

   III. விஷேடமாக இலக்கு வைக்கப்பட்ட குழுக்களின் போஷாக்கு நிலைமையை விருத்தி செய்வதற்கான கைக்குழந்தைகள் மற்றும் இளம் பிள்ளைகளுக்கு

உணவூட்டல் ஆலோசனை மற்றும் வளர்ச்சி மதிப்பீட்டின் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக உலக சுகாதார தாபனத்தின் புதிய வளர்ச்சித் தரங்கள் மற்றும் வளர்ச்சி கண்காணித்தல் மற்றும் மேம்பாட்டின் மீது மொனாரகலை மற்றும் திருகோணமலை மாவட்டங்களைச் செர்ந்த பொது சுகாதார குழுக்கள் பயிற்றப் பட்டனர்.

IV. கைக் குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு உணவளிப்பது தொடர்பாக மாவட்ட மற்றும் முதுநிலை பயிற்சியாளர்கள் பயிற்றப்பட்டனர்.

V. “வாழ்க்கைத் திறன்கள்” மற்றும் “பாடசாலை மருத்துவ கண்காணிப்புக்கள்” மீது 22 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.

VI. தடுப்பு மற்றும் குணப்படுத்தல் குடும்பத் திட்டமிடல் சேவைகளை வழங்குகின்ற மருத்துவ உத்தியோகத்தர்களின் 17 மாவட்ட மட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பயிற்சியாளர்களின் 1 பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் என்பன நடத்தப்பட்டன.

6.உ ரிய பங்குதாரர்களின் பங்குபற்றலுடன், இரும்புத சத்து குறைபாடான குருதிச் சோகையை கைக் குழந்தைகள் மற்றும் இளம் சிறுவர்களிடையே காணப்படுகின்ற அறிக்கையிடுவதற்காக இம் முக்கிய இலக்குக் குழுவின் இரும்புத் சத்து நிரம்பல் மீது சுற்றுநிருப வழிகாட்டலொன்று ஆலோசனை செயன்முறை ஒன்றினூடாக விருத்தி செய்யப்பட்டது.

7. சுகாதார ஆளணியினருக்கு “கட்டிளமைப்பருவ பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார வழிகாட்டலானது” விருத்தி செய்யப்பட்டது.

8.மூலைக் காய்ச்சல் ,டெங்கு மற்றும் H1N1 தொற்றினால் ஏற்படுகின்ற மரணங்களைத் தடுப்பதற்காக தடுப்பதற்காக உள்ளகப் பாதுகாப்பிற்கான ஒரு நாள் காய்ச்சலுக்கான அனுமதி மற்றும் குழந்தை நல இதய நோய் ஆகியவற்றுக்கான இணைந்த மருத்துவ நிகழ்ச்சியை நடத்துதல்

9. குழந்தை நலப் பிரிவு அனுமதிக்கான சுற்றறிக்கை ஒன்று வெ ளியிடப்பட்டது.

10. தாய் பாதுகாப்பு பாகம் III இற்கான தேசிய வழிகாட்டல்கள் அச்சிடப்பட்டு பங்கீடு செய்யப்பட்டன.

11 .பாதுகாப்புத் தொடர்ச்சி மற்றும் பங்கீடு செய்யப்பட்ட பாதுகாப்பை விருத்தி செய்வதற்காக கர்ப்பகாலப் பதிவேடானது வைத்தியசாலை மருத்துவப் பரிசோதனை பாதுகாப்பை பதிவு செய்வதற்கான இடத்துடன் புதுப்பிக்கப்பட்டது.

12. தாயிடமிருந்து சேய்க்கு மேகப்புண் நோய் பரிமாற்றமடைவதை நீக்குதல் மற்றும் NSACP யின் பங்களிப்புடன் HIV நிகழ்ச்சித் திட்டமானது ஆரம்பிக்கப்பட்டது.

13 .DMH,CSTW,TH மஹமோதர போதனா வைத்தியசாலை, அநுராதபுர மாவட்ட பொது வைத்தியசாலை,வவுனியா ஆதார வைத்தியசாலை, குளியாப்பிடிய ஆதார வைத்தியசாலை, கெதுமதீ ஆதார வைத்தியசாலை, அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலை ஆகிய 10 வைத்தியசாலைகளில் கர்ப்பகால மற்றும் பிரசவத்திற்கு பின்னரான பிரசவ அறை மற்றும் புதிதாய்ப் பிறந்த குழந்தைகள் பிரிவு ஆகியவற்றுக்காக வைத்தியசாலைகளில் தாய் மற்றும் சேய் மதிப்பீட்டு உபகரணத்தின் தரமானது சேவைகளானவை விருத்தி செய்யப்பட்டன.

c. சுகாதார முறைமையை வலுவூட்டல்

1. தாய் மற்றும் பிள்ளை சுகாதாரம், போஷாக்கு மருத்துவ நிகழ்ச்சிகள் ஆகிய துறைகளில் தரப் பாதுகாப்பை வழங்குதற்காக வசதிகளானவை பெறுகை மற்றும் அந்ரோபோமெற்றிக் உபகரண விநியோகத்தினால் பெறுகை செய்யப்பட்டன.

2. சேவைகளை மேலும் ஒழுங்கு படுத்துவதற்காக MOOH இனால் நடாத்தப்பட்டது. போஷாக்கு மருத்துவ நிகழ்ச்சிகளுக்கு போஷாக்கு மருத்துவ நிகழ்ச்சி இடாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது.

3. மஹமோதர போதனா வைத்தியசாலை , திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை,புத்தளம் ஆதார வைத்தியசாலை, கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைகளுக்கு பிரசவ காலத்தில் மற்றும் பிரசவத்திற்குப் பின்னரான காலப்பகுதிகளில் நெருங்கிய கண்காணிப்பு தேவைப்படுகின்ற தாய்மார்களின் தரப் பாதுகாப்பை வழங்குவதற்கு உயர் தீவிர சிகிச்சைப் பிரிவுகளை நிறுவுவதற்காக தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

5. பிரசவத்தின் போது திறனான பாதுகாப்பை செயற்படுத்த பிரசவ அறைகளுக்குத் தேவையான உபகரணங்கள் பெறுகை செய்யப்பட்டன. (உட்செலுத்தும் பம்பி)

6. கள மருத்துவமனைகளுக்கு HEAMOGLOBINO METERS களை வழங்குவதன் மூலம் குருதிச்சோகைக்கான களத் திரையிடல் சேவைகளானவை விரிவு படுத்தப்பட்டன.

7. கர்ப்ப காலத்திலான தொற்று நோய்களின் மீதான தாய் பாதுகாப்பு சேவை துறையானது வலுப்படுத்தப்பட்டது. உதாரணம் ; HYPERGLYCEMIA

8. நுண்போசனை நிரம்பல் - கர்ப்பினித் தாய்மார்களுக்கு Iron blister packs விருத்தி செய்யப்பட்டதரத்துடன் வழங்கப்பட்டன.

9. 2017 ஜனவரி முதல் நாடளாவிய ரீதியில் சிறு பராயத்தினருக்கு ஏற்படுகின்ற குருதிச்சோகையை அறிக்கையிடுவதற்காக குழந்தைகள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கான பல் நுண் போசனை நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

10. குடும்பத் திட்டமிடல் கள மருத்துவமனைகளுக்குத் தேவையான உபகரணங்கள் பெறுகை செய்யப்பட்டன.

11. வைத்தியசாலைகளில் உள்ள 22 கட்டிளமைப் பருவ மற்றும் இசைவான இளம் சுகாதார சேவைகள் நிலையங்கள் சீரமைக்கப்பட்டன. இந் நிலையங்களில் தொடர்பாடல் வசதிகள் விருத்தி செய்யப்பட்டன.

12. கட்டிளமைப் பருவ மற்றும் பால் நிலையை அடிப்படையாகக் கொண்ட வன்முறைகளுக்கு எதிரான 10 “மிதுரு பியஸ” நிலையங்கள் மேல்,மத்திய மற்றும் வடக்கு மாகாணங்களில் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டன.

13. பாடசலையில் பல சேவைகளுக்கு பல உபகரணங்கள் பெறுகை செய்யப்பட்டன.

சமூக விழிப்புணர்வு மற்றும் நடத்தை மாற்றம்

1. தாய்ப்பாலூட்டல் வாரமானது "தாய்ப்பாலூட்டல் நிலையான அபிவிருத்திக்கு திறவுகோல் ஒன்றாகும்." எனும் தொனிப் பொருளில் ஆகஸ்ட் மாதம் அனுஷ்டிக்கப்பட்டதுடன் கௌரவ சுகாதார அமைச்சரின் ஆதரவின் கீழ் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் தேசிய மட்டத்திலான பயிற்சிப் பாசறை இடம் பெற்றது.
2. பொது சுகாதார ஆளணியினருக்கு நிறைவாக உணவளித்தல் மீதான பொருட்கள்,கள சுகாதார ஆளணியினரால் நடத்தப்பட்ட நிறைவாக உணவளித்தல் வகுப்புக்களுக்கு குழுக்கள் பயன் படுத்தல் மற்றும் குணப்படுத்தும் பிரிவிலுள்ள பிணிதீர்க்கும் உணவுடனான கடுமையான போஷாக்குக் குறைவு முகாமைத்துவத்தின் மீதான சுலர் அட்டவணைகள் அச்சடிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டன.
3. பாதுகாப்பு மற்றும் நடைமுறையில் உள்ள முறைகள் தொடர்பாக சமூக விளிப்புணர்வை விருத்தி செய்வதற்காக குடும்பத் திட்டமிடல் IEC பொருள் விருத்தி செய்வதற்காக ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு

1. வலையமைப்பை அடிப்படையாகக் கொண்ட இனப் பெருக்க சுகாதார முகாமைத்துவ தகவல் முறையானது (eRHMIS)விருத்தி செய்யப்பட்டது.முதலாம் கட்டத்தின் போது பொது சுகாதார குடும்ப வைத்தியராலும் மருத்துவமனை மட்டத்திலும் தொகுக்கப்பட்ட தரவுகள் உள்ளீட்டுப் புள்ளி ஆகும். 25 மாவட்டங்களில் eRHMIS மீதான பயனர் பயிற்சித் திட்டமானது நடத்தப்பட்டதுடன் எல்லா மாவட்டங்களிலும் உள்ள சுகாதார ஆளணியினரை உள்ளடக்க உள்ளடக்கக் eRHMIS இன் பகுப்பாய்வு தொடர்பாக 3 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
2. செயற்பாட்டில் இருக்கின்ற தேசிய தாய் மற்றும் சிசு-குழந்தை இறப்புக் கண்காணிப்பு மற்றும் துலங்களுக்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டு ஜனவரி தாய்மாரின்நெருங்கிய கண்காணிப்பு தொடர்பான தேசிய முறைமை நிறுவப்பட்டது. 2016 இல் 25 மாவட்டங்களில் தாய்மார் இறப்பு விகித தேசிய மீளாய்வுகள் இடம் பெற்றதோடு கண்டு பிடிப்புக்கள் பரவலாக்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டு ஜூலை வரை 20 மாவட்டங்களில் ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. பிறப்புக் குறைபாட்டுத் தேசிய கண்காணிப்பு முறை ஆரம்பிக்கப்பட்டது.
3. கர்ப்பினித் தாய்மார்கள்,பிரசவ காலம், பிரசவத்திற்குப் பின்னரான காலம், புதிதாகப் பிறந்த குழந்தை ஆகியோரின் தரமான பாதுகாப்பினை விருத்தி செய்வதற்காக வைத்தியசாலையின் தாய் மற்றும் பிறப்பு சார்ந்த தகவல் முறைமையை விருத்தி செய்யப்பட்டது. மகப்பேறியல் BHT களானவை கெதுமதி,பானதுர வைத்தியசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு நாடளாவிய ரீதியிலும் ஆரம்பிக்கப்பட உள்ளது.
4. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் வினைத்திறன் மற்றும் பாதுகாப்பை விருத்தி செய்வதற்காகவும் சேவை வழங்குனர்களின் ஈடுபாட்டை அதிகரிப்பதற்கும் பெண்கள் நல சுகாதார சேவைகளின் வருடாந்த செயலாற்றுகை மதிப்பீடு நடத்தப்பட்டது.
5. பாடசாலைகள் சுகாதார மேம்பாடு சிறந்த செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் விருது வழங்கலானது கல்வி அமைச்சுடன் இணைந்து மேற் கொள்ளப்பட்டது.
6. குடும்பத் திட்டமிடல் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் வெளிவாரியான மறு ஆய்வு நடத்தப்பட்டு அதன் பெறுபேறுகள் வெளியிடப்பட்டன.
7. தேசிய மீளாய்வகள் 2016 ஆம் ஆண்டு ஆகும் போது 25 மாவட்டங்களில் இடம் பெற்றன. 2017 அம் ஆணடு ஜூலை வரை 20 மாவட்டங்களில் நறைவு செய்யப்பட்டன.

ஒவ்வொரு MOH பிரதேசத்தின் செயலாற்றுகை மீளாய்வானது மதிப்பிடப்பட்டு பிரச்சினைகளுக்கு பரிந்துரைகள் மேற் கொள்ளப்பட்டன.

கடந்த 5 வருட கால செயலாற்றுகைப் போக்கு

Indicator	2012	2013	2014	2015	2016
குறிகாட்டிகள்	37.7	32.5	32.0	33.7	N/A
தாய் இறப்பு விகிதம் – MMR (FHB data) 100,000 பிறப்புக்களுக்கு	6.8	6.5	6.2	6.59	6.00
1000 பிறப்புக்களுக்கு குழந்தை இறப்பு விகிதம் (FHB data)	9.2	8.8	8.6	9.16	8.45
குழந்தை இறப்பு விகிதம் (IMR) per 1000 LB	75.2%	75.4%	76.2%	77.07%	78.47%
வாரத்திற்கு முன்னரான தாய்மார்களின் கர்ப்ப கால பாதுகாப்புப் பதிவு %	99.9%	99.9%	99.7%	99.9%	99.9%
நிறுவனமயப்படுத்தப்பட்ட நிகழ்வுகள் %	6.0%	5.3%	4.9%	5.25%	4.8%
இளம் கருத்தரிப்பு விகிதம்	8.5% 16.3% 20.8%	8.7% 16.1% 20.4%	8.8% 16.0% 19.3%	6.94% 11.38% 16.97%	6.47% 14.25% 21.23%
% எடை குறைந்த பிள்ளைகள் 1-2 வருடங்கள் 2-5 வருடங்கள்	94.8%	93.4%	92.7%	96.68%	92.28%
SMI நடத்தப்பட்ட பாடசாலைகள் %	55.1%	55.4%	56.2%	55.93%	57.01%
குடும்பத திட்டமிடல் பாதுகாப்பு (நவீன முறைகள் பயன் படுத்தப் படல்)	7.3%	7.1%	6.8%	6.55	6.22

6.2.3 சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதார மேம்பாடு

இலங்யில் சுகாதாரக் கல்வி மற்றும் சுகாதார மேம்பாடு சுகாதார தகவல்களின் பொது விளம்பரம் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக உள்ள மையம் சுகாதார பணியகம் ஆகும். பணியகத்தின் செயற்பாடுகளானவை மருத்துவர்களின் ஆலோசனை சமூகம் பல்துறை ஆலோசனை சமூகம் ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் உள்ள 7 பிரிவுகளினூடாக ஒருங்கிணைக்கப்பட்டு நிறுவப் படுகின்றன. அவை பயிற்சி,மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு ,போஷாக்கு,குடும்ப சுகாதார தொடர்பாடற் பிரிவு, சுகாதார மேம்பாட்டுப் பிரிவு, நடத்தை மாற்றம் தொடர்பாடற் பிரிவு,வாய் சுகாதாரப் பிரிவு,திட்டமிடல் பிரிவு, பிரபல்யப் படுத்தும் பிரிவு என்பனவாகும்.

2016 ஆம் ஆண்டில் இருந்து 2017 ஜூன் வரையான பாரிய சாதனைகள்

பயிற்சி,மதிப்பீடு,ஆராய்ச்சிப் பிரிவு

“செபத” சஞ்சிகை உற்பத்தி, சுகாதாரப் பணியகம் மற்றும் சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர்களின் தொழில் வெற்றிக்கான உணர்வுர்வமான புலனாய்வு தொடர்பாக SLIDA பயிற்சி .

அடிப்படை உள வள ஆலோசனைத் திறன்கள் பயிற்சி தொகுதி விருத்தி



போஷாக்கு மற்றும் குடும்ப சுகாதார தொடர்பாடல் அலகு

தாய்மார்கள் ஆதரவுக் குழுக்களின் தேசிய மீளாய்வு- 3 ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தாய்மார்கள் ஆதரவுக் குழுக்களின் சிறப்பு செயலாற்றுகைக்கு அவை வெகுமதியளிக்கப்பட்டனர்.

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்பட்ட நிறைவாக உணவு வழங்கல் தொடர்பான வழிகாட்டல்கள்



சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் அச்சிடப்பட்ட நிறைவாக உணவு வழங்கல் மீதான சுவர் அட்டவணைகள்

பொது விளம்பரப் பிரிவு

பொது விளம்பரப் பிரிவானது, விஷேட சுகாதார தின நினைவு கூறல்களின் ஒரு பகுதியாக ஊடக விளக்கங்களையும் ஊடகக் கருத்தரங்குகளையும் திட்டமிடுவதோடு நடாத்துகின்றது. மற்றும் எல்லா சுகாதார நிறுவனங்களினதும் ஆலோசனை செயற்பாடுகளை எளிதாக்குகின்றது. கண்காட்சிகள்,பொது விளம்பர நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற பொது நிகழ்வுகளில் சுகாதார பணியகத்தின் வெவ்வேறு பிரிவினால் தயாரிக்கப்பட்ட பாதாதைகள்,பெனன்ட்கள் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் ஏனைய IEC பொருட்களை பொது மக்களுக்கு கிடைக்க்க் கூடியவாறு செய்தல்.

6.2.4 மனநல சுகாதார நிகழ்ச்சித் திட்டம்

சுகாதார அமைச்சின் விருத்தி செய்யப்பட்ட உட்கட்டமைப்பு, மனித வளங்கள் மற்றும் தேசிய மனநல சுகாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டின் ஊடாக மக்கள் சுகாதார சேவைகளை வலுப்படுத்தல், தந்திரோபாயத் திட்டமிடல், கொள்கை விருத்தி ஆகியவற்றுக்குப் பொறுப்பாக உள்ள தேசிய மையம் ஆகும். இவ் வகிபாகத்தை நிறுவுவதில் தொழில் துறைகள் , மாவட்ட சுகாதார அதிகார சபைகள், மற்றும் ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள்,சிவில சமூகம் மற்றும் நுகர்வோர் குழுக்கள் ஆகியவற்றின் நெருங்கிய ஒத்துழைப்பு வேண்டும்.

விஷேட நிகழ்ச்சிப் பட்டியல்

தாய்லாந்து நாட்டு சுகாதார அமைச்சின் மனநலப் பிரிவு பேராசரியரின் பங்கீட்டுடன் மனநல சுகாதார துறையில் உள்ள மனநிறைவு சிகிச்சை மற்றும் உளநல ஆலோசனை மீதான 3 நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமானது நடத்தப்பட்டது.

தேசிய மதுபான மற்றும் புகையிலைக் கட்டுப்பாட்டு அதிகார சபையின் ஒத்துழைப்புடன் தேசிய மதுபான மாநாடானது 2016.08.04 நடாத்தப்பட்டது. மாநாட்டின் தொனிப் பொருள் “மதுபானமற்ற இலங்கையை நோக்கி” என்பதாகும். இம் மாநாட்டின் பிரதான விடயம் மதுபானம் தொடர்பாக தேசிய கொள்கையை வெளியிடல் ஆகும்.

2016.10.10 திகதியன்று உலக மனநல சுகாதார தினத்தின் தொனிப்பொருளை பிரபல்யப் படுத்துவதற்காக கொண்டாடப்பட்டது. "எல்லோருக்கும் மனநல சுகாதாரத்தில் உள்ள மரியாதை,மனோதத்துவவியல் மற்றும் சுகாதார உதவி"

காலி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு இடையில் விவாதங்களை நடாத்தல்,பொலன்னறுவையில் தற்கொலையைத் தடுப்பதற்காக சித்திரப் போட்டி, கண்காட்சி மற்றும் தற்கொலை தடுப்பு தினத்தை அனுஷ்டிப்பதற்காக தேசிய மட்டத்திலான ஊடகக் கருத்தரங்குகள் 2016 செப்டம்பர் 10 "தொடர்பு படுக, உரையாடுக,பாதுகாக்குக' எனும் தொனிப் பொருளில் இடம் பெற்றது.

தொற்றா நோய்கள் பிரிவின் நடவடிக்கைகள் தொற்றா நோய்கள் கொள்கைகளின் பின்வரும் தந்திரோபாய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

6.2.5 தொற்றா நோய்கள் நிகழ்ச்சி

Promoting Yoga as a solution for daily exercises to reduce the risk of cardio vascular diseases

சேகரிக்கப்படும் இறப்பு விகித தகவல் பார்வையில் தொற்றா நோய்களினால் மருத்துவமனையில் இறப்பவர்கள் 68 ற்கு அதிகமாக இலங்கையில் உள்ள மொத்த வைத்தியசாலைகளிலும் இருதய நோய் புற்றுநோய் சுவாச நோய் மற்றும் பாரிசவாதம் என்பவை அதி கூடிய அளவில் மரணத்தை ஏற்படுத்துகின்றது இதில் இருதய நோயினால் இறப்பவர்கள் இரண்டாவதாகவும் 25.6 மற்றும் 9.4 சுவாச நோய் தொற்றா நோய்கள் பிரிவின் நோக்கம் அதிகரித்து வரும் தொற்றா நோய்களை தவிர்த்தல் வருமுன் பாதுகாத்தல் மற்றும் கட்டுப்படுத்தல். சேவையை விரிவு படுத்துவதன் மூலம் தொற்றா நோயின் கொள்கை சுகாதார

வாழ்க்கை முன்னேற்றுவதற்கு இயலாத தன்மையை குறைப்பதற்கும் இறப்பு வீதத்தை குறைப்பதற்கும் பருவமடையாதவர்கள் இறப்பு வீதத்தை குறைப்பதற்கும்
2016-2017 செயல்திறன் மற்றும் முன்னேற்ற அறிக்கையின் பங்குதாரர்கள் மற்றும் கூட்டு பங்குதாரர்களுக்கான மக்களிடையே சமூக பொருளாதார தாக்கம் பற்றிய இந்நாட்டு மக்களின் பாடம் தொற்றா நோய் பிரிவின் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவது தந்திரோபாய மூலங்களின் அடிப்படையில் தொற்றா நோய் கொள்கை மாற்றம் அவைகள் பின்வருமாறு

நீடித்த தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நிகழ்ச்சி

நீடித்த தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நிகழ்ச்சியின் நோக்கமானது, சான்றுகள் அடிப்படையிலான சிகிச்சைமுறை சேவைகள் மற்றும் தனியார் மற்றும் சமூக ரீதியில் சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றை விரிவுபடுத்துவதின் ஊடாக நீடித்த தொற்றா நோய்களினால் ஏற்படும் அகால மரணத்தை (70 வயதுக்கு குறைந்த) அடுத்த 10 வருடங்களில் ஆண்டுதோறும் 2% அபாய காரணிகளை குறைப்பதாகும்.

நீடித்த தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நிகழ்ச்சியின் பிரதான உத்திகள்

- சனத்தொகையில் தொற்றா நோய்களின் அபாய காரணிகளின் நிலையை குறைப்பதற்காக கொள்கைகள், ஒழுங்குமுறை மற்றும் சேவை வழங்கல் நடவடிக்கைகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதினால் நீடித்த தொற்றா நோய்த் தடுப்பிற்கு ஆதரவளித்தல்.
- இருதய நோய்கள் மீது சிறப்பு முக்கியத்துவம் அளிக்கும் சமுதாய மட்டத்திலான குறைந்த செலவில் தொற்றா நோய்கள் திரையிடல் நிகழ்ச்சி ஒன்றினை செயல்படுத்தல்
- உகந்த தொற்றா நோய்களின் பாதுகாப்பினை, இணைந்த மற்றும் பொருத்தமான குணப்படுத்தல், தடுத்தல் ,மறுசீரமைப்பு மற்றும் வலிநிவாரண சேவைகளை ஒவ்வொரு சேவை மட்டத்திலும் வழங்குவதற்கு சுகாதார அமைப்பை பலப்படுத்துவதின் மூலம் ஏற்பாடு செய்தல்
- தொற்றா நோய்களை தடுப்பு மற்றும் கட்டுப்பாடுக்காக ஆரோக்கிய வாழ்க்கை முறையினை மேம்படுத்துவதற்காக சமூகத்தினை வலுப்படுத்தல்
- தொற்றா நோய்களை தடுப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாட்டிற்காக மனிதவள மேம்பாட்டினை விரிவுபடுத்தல்
- நோய்கள் மற்றும் அபாய காரணிகளின் கண்காணிப்பு உட்பட தேசிய சுகாதார தகவல் அமைப்பினை மேம்படுத்தல்
- தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடுக்கு ஆய்வு மற்றும் அதன் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்துவதை மேம்படுத்தல்
- தடுத்தல் மற்றும் குணப்படுத்தல் ஆகிய இரு பிரிவுகளில் குறைந்த செலவினாலான சுகாதார தலையீடுகளுக்கு ஆதரவளிக்கும் நிலையான நிதி வழிமுறைகள் உறுதிப்படுத்தல்
- தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு முன்னுரிமை மற்றும் ஒருங்கிணைப்பை கொள்கைகளாக சகல அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் தனியார் பிரிவு நிறுவனங்களுக்கும் உயர்த்தல்

தொற்றா நோய்கள் திரையிடல் நிகழ்ச்சி

நோய்ச் சுமையினைக் குறைப்பதற்காக, தேசிய தொற்றா நோய்கள் கொள்கைகளுள் பிரதான அபாய காரணிகளின் ஆரம்பத்தில் கண்டறிதல் மற்றும் சுகாதார வழிகாட்டல் ஆகியவை உத்திகளாக இனங்கானப்பட்டுள்ளது. சமுதாய மட்டத்திலான தொற்றா நோய்கள் திரையிடல் நிகழ்ச்சி மற்றும் சமூகங்களில் ஆரோக்கிய வாழ்க்கை முறையினை ஏற்றுக்கொள்ள வலிவகுத்தல் ஆகியன செலவு குறைந்த உத்திகளாகும்.

3 உத்திகளை உள்ளடக்கி தொற்றா நோய்கள் பிரிவினால் தொற்றா நோய்கள் திரையிடல் நிகழ்ச்சி செயல்படுத்தப்பட்டது.

1. ஆரோக்கிய வாழ்க்கைமுறை நிலையங்களிலுள்ள மக்களுக்கு திரையிடல்
2. வேலைத்தள திரையிடலை மேற்கொள்ளல்
3. நடமாடும் திரையிடலை மேற்கொள்ளல்

சுகாதார அமைச்சு, சாதாரண மக்களுக்கு திரையிடுவதற்காக ஆரோக்கிய வாழ்க்கைமுறை நிலையங்களை நாடு பூராகவும் உருவாக்கும் ஒரு முயற்சியினை எடுத்துள்ளது. ஆரோக்கிய வாழ்க்கைமுறை நிலையங்களில் திரையிடுவதற்கான இலக்கு குழுவாக, 35 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதிற்கு இடையிலுள்ள மக்களை உள்ளடக்கிய குழு உள்ளது. திரையிடுவதற்கான பிரதான குறிக்கோள், நடத்தை மற்றும் ஒருங்கிணைந்த இரண்டினதும் அபாய காரணிகளை தொற்றா நோய்களினால் ஏற்படும் அகால மரணங்களை தடுக்கும் பார்வையில் முன்னரே கண்டறிதலாகும்.

அநேகமான சுகாதார அதிகாரிகளின் பிரதேசங்கள் அணுகுமுறையை மேம்படுத்துவதற்காக குறைந்தது இரண்டு ஆரோக்கிய வாழ்க்கைமுறை நிலையங்களை கொண்டிருக்கிறது

தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நிகழ்ச்சி 2016

- 2016 ஆம் ஆண்டுவரை ஆரம்ப சுகாதார பாதுகாப்பு நிறுவனங்கள், 35 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுள்ள மக்களுக்கிடையில் தொற்றா நோய்களின் ஆபத்தான காரணிகள் மற்றும் அகால மரணங்கள் என்பவற்றை முன்கூட்டியே திரையிடுதல் மூலம் அறியப்படுத்துவதற்காக 885 ஆரோக்கிய வாழ்க்கைமுறை நிலையங்களை நிறுவியது.
- சுகாதார அமைச்சு, இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ஆகியவை தொற்றா நோய்கள் தடுப்பிற்கு இளைஞர் அணிதிரட்டல் புரிந்துணர்வுக்கான நிருபம் ஒன்றை கைச்சாத்திட்டது. விரிவுரைகள் மற்றும் செயல்முறை அமர்வுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய இரண்டு நாட்கள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சிகள் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்டது.

"Mahajana Suwa Dhana" – Medical Exhibition promoting healthy life style

- புகைத்தல் பாதிப்பை குறைப்பதற்காக, வரி மற்றும் புகைத்தல் அபாயம் பற்றிய சுகாதார அறிவுறுத்தல்களை அதிகரித்தல் என்பவற்றினூடாக சுகாதார ஆபத்து பற்றிய உச்ச நிலை விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு துணை நிலை நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன
- தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நிகழ்ச்சி 2016-2020 மீதான தேசிய பன்முகப்பிரிவு செயற்றிட்டம் உரிய சகல பங்குதாரர்களின் பங்குபற்றலினூடாக ஆரம்பிக்கப்பட்டது
- தொற்றா நோய்களின் சர்வதேச இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் தொற்றா நோய்களின் இலக்குகள் இனங்கானப்பட்டன
- உள்ளக காற்று மாசடைதலை குறைக்கும் பயிற்சிப் பாசறை நடத்தப்பட்டது
- ஆரம்ப சுகாதார பாதுகாப்பில் (மொத்த ஆபத்து மதிப்பீடு அணுகுமுறை) தொற்றா நோய்களின் முகாமைத்துவக்கான வழிகாட்டல்களை திருத்தல் செயற்படுத்தப்பட்டது.
- ஆரம்ப சுகாதார பாதுகாப்பு நிறுவனங்களுடன் தொடர்புபட்ட மாகாண மற்றும் மாவட்ட மட்ட மருத்துவர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகளின் ஆரம்ப சுகாதார பாதுகாப்பு மட்டத்திற்கான பயிற்சியாளர்களின் பயிற்சி நிகழ்ச்சி தொற்றா நோய்கள் முகாமைத்துவத்தின் தேசிய வழிகாட்டல்களினால் நடத்தப்பட்டது
- ஆரோக்கிய வாழ்க்கை முறையின் முக்கியத்துவம் மீதான சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வருடாந்த உலக இதய தினம் மற்றும் உலக நீரிழிவு தினம் நினைவு விழாக் கொண்டாட்டப்படுகிறது.
- தொற்றா நோய்களின் ஆபத்தான காரணி குறைத்தலுக்காக தகவல், கல்வி மற்றும் தொடர்பாடல் பொருட்கள் அபிவிருத்தி மற்றும் சமூக சந்தைப்படுத்தல் உத்தி மேற்கொள்ளப்பட்டது.
- COMBI மீதான பயிற்சி பாசறைகள், சந்தைப்படுத்தல், பொது உறவுகள் மற்றும் ஆலோசனை, நிர்வாக அணிதிரள்வு, விளம்பரப்படுத்தல், ஆலோசனை அளித்தல், தனிப்பட்ட விற்பனை, சமூக அணிதிரள்வு, சுகாதார கல்வி, வெகுஜன தொடர்பு, பொது ஊடகம், சமூக வலைத்தளம், மற்றும் சந்தை தேடல் ஆகியவை விரும்பிய நடத்தை வெளியீட்டை கொண்டுவர மேற்கொள்ளப்பட்டன.
- மாவட்ட ரீதியில் தொற்றா நோய்களின் மருத்துவ அதிகாரிகள் (MOONCD) ஊடாக தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நடவடிக்கைகளை நிறுவுதல்
- ஏனைய அமைச்சுக்களிலுள்ள மேல் மற்றும் மத்திய மட்ட முகாமையாளர்கள், திணைக்களங்கள் மற்றும் அதிகார சபைகளுக்காக ஆரோக்கிய வாழ்க்கை முறை நிகழ்ச்சியினை மேற்கொள்ளல்

- சனத்தொகையில் உப்பின் நுகர்வினை குறைத்தல் , உப்பு குறைப்பு அபிவிருத்தி உத்திகள் நிறுவப்பட்டன.



- உரு: இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சுகாதார வாழ்க்கைமுநிறுவனங்களுடன் உள்ள மருத்துவ சுகாதார அதிகார பகுதிகளின் எண்ணிக்கை

தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நிகழ்ச்சியின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

1. பிரதான தொற்றா நோய்கள் காரணமாக நோயுற்ற தன்மை மற்றும் இறப்பு ஆகியவற்றின் போக்குகளை மதிப்பிடுவதின் மூலம் தொற்றா நோய்கள் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு நிகழ்ச்சியின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு நடத்தப்பட்டது. இது வழக்காக சேகரிக்கப்படும் நோயுற்ற தன்மை மற்றும் இறப்புத் தரம் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்வதன் மூலம் செய்யப்படுகிறது.
2. தொற்றா நோய்களுக்காக ஆபத்தான காரணிகளின் போக்கை மதிப்பீடு செய்தல். தொற்றா நோய்களின் ஆபத்தான காரணிகள் இடையிடை நிகழ்கின்ற ஆய்வுகள் பிரதானமாக STEP ஆய்வினை நடத்துவதுன் மூலம் செய்யப்படுகிறது. இறுதியாக STEP ஆய்வு 2014 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டதுடன் அடுத்த STEP ஆய்வு 2018 ஆம் ஆண்டில் திட்டமிடப்படும்.
3. தேசிய மற்றும் மாவட்ட அளவிலான மதிப்பாய்வுக் கூட்டங்களை நடாத்துதல். மத்திய அளவிலான மறு ஆய்வு கூட்டங்கள்
    - தொற்றா நோய்களின் வழிகாட்டும் குழு சந்திப்பு
    - தொற்றா நோய்கள் மீதான தேசிய ஆலோசனை குழு (தொ.நோ.மீ.தே.ச)
    - காலாண்டு ரீதியான அறுவை சிகிச்சை முறை (தொற்றா நோய்கள்) மறுஆய்வு கூட்டம்
    - மாவட்ட அளவிலான மதிப்பாய்வு கூட்டம்
    - காலாண்டு ரீதியான மறுஆய்வு கூட்டம்

சுகாதார அமைச்சின் காய தடுப்பிற்கான மைய புள்ளியாக தொற்றா நோய்கள் அலகு காணப்படுகிறது. இது பிறப்பிலிருந்து இறப்பு வரை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஒருவரின் வாழ்நாளில் ஏற்படும் அனைத்து வகை காயங்களையும் தடுக்கும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், வழிகாட்டல்கள் மற்றும் கொள்கைகளை மேம்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்குகிறது. இலங்கையில் வீடுகள், பாடசாலைகள், மற்றும் சாலைகள் உள்ள மக்களின் அன்றாட வாழ்க்கையில் காய தடுப்பு ஒருங்கிணைத்தலை கருத்தில் கொண்டு ஏனைய பங்குதாரர்களுடன் தொற்றா நோய்கள் பிரிவு நெருக்கமாக செயற்படுகிறது.

காயம் கண்காணிப்பு

- இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் உள்ள 15 தேர்ந்தெடுக்கப்பட்ட வைத்தியசாலைகளில் முன் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது
- காயம் கண்காணிப்பு திட்ட அமைப்பு தீர்மானிக்கப்பட்டது
- 2016 இலிருந்து இலங்கையிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் காயம் கண்காணிப்பு நிறுவப்படவுள்ளது
- மாதிரி காய மரண மறுஆய்வு வடிவம் வடிவமைக்கப்பட்டது

6.2.6 சுற்றுச்சூழல் மற்றும் தொழில்சார் சுகாதார அமைச்சு

சுகாதார அமைச்சின் சுற்றுச்சூழல் மற்றும் தொழில் சுகாதாரப் பிரிவு, சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் பிற நிறுவனங்களுடன் சுற்றுச்சூழல் சுகாதாரம் ,மத்திய மற்றும் பிராந்திய மட்டத்திலுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தல், சுற்றுச்சூழல் சுகாதார பிரச்சினைகள் பற்றி பொது சுகாதார ஊழியர்களுக்கு பயிற்சி அளித்தல், மாவட்ட மட்டத்தில் தொழில்சார் சுகாதார அலகுகளை நிறுவுதல், தொழில்துறை உட்பட இலக்கு வைக்கப்பட்ட உயர் இடர் குழுக்களுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி திட்டங்கள் ஆகியவற்றிற்கு பொறுப்பாகும்.

சுற்றுச்சூழல் சுகாதாரத்தில் முக்கிய பெறுபேறுகள்

அ. முக்கிய பெறுபேறுகளின் பட்டியல்

1. சுற்றுச்சூழல் சுகாதாரப் பிரச்சினைகள் மற்றும் தீர்வுக்கான செயல்நுணுக்க தெரிவுகள் மீது பயிற்றுவிக்கப்பட்ட பொது சுகாதார பணியாற் தொகுதியினர்
2. சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பான மேம்படுத்தப்படும் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் ஆரம்பிக்கப்பட்டன
3. மருத்துவமனையில் சுகாதார கழிவு மேலாண்மை நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டன
4. சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது

ஆ. மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

1. பொது சுகாதார பணியாற் தொகுதியினருக்கான சுற்றுச்சூழல் சுகாதாரம் தொடர்பான மாவட்ட மற்றும் மாகாண பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன (05 நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன - ஒவ்வொன்றிலும் பங்குபற்றியவர்கள் 40) . சுற்றுச்சூழல் சுகாதாரம், காற்று மாசுபாடு மற்றும் உடல்நல பாதிப்புகள், காலநிலை

மாற்றம் மற்றும் சுகாதார தாக்கங்கள், பேரழிவு மேலாண்மை, சுகாதார கழிவு மேலாண்மை, மற்றும் நீர் மாசுபாடு ஆகிய பகுதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

2. மருத்துவமனைகளுக்கிடையில் மெர்குரி மற்றும் எலக்ரானிக் கழிவு முகாமைத்துவ முறைமைகளை உருவாக்குதல்
3. சுற்றுச்சூழல் சுகாதார நிகழ்ச்சிகள் மற்றும் பிரச்சினைகள் மீதான உள்துறை ஒத்துழைப்பு
4. WB நிதி திட்டத்தின் செயற் திட்டம்/ II சுகாதாரப் பிரிவு மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றை தயாரித்தல்

தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

அ. முக்கிய பெறுபேறுகளின் பட்டியல்

1. தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மீது விழிப்புணர்வை ஏற்படுத்தல்
2. அடிமட்டத்தில் வேலை செய்பவர்களான சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொது சுகாதார மேற்பார்வையாளர்கள் (தடுக்கும் சுகாதார பணியாற் தொகுதியினர்) ஆகியோருக்கான சுற்றுச்சூழல் சுகாதாரம் மீதான புத்துணர்ப்பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. தகவல் துறை அத்தோடு ஸ்கேல் தொழிற்துறை தொழிலாளிகள் ஊடாக சுற்றுச்சூழல் சுகாதார பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்கு திட்டமிட்டப்பட்டுள்ளது.
3. சுற்றுச்சூழல் சுகாதாரம் மீதான விழிப்புணர்வு அம்பாறை மாவட்டத்தில் நகராட்சி கழிவு கையாளர்களான ஒதுக்கப்பட்ட மற்றும் சமூக ரீதியாக கீழான தொழிலாளிகளுக்கு சுற்றுச்சூழல் சுகாதாரத்தை ஊக்குவித்தல் மீது வேலையாட்களுக்கான பாதுகாப்பு பயிற்சிபாசறைகள் மேற்கொள்ளப்பட்டன

6.2.7 பெருந்தோட்ட மற்றும் நகர்புற சுகாதாரம்

இலங்கையில் பல்வேறு இன மற்றும் மத வேறுபாடுகளுடன் 21 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இலங்கையானது குறைந்த குழந்தை, தாய் இறப்பு விகிதம் மற்றும் நீண்ட ஆயுட்காலம் போன்ற நல்ல சமூக குறிகாட்டிகளைக் கொண்ட நடுத்தர வருமான நாடாகும். பெருந்தோட்டத்துறை மற்றும் நகர்புற சேரி போன்ற பல சவால்கள் உள்ளன. இம் மக்களின் வறுமை, பின்தங்கிய நிலை, மொழித்தடை அல்லது குறைவான கல்வியறிவு நிலை ஆகியவற்றால் பொது மற்றும் சமூக சேவைகள் அடைவது போதுமானதாக இல்லை.

பெருந்தோட்ட சனத்தொகை

சுகாதார ஊட்டச்சத்து குறிகாட்டிகள் இந்த மக்கட்தொகையில் தேசிய சராசரியை விட குறைவாகவே உள்ளன. DHs 2006 இன் படி, அவர்களில் 57.9% பேர் குறைந்த காற்றழுத்தத்துடன் கூடிய "லயம் அறைகளில்" வசிக்கின்றனர். 66.3% வீட்டிலேயே சுகாதார வசதி, 11% மட்டுமே குடிநீர் ஆதாரமும் 68% வீட்டுக்கு மின்சாரமும் உள்ளது (DHs 2006).
குறைந்த BMI<18.5 உடன் கூடிய பெண்கள் 33.3%, 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 40.2% வளர்ச்சி குறைந்தவர்கள், 30.1% குறைவான எடை உடையவர்கள் மற்றும் குறைந்த எடை பிறப்பு 31% ஆகும். 1000 குழந்தைகளுக்கு 29 குழந்தை இறப்பு விகிதம் மற்றும் 1000 பிறந்த குழந்தைகளில் 18 பிறந்த குழந்தை இறப்பு விகிதம், மற்றும் 18.3% திருமணமான பெண்களுக்கு (15-49 வயது) கல்வியறிவு இல்லை (DHs 2006).

கர்ப்பிணி தோட்ட ஊழியர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகள் நிர்வாகத்தின் லாரி மூலம் அருகிலுள்ள கிராமத்திலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகளின் கிளினிக்கு அனுப்பப்படுகிறார்கள். கடினமான நிலப்பரப்பில் தோட்டம் அமைந்துள்ளதுடன் துணை பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் சுகாதார மருத்துவ அதிகாரிகளின் கிளினிக்கில் கலந்துகொள்ள நீண்ட தூரத்திற்கு லாரி மூலம் பயணிக்க வேண்டும்.சில நேரங்களில் தோட்ட தொழிலில் ஈடுபடாத இரண்டாம் தலைமுறை தாய்மார்கள் இந்த சேவையை அறிந்திருக்கவில்லை. தங்கள் தினசரி ஊதியம் மற்றும் வருவாயை அடிப்படையாகக் கொண்டு பணம் செலுத்துவதன் காரணமாக கிளினிக்கில் தொடர்ந்து பங்குபற்றுவதற்கு முடியாதுள்ளது, இது அதிகமாக வீட்டு பிரசவத்திற்கும் (2.2%, இது 0.0%, 0.5% முறையே நகர மற்றும் கிராம பிரதேசங்களில்) மற்றும் மனநிலை மரணங்களுக்கும் இட்டுச்செல்கிறது.
அநேகமான பெருந்தோட்ட சனத்தொகையை கொண்டுள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் நிலையம் கடினமான நிலப்பகுதி சிக்கல்கள் மற்றும் பொருத்தமான வாகனங்கள் இல்லாமையினால் பெருந்தோட்ட மருத்துவமனைகளில் கிளினிக் நடத்த முடியாதுள்ளது. பெருந்தோட்டத்தில் தமிழ் மொழி பேசும் பி எச் ஐஐ மற்றும் பி எச் எம் இல்லாமையினால் மனநிலை சுகாதார சேவைகள், புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி, பாலியல் ரீதியான தொற்றுநோய்கள், காசநோய் திரையிடல்,தொழுநோய் முதியோர் மற்றும் ஊனமுற்றோர் ஆகிய தேசிய திட்டங்கள் பயனுள்ள முறையில் செயல்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது.

2007 ஆம் ஆண்டில் தோட்டத்தொழிலில் தடுப்பு சுகாதாரம் மாகாண சுகாதார அதிகாரத்தின் கீழ் அமைச்சரவை ஒப்புதலுடன் கொண்டுவரப்பட்டது. இருந்தபோதிலும் குணப்படுத்தும் சுகாதார ஏற்பாடு தேசிய சுகாதார சேவையுடன் நெறிப்படுத்தப்படவில்லை. அவை பெருந்தோட்ட முகாமையின் கீழ் உள்ளது மற்றும் மருத்துவ சிகிச்சைகளை வழங்கும் பெருந்தோட்ட மருத்துவ உதவியாளர் பெரும்பாலும் மருந்தாளுனர் தகுதிபெற்றவராவார். தற்போது 153 பெருந்தோட்ட மருத்துவ உதவியாளர்கள் பெருந்தோட்ட மருந்தகங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

6.2.8 நோய்த்தடுப்பு சேவைகள்

இப்பிரிவின் பிரதான பொறுப்பு, நாட்டினுள் நோய்ப் பரவல் தடுப்பு மூலம் இலங்கையை பாதுகாக்க மற்றும் சர்வதேச நோய்ப்பரவல் மற்றும் குறிப்பாக சர்வதேச போக்குவரத்து மற்றும் வர்த்தகம் தொடர்பாக தேவையற்ற இடையூறுகளை நீக்குவதன் மூலம் சர்வதேச தொடர்புடைய பொது அவசர சுகாதாரம் உட்பட ஏனைய பொது சுகாதார பிரச்சினைகளை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் மற்றும் பாதுகாத்தல்.
இலங்கை வரலாற்றில் தொற்று நோய்களின் அறிவிப்பானது 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை காணப்படுகிறது. நாட்டில் தொற்று நோய்கள் மீதான அறிவிப்பு முறை நிறுவலுக்காக 1897 ஆம் ஆண்டு நோய்த்தடுப்பு மற்றும் அவசர நோய்கள் தடுப்பு ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டன. இலங்கையும் சட்ட பூர்வமாக சர்வதேச சுகாதார ஒழுங்குமுறை - 2005 ஏனைய உறுப்பு நாடுகளுடன் சர்வதேச நோய்ப்பரவல் மற்றும் பொது சுகாதார பிரச்சினைகள் குறிப்பாக சர்வதேச தொடர்புடைய பொது அவசர சுகாதாரம் தொடர்பாக பாதுகாத்தல், தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றை நிறுவுவதற்கு இணங்கியுள்ளது.

நோய்த்தடுப்பு பிரிவுகளின் கீழ் பின்வரும் பரவலாக்கப்பட்ட அலகுகள் செயற்படுகின்றன

- துறைமுக சுகாதார அலுவலகம், கொழும்பு துறைமுகம்
- எம் ஐ ஆர் இல் துறைமுக உதவி சுகாதார அதிகாரியின் அலுவலகம் (தடுப்பூசி மட்டும்)
- விமான நிலைய சுகாதார அதிகாரி, கட்டுநாயக்க
- காலி துறைமுக சுகாதார அதிகாரிகள்
- இராஜபக்ஷ சர்வதேச துறைமுக விமான நிலைய சுகாதார அதிகாரி-அம்பாந்தோட்டை
- துறைமுக சுகாதார அலுவலகம்- மாத்தளை
- துறைமுக சுகாதார அலுவலகம்- திருகோணமலை

2016 மற்றும் 2017 இன் முற்பகுதியில் பெறுபேறுகள் / சிறப்பு நிகழ்ச்சிகள்

நோய்த்தடுப்பு பிரிவின் முக்கிய அபிவிருத்திகள்

- மலேரியா பரவியுள்ள நாடுகளிலிருந்து வரும் மக்களுக்காக ,ப.ச.வி கட்டுநாயக்க விமான நிலைய சுகாதார அலுவலகத்தில் 24 மணித்தியால சுகாதார மேசையில் “ மலேரியா திரையிடல்” அறிமுகப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது.
- எல்லை சுகாதார பயிற்சிகளை மேம்படுத்துவதற்கு தரமான செயல்பாட்டு முறைகளை மேம்படுத்தல்
- வரையப்பட்ட சட்ட கட்டமைப்பு, தற்போதைய சட்ட கட்டமைப்பு, தின பயிற்சிகள், செயல்முறைகள், எல்லை சுகாதார முகாமைத்துவக்கான கடமைகள் மற்றும் அமைப்புகள். 2016 ஆம் ஆண்டின் நோய்த்தடுப்பு திட்டத் திருத்தங்களுக்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.
- 2016 இல் துறைமுகங்கள் மற்றும் விமான துறைமுகங்களுக்கான பொது சுகாதார அவசர தயாரிப்பு அட்டவணையின் மேல்புற மறு ஆய்வு கூட்டம் மேற்கொள்ளப்பட்டது
- 2017 இல் பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பொது அவசர சுகாதார தயாரிப்பின் செயற்பாட்டு திட்டம் மேற்கொள்ளப்பட்டது
- 2016 இல் கடல்துறை விமான துறை ஊழியர்களுக்கிடையில் காலாண்டி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நிறுவப்பட்டது
- தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தயாரிப்பு திட்டங்களுக்கான துறைமுக மற்றும் விமான துறையின் பயிற்சிபெற்ற பணியினர் தொகுதி சுகாதார அலுவலகங்கள்
- துறைமுக மற்றும் விமான துறையின் சுகாதார பணியினர் தொகுதி அலுவலகங்களுக்கு தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை வழங்கல்
- எச்.ஐ.ஆர் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பிற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தலைமையின் கீழ் தேசிய சுகாதார அமைச்சு குழுவை 2016 இல் நிறுவியுள்ளனர்
- எச்.ஐ.ஆர் 2005செயற்பாட்டு நிலையை ஒருங்கிணைத்து , நாட்டிலுள்ள சுகாதார மற்றும் சுகாதாரம் அல்லாத துறைகளில் உள்ள பல பங்குதாரர்களுடன் மற்றும் உலக சுகாதார நிறுவனங்களின் 2017 ஜூன் மாத குறிக்கோள் ஆகியவற்றை மேற்கொள்ளல்
- 2011 ஆம் ஆண்டில் அமைச்ச ரவையினால் அங்கீகரிக்கப்பட்ட குடியேற்ற சுகாதார கொள்கையுடன் நீண்ட கால வீசா வைத்திருப்பவர்களுக்கு உள்நோக்கிய சுகாதார மதிப்பீட்டிற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்தல்

கடந்த ஐந்து வருட செயற்பாட்டின் போக்கு





6.2.9 இளைஞர்கள், இடம்பெயர்ந்த முதியோர்கள் மற்றும் முடக்கப்பட்டவர்களுக்கான பராமரிப்பு

இந்த நிகழ்ச்சியின் பிரதான நோக்கம், சுகாதார வசதிகள், நோய்த்தடுப்பு மற்றும் சுகாதார அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்துவதின் மூலம் இளைஞர்கள்,இடம்பெயர்ந்த முதியோர்கள் மற்றும் முடக்கப்பட்டவர்களுக்கான மேம்படுத்தப்பட்ட சுகாதார சேவைகளை வழங்குவதாகும்

சாதனைகள்

- முதியோர் நட்பு வசதிகளை வழங்குவதற்காக திருகோணமலை பொ.சு.வை, அம்பாறை பொ.சு.வை, அனுராதபுர போதனா வைத்தியசாலை , சிலாப பொ.சு.வை ஆகியவற்றில் வார்டுகள், கிளினிக்குகள், கழிவறைகள் புதுப்பிக்கப்பட்டதுடன் 7.1 மில்லியன் ரூபா செலவில் உபகரணங்களை கொள்வனவு செய்யப்பட்டது.
- ஹந்தலையில் நவீன முதியோர் பராமரிப்புப் பிரிவை ஸ்தாபிப்பதற்கு 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.
